கோகுலம்

GOKULAM மார்ச் '96

ரூ. 5.00



வீட்டைச் சுமக்கும் ஆமையே
வாடகை என்ன சொல்லிவிடு!

உருவாகும் இந்திய பெண்மணிக்கு

கிருஹலக்ஷ்மி

யூனிட் ப்ளான்

18 வயதுக்கு மேற்பட்ட பெண்மணிக்காகவே சிறப்பாக உருவாக்கப்பட்ட திட்டம்:

உங்கள் மகளுக்கு, தங்கைக்கு, மருமகளுக்கு, பேத்திக்கு மற்றும்

உங்கள் அன்புக்கு உட்பட்ட எந்த பெண்மணிக்கும், ஏன் உங்களுக்கும் கூட.

சிறப்பம்சங்கள் :

- குறைந்தபட்ச வைப்பு ரூ. 5000 அல்லது அதற்கு மேல் ரூ.1000 மடங்குகளில். உச்ச வரம்பு இல்லை.
- 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மகளிருக்கான எந்த ஒரு தனிநபர் அல்லது இந்து கூட்டுக்குடும்பம் முதலீடு செய்யலாம். 18 வயதிற்கு மேற்பட்ட எந்த ஒரு பெண்ணும் தனக்காக முதலீடு செய்யலாம்.
- முதல் வருடத்திற்கு டிவிடெண்ட் கிடையாது. வருடாந்தர டிவிடெண்ட் 2-வது வருடம் முதல் ஆரம்பமாகும். உதாரணமாக அக்டோபர் '95-ல் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் டிவிடெண்ட் ஜூலை '97 முதல் வழங்கப்படும்.
- மூன்று வருடம் கழித்து எந்த சமயத்திலும் என் ஏ வி அடிப்படையிலான திரும்ப வாங்கும் விலையில் பணத்தைத் திரும்பப் பெறும் வசதி.
- மூலதன மதிப்புயர்வுக்கான வாய்ப்பு.
- இத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின்மேல் ரூ.13,000 வரை பிரிவு 80-L-ன் வரையறைக்குள் வரிச்சலுகை.
- வழக்கமான கிஃப்ட் வரிச்சலுகை ரூ.30,000 வரை மற்றும் ஒருவரை சார்ந்துள்ள மங்கையருக்கு அவருடைய திருமணத்தின்போது ரூ. 1 இலட்சம் வரை கொடுக்கப்படும் பரிசுத்தொகைக்கு வரிச்சலுகை.
- நிதிச்சட்டம் 1995-ன்படி டிவிடெண்ட் வருமானத்திலிருந்து மூலத்தில் வரி பிடித்தம்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு


அனைத்து பரஸ்பர ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவைகளாகும். மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டை பாதிக்கும் அம்சங்கள் மற்றும் ஆட்சித்திறம் பொறுத்து திட்டங்களின் என்ஏவி ஏறிடவும் இறங்கிடவும் செய்யும். கடந்தகால செயல்பாடுகள் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுபவை அல்ல. கிருஹலக்ஷ்மி என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே. மற்றும் திட்டத்தின் தரத்தையோ அதன் எதிர்கால வளர்ச்சியையோ அல்லது வருமானத்தையோ எவ்விதத்திலும் சுட்டிக்காட்டுவது ஆகாது. தயவு செய்து முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.

கிளை அலுவலகங்கள்: • **சென்னை.** போன்: 517101, 517190

• **மதுரை.** போன்: 38186 • **திருச்சி.** போன்: 27060 • **கோயம்புத்தூர்.** போன்: 214973.

0136 C/95 M TM



கோகுலம்


மார்ச் '96

மலர் : 14

இதழ் : 2

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்.
— பாரதியார்





அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். ஆண்டுத் தேர்வை எழுதிக் கொண்டிருக்கிறீர்களா? இல்லை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? எப்படி இருந்தாலும் நீங்கள் தான் கோகுலத்தின் வாசகர்களாயிற்றே? திட்டம் போட்டுப் படித்திருப்பீர்களே?

'புவனா தேடிய புதையலில்', மர்ம முடிச்சுகள் ஒவ்வொன்றாக அவிழத் தொடங்கி விட்டன. கடைசி வரை விறுவிறுப்புக் குறையாமல் இருக்கும் என்பதை மட்டும் உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன்.

போன இதழ் தலையங்கத்தில் கோகுலத்திற்காக சிறுவர் சிறுமியரைப் பேட்டி கண்டு எழுதுவதில் ஆர்வமுடையவர்களைத் தொடர்பு கொள்ளச் சொல்லி ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தேன். இதற்கு ஏராளமானவர்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இவை பரிசீலனையில் உள்ளன.

மார்ச் மாதம், குழந்தைகள் மனதிலும், நாவிலும் என்றும் நிறைந்திருக்கும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் நினைவு நாள் ஆயற்றே? அவரது நினைவைப் போற்றும் வகையில் ஒரு கட்டுரை வெளி வருகிறது.

அடுத்த இதழில் கோடை விடுமுறைப் போட்டிகள் வழக்கம் போல வெளிவரும். உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

அன்புடன்


ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

1996 மார்ச் மாத இதழ்

இந்த இதழில்





The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV


1. Place of Publication	:	Madras
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	D-38, Nelson Chambers, 115, Nelson Manickam Mudaliar Road, Aminjikarai, Madras - 600 029.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034.
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


1.3.1996

K. Rajendran
Publisher




பறவை இட்ட சாபம் - பக்கம் 41





காட்டில் கலப்படம்! - பக்கம் 81

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற முதல் கதை



பத்து ரூபாய் நோட்டு!


என். கணேஷ் குமார்

நம்பிக்குப் பிள்ளையாரிடம் அபாரமான பக்தி. அவன் வீட்டுக்கு அருகேயே ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அடிக்கடி அங்கே போவான். பக்தியுடன் கும்பிடுவான். தன் தெருவைத் தாண்டி மற்ற இடங்களுக்குப் போகும் போதும் சரி, வெளியூர்களுக்குப் போனாலும் சரி, எங்கே பிள்ளையார் கோவிலைப் பார்த்தாலும் நம்பி விடமாட்டான். நேரம் இருந்தால் உள்ளே போய் மூன்று சுற்று வலம் வருவான். அப்படி முடியா விட்டால், கன்னத்தில் போட்டுக் கொண்டாவதுதான் அந்த இடத்தை விட்டு நகருவான். அவ்வளவு பிள்ளையார் பக்தி.

அன்று பக்கத்து ஊரில் இருக்கும் நண்பனைப் பார்த்து விட்டு நம்பி திரும்பிக் கொண்டிருந்தான். அது புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் குடியிருப்பு. அங்கே ஒரு சின்னப் பிள்ளையார் கோவில் உருவாகிக் கொண்டிருந்தது. நம்பி சும்மா விடுவானா?

'பிள்ளையாரப்பா, இத்தனை எளிமையாக இருக்கிறாயே!' என்று மகிழ்ச்சியோடு கூறினான். தலையில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டான். ஒன்பது சுற்று சுற்றி வந்தான்.

வெளியே வந்த நம்பியின் காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தான். நான்காக மடிக்கப்பட்ட பத்து ரூபாய்த் தாள் ஒன்று! குனிந்து எடுத்தான். யாராவது தொலைத்து விட்டுத் தேடுகிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. இதை என்ன பண்ணுவது? நம்முடையது இல்லை, என்பது உறுதி, யாரும் தேட வில்லை என்பதும் உறுதி. நம்பி ஒரு முடிவுக்கு வந்தவனாக அந்தப் பத்து ரூபாயை எடுத்துக் கோவில் உண்டியலில் போட்டு உள்ளே தள்ளித் தட்டினான். மறுபடி மூன்று சுற்றுச் சுற்றினான். கோவிலை விட்டுக் கிளம்ப



இருந்த போது ஒரு பெரியவர், தரையெல்லாம் பார்த்தபடி எதையோ தேடிக் கொண்டு வந்தார்.

நம்பி அவரிடம் விசாரித்தான்.

"ஒரு பத்து ரூபாயைத் தவற விட்டுட்டேன் தம்பி. எங்கேன்னு தெரியலே. இங்கேயும் வந்தேன். அதான் தேடறேன்."

"நோட்டு எப்படி இருக்கும்?"

"நாலாக மடிக்கப்பட்டிருக்கும்."

"இங்கேதான் கிடந்தது. நான்தான் எடுத்தேன். யாரும் தேடி வரலையேன்னு இப்பத்தான் கோவில் உண்டில போட்டேன்."

"தமபி. ரொம்ப அவசரப்பட்டுட்டியே! அது என்னுது. கடன் வாங்கியது. கொஞ்சம் பொறுத்திருக்கக் கூடாதா?" – பெரியவர் கண் கலங்கினார்.

"கவலைப்படாதீங்க. என்னிடம் வேற ரூபாய் இருக்கு. தரேன்" என்று பையில் இருந்து பத்து ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்தான் நம்பி. அது அப்பா அவனுக்குக் கொடுத்த பாக்கெட் மணி.

பெரியவர் நம்பியை வாழ்த்திவிட்டுப் போனார். நம்பியும் கிளம்ப எண்ணிய போது கைலி கட்டிய ஒரு முரடன் வந்தான்.

"தம்பி, இங்க ஒரு பத்து ரூபாய் நோட்டைத் தவறவிட்டுட்டேன். நீதான் நான் போகும் போது எதிரே வந்தே. வேற யாருமே வரலை. அதனால் நீதான் அதைப் பார்த்து எடுத்திருக்கணும். பணத்தைக் கொடுத்திடு" என்று முரடன் நம்பியின் சட்டையைப் பிடித்து மிரட்ட, நம்பி திகைத்துப் போய் நின்றான்!

கரும்பு

கரும்பு நல்ல கரும்பு
கணுக்கள் உள்ள கரும்பு
கருப்பு வண்ணக் கரும்பு
கடித்தால் இனிக்கும் கரும்பு.
பொங்கல் அன்று வீட்டில்
பெருமை தேடிக் கொள்ளும்
வெல்லம் சீனி என்று
வேடம் போடும் கரும்பு!

— என். ராஜலட்சுமி, மேலப்பாதி.



பாட்டியின் கிராமம்!



பள்ளி விடுமுறை வந்ததுமே
பாட்டி கிராமம் சென்றிடுவேன்.
பசுமை கொஞ்சும் புல்வெளியில்
பனித்துளி உறங்கக் கண்டிடுவேன்.
கவின்மிகு இயற்கைக் காட்சிகளை
கண்டே கவலைகள் மறந்திடுவேன்.
குளத்து நீரில் குளித்திடுவேன்
குட்டி மீன்கள் பிடித்திடுவேன்.
பாட்டியின் சொற்படி கேட்டிடுவேன்
பணிவுடன் நற்பெயர் பெற்றிடுவேன்!

— நா. மல்லிகா, மேட்டூர் அணை - 1

படிக்க வாரீர்!

பள்ளி வயது ஐந்தாச்சு
படிக்க வாரீர் பாலர்களே!
பள்ளி சேரும் கால மிது
பண்பை வளர்க்கும் நேரமிது.
எண்ணும் எழுத்தைக் கற்றிடுவீர்
ஏற்றம் வாழ்வில் பெற்றிடுவீர்
கண்ணும் கருத்தாய் அறிந்திடுவீர்
கல்வி கற்க விரைந்திடுவீர்.
படிக்கும் முன்னால பாம்பாகும்
படித்த பிண்பு துரும்பாகும்
படிக்கப் படிக்கக் கரும்பாகும்
படித்த பிண்பு புகழாகும்.
பெற்றோர் நெஞ்சம் மகிழ்ந்திட
பெரிய மனிதர் ஆகிட
கற்றோர் உன்னைப் புகழ்ந்திட
கற்போம் வாரீர் பாலர்களே!

— கு. காளிமுத்து, வல்லம்.




கடலே!

கண்ணுக்கு அழகாய் இருக்கின்றாய்
கவலைக்கு மருந்தாய் சிரின்றாய்.
விண்ணைத் தொலைவில் தொடுகின்றாய்
வியந்திட அலைக்கரம் வீசுகிறாய்.
உப்பு நீரைத் தேக்குகிறாய்
ஊருக்கு மழையைத் தருகின்றாய்.
கப்பலை ஏந்திச் செல்கின்றாய்
கவிஞர் மனதில் உறைகின்றாய்.
மீனினம் பெருகிட இடமளித்தே
முத்துகள் மிளிர்ந்திட உதவுகிறாய்
மீனவர் குலத்தை வாழவைத்தே
மாந்தர் உணவைத் தருகின்றாய்!

— மணிதாசன், திருச்சி -- 21.



விளாம் பழம்



உலக வடிவம் கொண்டது-
உருண்டை உருவம் ஆனது
எளிதில் எங்கும் கிடைப்பது
எமக்கு மருந்தும் ஆவது.
பிள்ளை யாரும் விருப்பமாய்
பண்டி கையில் ஏற்பது.
விளாம் பழம் என்பதை
விடையென நானும் சொல்லவோ?

— ஆர். புனிதா, சென்னை - 41.

நிலவைப் பார்!

நிலவைப் பாரு நிலவைப் பாரு
நீலவானில் நிலவைப் பாரு.
இரவில் தோன்றும் நிலவைப் பாரு
எல்லை இல்லா நிலவைப் பாரு.
குளுமை தரும் நிலவைப் பாரு
குட்டி முயல் அழகைப் பாரு!
ஒளியை வீசும் நிலவைப் பாரு
ஓடித் திரியும் நிலவைப் பாரு!

— கே.ஜே. ஜெயஸ்ரீ, கோவை - 7.



மரம் வளர்ப்போம்!



மன்னிப் பென்னும் செயலாலே
மக்கள் உள்ளம் மலர்ந்திடுமே!
மன்னுல கத்தின் மக்களிடம்
மனத்துள் பகைமை அழிந்திடுமே!
மரத்தை வெட்டும் மனிதனுக்கு
மரமே நிழலை மறுத்திடுமோ!
வருத்தும் பசிக்குக் கனிகளையும்
வழங்குவ தன்றோ அதன் குணமாம்!
பள்ளம் வெட்டும் ஒருவனுக்கும்
பழிஎண் ணாமல் வீடுதரும்
உள்ளம் கொண்ட நிலத்தினைப் போல்
உலகில் வாழ்தல் நலமன்றோ?

— டி.எஸ். கிருஷ்ணன்.

பாரதி



முத்து முத்து பாரதி!
முறுக்கு மீசை பாரதி;
வெள்ளைக் கார எதிரியை
விரட்டி அடித்த பாரதி!
நெஞ்சு நிமிர்ந்த பாரதி;
நெருப்பு வார்த்தை பாரதி!
உயர்ந்த வாழ்வு வாழ்ந்திட
உரைத்துச் சென்ற பாரதி!
உலகில் அனைத்து உயிர்களும்
ஒன்று என்று சொன்னவன்
உண்ணும் உணவைப் பங்கிட்டே
உண்ணச் சொன்ன பாரதி.
தெய்வம் உண்டு துணையென
தெளிந்து சொன்ன பாரதி
தேசம் நமது கண்ணெனத்
தெரிந்து சொன்ன பாரதி!

— கோவை வளர்கவி.

பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வாசம் மிக்க பூக்கள்
எண்ணி முடிக்க இயலா
எத்தனை வகைப் பூக்கள்!
தேன் நிறைந்த பூக்கள்
தொடுக்க அழைக்கும் பூக்கள்
மனதை மயங்க வைக்கும்
மாய வண்ணப் பூக்கள்!
சின்னச் சின்னப் பூக்கள்
சிமிட்டும் வண்ணப் பூக்கள்
தன்னைத் தலையில் சூட
தூது செல்லும் பூக்கள்!

— எம்.என். பஜீலுதீன், காரைக்கால் - 14.



வேண்டுமென்றே...

வாண்டுதாசன்

மணிகண்டன், மதிப்பெண் பட்டியலை நீட்டினான். "அப்பா இதோ பிராக்ரஸ் ரிப்போர்ட். இதில் கையெழுத்துப் போட்டுக் கொடுங்க"

மகிழ்ச்சியோடு அதை வாங்கிப் பார்த்த அப்பா அதிர்ந்து போனார்.

''டேய் மணி! என்னடா இது? வழக்கமா முதல் மூன்று ரேங்குகளில் இருப்பே. இப்போ இருபதாவது ரேங்க் எடுத்திருக்கே! என்னடா ஆச்சு?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டார்.

மணிகண்டன் பத்தாம் வகுப்பு படிக்கிறான். படிப்பிலும், விளையாட்டிலும் சூரப்புலிதான். அப்படிப்பட்டவன் இப்போது இருபதாவது ரேங்க் எடுத்திருக்கிறான் என்றால் யாருக்குத்தான் அதிர்ச்சியாய் இருக்காது.

"வேண்டுமென்றேதான் அப்படி எடுத்தேன்!" என்றான் மணிகண்டன்.

"மணி, என்னடா சொல்றே? வேண்டுமென்றே செய்தாயா! ஏன்?" என்று குழப்பத்துடன் கேட்டார் அப்பா.

"அப்பா, இது மாதாந்திரத் தேர்வுதானே? இதில் எவ்வளவு எடுத்தாலும் என்ன பயன்? முழு ஆண்டுத் தேர்வின் மதிப்பெண்களைத்தானே சான்றிதழில்



குறிக்கப் போறாங்க? இது வேஸ்ட்தானே? இதற்காக நிரைய எழுதி பேப்பர், இங்க்கை செலவு செய்யணுமா? அதனால் தான் ஒவ்வொரு பாடத்திலும் ஆறு ஏழு கேள்விகளுக்கு மட்டுமே விடை எழுதினேன்" என்றான் மணிகண்டன்.

அப்பா அதிர்ந்து போனார். "என்னடா சுத்த பேத்தலா இருக்கு! நாமென்ன பேப்பர் வாங்கக் காசில்லாமலா இருக்கோம்? எவ்வளவு பேப்பர் வேண்டுமென்றாலும் நான் வாங்கித் தரேன்" என்றார்.

"அட போங்கப்பா. நீங்க சுலபமா வாங்கித் தந்துடுவீங்க. நான் தானே கைவலிக்க எழுதணும்?" என்றான் மணிகண்டன் அலட்சியமாக.

"மணி, எழுதறது மதிப்பெண் வாங்க மட்டுமில்லே. வேகமாக எழுதுவதற்கான பயிற்சியும்தான். தவிர, ஒருமுறை எழுதுவது பத்து முறை படிப்பதற்குச் சமம்" என்றார் அப்பா.

"உங்களுக்கென்ன சுலபமா சொல்லிட்டீங்க" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு விளையாடச் சென்று விட்டான் மணிகண்டன்.

அப்பா திகைத்துப் போய் அமர்ந்திருந்தார். என்ன ஆயிற்று இவனுக்கு? இவனை இப்படியே விடக் கூடாது. உடனடியாகத் திருத்த வேண்டும். அடித்தால் இன்னும் அதிகமாக அலட்சியப் படுத்துவான். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். இவன் வழியிலேயே சென்று இவனைத் திருத்த வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு அம்மாவை அழைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்.



மணிகண்டன் விளையாடி விட்டு வீட்டிற்கு வந்தான். சிறிது நேரம் படித்தான்.

"மணி படித்தது போதும், வா சாப்பிடலாம்" என்று அழைத்த அப்பா, "சாப்பாடு ரெடியா?" அன்று அம்மாவைக் கேட்டார்.

"சாப்பாடா! இன்னைக்கு சமைக்கலை. இனிமே தினமும் ராத்திரியில் சாப்பாடு கிடையாது" என்றாள் அம்மா.

"ஏன்...? ஏன் கிடையாது...?" என்றான் மணி. விளையாடிக் களைத்திருந்தவனுக்கு படிக்கும்போதே பசி பொறுக்கவில்லை.

"காலையில் சாப்பிடறது ஆபீஸில் வேலை செய்யறதுக்கு. அதே மாதிரித்தான் பகலில் சாப்பிடறதும். ராத்திரியில் சும்மா தூங்கத்தானே போறோம்? எதுக்கு வீணா சாப்பிடணும்?" என்றாள் அம்மா.

"இது முட்டாள்தனம்" என்றான் மணி கோபமாக.

அம்மா இரவு உணவைச் சமைக்கவில்லை என்பதே அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. பசியால் அழுகை வேறு வந்தது.


அப்பா இதைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே! அவருக்குப் பசிக்கவில்லையா?

"நீ கை கால் வலிக்கச் சமைக்கறே. இப்படிச் செய்யறதால் அரிசியும், பருப்பும் மிச்சம் ஆகும். நீ சொல்றதும் நியாம்தான்" என்றார் அப்பா அம்மாவுக்கு ஆதரவாக.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மணிகண்டன் பசி தாளாமல் ஓவென்று அழுது விட்டான்.

"அப்பா, அம்மா நீங்க என்ன சொல்ல வர்றீங்க என்று புரியுது! என் நண்பன் சொன்ன பேச்சைக் கேட்டு இப்படிச் செய்துட்டேன். என்னை மன்னிச்சுடுங்க. அடுத்த பரீட்சையில் முதல் ரேங்க் வாங்குறேன்" என்றான்.

"அழாதே மணிகண்டா. உன்னைத் திருத்தத்தான் இப்படி நாடகமாடினோம். பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் ஜொலிக்கும். அதுபோல படிக்கப் படிக்க, எழுத எழுதத்தான் அறிவு வளரும். இதை உன் நண்பனுக்கும் எடுத்துச் சொல். இப்போது வா சாப்பிடலாம்" என்ற அப்பா அவனை அணைத்துக் கொண்டார்.



ஒரே பெயரில் எழுதாதே!

எழுதும் ஆற்றல் கொண்ட மாணவர்களுக்கு ஊக்கமளித்து, சிறுவர்களுக்காக எழுத வைத்த பெருமைக்கு உரியவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்.

ஒருமுறை அவரால் பட்டை தீட்டப்பட்ட ஓர் எழுத்தாளர் எழுதிய பெரியவர்க்கான சிறுகதை ஒன்று, பிரபல வாரப் பத்திரிகை நடத்திய போட்டியில் பரிசு பெற்றது. அந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூறி, குழந்தைக் கவிஞரின் வாழ்த்தைப் பெற எழுத்தாளர் விரைந்தார்.

சிற்றுண்டி சாப்பிட்ட பிறகு. "கதையைப் படித்தேன். மிக நன்றாக இருக்கிறது" என்று கவிஞர் பாராட்டினார். விஷயம் அத்தோடு முடியவில்லை.

கவிஞர் வீட்டில் குழந்தைகள் நிறைந்திருப்பார்கள். அவர்களில் ஒருவனை அழைத்த கவிஞர், "இந்தப் பையன் என்ன கூறுகிறான் என்று கேளுங்கள்?" என்றார். எழுத்தாளர், அவனுடன் சிறுவனை நோக்கினார். "உங்க பேர் போட்டிருந்தது. சரி, எங்களுக்குத்தான்னு கதையைப் படிச்சா, பெரியவங்களுக்கு எழுதியிருக்கீங்களே!" என்று கூறிவிட்டு ஓடிவிட்டான் சிறுவன்.

"இந்தப் பையனைப் போல் இன்னும் எத்தனை பேர், உங்கள் புனைப் பெயரைப் பார்த்து விட்டு இந்தக் கதையைப் படித்து ஏமாறப் போகிறார்களோ!" என்றார் கவிஞர்.

எழுத்தாளர் கேள்விக்குறியுடன் கவிஞரைப் பார்த்தார்.

"குழந்தைகளுக்கு எழுதுவதுடன், பெரியவர்களுக்காகவும் எழுதும் திறமை உங்களிடம் இருப்பது பெருமைக்கு உரியது. இருப்பினும், நீங்கள் குழந்தைகளுக்காக நிறைய எழுதி, பரிசுகளும் பெற்று குழந்தைகளிடையே ஒரு நற்பெயரைப் பெற்று அவர்களுக்கு நன்கு அறிமுகமானவராக இருக்கிறீர்கள். குழந்தைகளுக்காக எழுதும் அதே புனைபெயரில்.



தயவு செய்து குழந்தைகளுக்காக எழுதாதீர்கள். வேறு பெயரை வைத்துக் கொள்ளுங்கள். அவனுடன் படிக்கும் குழந்தைகள் எத்தனை ஏமாற்றம் அடைவார்கள்?" என்று நிறுத்தினார் கவிஞர்.

எழுத்தாளர் தலைகவிழ்ந்தார். கவிஞர் கூறியதில் இருந்த உண்மையை அவரும் உணர்ந்தார்.


"வாண்டுமாமாவைப் பாருங்கள். பெரியவர்க்கு கௌசிகன் என்ற பெயரில் எழுதுகிறார். குழந்தைகளுக்காக வாண்டுமாமாவாக எழுதுகிறார்," என்று வாண்டுமாமாவைப் பாராட்டினார் கவிஞர்.

அடுத்து குழந்தை எழுத்தாளர் சங்கத்தில், குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் பிரதம ஆசிரியராக இருந்து பத்துத் தொகுதிகளையும் சிறப்பாக வெளியிட்ட பெரியசாமித்தூரன் அவர்களுக்கு, ஒட்டல் காஞ்சியில் பாராட்டு விழா. விழாவிலும் குழந்தைக் கவிஞர் ஒரே பெயரில் பெரியவர்களுக்காகவும் சிறுவர்க்காகவும் எழுதுவது குறித்த தனது கருத்தை வெளியிட்டார்.

சிறப்புரை ஆற்றிய கி.வா.ஜ. அவர்கள் தான் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் எழுதி வந்தாலும் இரண்டையும் தனித்தனிப் பெயர்களில் எழுதி வருவதாகக் கூறித் தப்பித்துக் கொண்டார். ஆனால் பெரியசாமித்தூரன் அவர்கள் தனது சொந்தப் பெயரிலேயே குழந்தைகளுக்காகவும், பெரியவர்களுக்காகவும் எழுதி வந்தார். அவரும், தனது பாராட்டு ஏற்புரையில் கவிஞரின் கருத்தை வரவேற்றுப் பேசினார்.

எதிலும், தனியான அணுகுமுறையோடு மற்றவர் ஏற்றுக் கொள்ளத்தக்க வாறு தனது கருத்தைத் தெரிவிக்கும் குழந்தைக் கவிஞரின் சிறப்பு வியக்க வைப்பது.

— ரே



புத்தக மூட்டைக்கு டாட்டா!

மகாதேவன்

தந்தியனுப்பும் முறையைப் பற்றிப் படித்திருப்பீர்கள். ஒரு தந்திக் கருவியே (கட்டுக் கடகடா) செய்தியை வாங்கவும் வாங்கும், அனுப்பவும் அனுப்பும். இதே போல், ஒரு கம்ப்யூட்டரில் இருந்து எங்கேயோ வெளிநாட்டில் உள்ள இன்னொரு கம்ப்யூட்டருக்கே நேரடியாகச் செய்தி அனுப்ப முடியுமா? கண்டிப்பாக முடியும். அந்த முறைக்குத்தான் ஈமெயில் என்று பெயர்.

கம்ப்யூட்டர்உலக சாதனைகளுள் ஒன்று தான், 'எலெக்ட்ரானிக் மெயில்' எனப்படும் 'ஈ-மெயில்' (E-Mail).

இந்தியாவில் மிகப் பெரிய அளவில் ஈ-மெயில் சேவையில் ஈடுபட்டுள்ள ஐசிநெட் (ICNET) நிறுவனத்தின் சென்னைப் பிரிவின் தலைவர் திரு ராஜகோபால் மற்றும் உயர் மேலாளர் திரு எஸ். வீரமணி ஆகியோர் ஈ-மெயிலின் செயல்பாட்டை விளக்குகிறார்கள்.


ஒரு கம்ப்யூட்டர் மூலம் இன்னொரு கம்ப்யூட்டருக்குச் செய்தி அனுப்பும் முறையைத் தான் ஈ-மெயில் என்று சொல்கிறார்கள்.

ஈ-மெயில் மூலம், நம்பகமாகவும் உறுதியாகவும் ஒரு செய்தியை அனுப்ப முடியும். இரகசியமான செய்திகளை அனுப்பவும் பெறவும் கூட ஈ-மெயிலைப் பயன்படுத்தலாம். இதைச் செய்தும் வருகிறார்கள்.

இந்தியாவுக்குள் ஒரு செய்தியை, எந்த ஒரு மூலைக்கும் அதிகபட்சம் இரண்டு மணி நேரத்திற்குள் ஈ-மெயில் மூலமாக அனுப்பிவிட முடியும். மேலும், ஈ-மெயில் வழியாக உலகின் எந்த ஒரு பகுதியோடும் விரைந்து தொடர்பு கொள்ள முடியும்.

ஈ-மெயில் முறை 1980-களில்தான் வடிவமைக்கப்பட்டது. மேலை நாடுகளில் அது உடனடியாகப் பயன்பாட்டுக்கு வந்து விட்டது. எனினும், 1984-ஆம் ஆண்டில்தான் இதன் செயல்பாடு அதிகரித்தது. 1988-இல் ஈ-மெயில் மூலம் செய்தி அனுப்பும் முறையை நவீனப்படுத்தி மேம் படுத்தினார்கள். அதன் பிறகு, இன்று உலகம் எங்கும் ஈ-மெயில் முறை வேகமாகப் பரவி வருகிறது.

ஈ-மெயில் மூலம் செய்தி அனுப்பும் முறையை யார் வேண்டுமானாலும் அமைத்துக்



• மேலே (சிறுசிறு) 4 மோடம்கள் வைக்கப்பட்டுள்ளன.


கொள்ளலாம். இதற்குத் தேவையானவை :

1. ஒரு கம்ப்யூட்டர்

2. மோடம் (Modem) எனப்படும் தகவல் பரமாற்றுச் சாதனம்

3. ஒரு நேரடித் தொலைபேசி இணைப்பு

இவை மூன்றும் இருந்து விட்டால் போதும்,



• தகவல் பரிமாற்றும் சாதனம்

ஈ-மெயிலில் எளிதாகச் செய்தியை அனுப்பலாம்.

தொலைபேசி வைத்திருப்பவர்கள், தங்கள் பகுதியிலுள்ள தொலைபேசித் தொடர்பகத்தோடு தொடர்பு கொண்டிருப்பார்கள். சந்தா கட்டி வருவார்கள். அதுபோல, ஈ-மெயிலின் சேவையை வேண்டுபவர்கள், ஈ-மெயில் சேவையை அளிக்கும் ஏதேனும் ஒரு நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு சந்தாதாரராகச் சேர வேண்டும்.

அந்த நிறுவனம், சந்தா (மாத அல்லது ஆண்டு) வசூலித்துக் கொண்டு, தேவைப்படும் போதெல்லாம் தொடர்ந்து இருபத்துநான்கு மணி நேரமும், ஈ-மெயில் சேவையை அளிக்கும்.

ஈ-மெயிலின் செயல்பாடு :

முதலில் கம்ப்யூட்டரில் ஒரு செய்தியை டைப் செய்து தயார் பண்ணிக் கொள்ள வேண்டும். பிறகு ஈ-மெயில் சேவை நிறுவனத்திற்குத் தொலைபேசி சொல்ல வேண்டும். சாதாரண தொலைபேசி முறையைப் போல நாம் டயல் செய்தவுடன் எதிர் முனையில் யாரும் ஃபோன் எடுத்துப் பதில் பேச மாட்டார்கள். ஆனால் நாம் டயல் செய்தவுடன், தானியங்கி முறையில் நமது செய்தி உடனே உரியவருக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

இவ்வளவு விரைவாகச் செய்தி சென்றடைவது எப்படி?

நம் வீட்டிலுள்ள தொலைபேசி இணைப்பை கம்ப்யூட்டருடன் இணைத்து விடுவார்கள். இந்த இரண்டையும் 'மோடம்' எனப்படும் தகவல் பரிமாற்றுச் சாதனம் தொடர்பு கொண்டு செய்தியை அனுப்பி வைக்கிறது.


நமக்கு ஈ-மெயில் நிறுவனம் அளிக்கும் தனிப்பட்ட எண்கள் மூலம் (தொலைபேசி எண்கள் போல) யாருக்குச் செய்தி அனுப்புகிறோமோ அவரது தொலைபேசி எண்ணைச் சுழற்ற வேண்டும்.

தயாராக உள்ள செய்தியை நம் கம்ப்யூட்டர் 'மோடம்'மின் அலைகளாக மாற்றி ஈ-மெயில் நிறுவனத்திற்கு அனுப்பும்.

ஈ-மெயில் நிறுவனத்திலுள்ள தகவல் அளிக்கும் கருவி, மூளையைப் போலச் செயல்பட்டு அதை அலசி ஆராய்ந்து ஊர், பெயர் ஆகிய விவரங்களின்படி உரியவருக்கு அனுப்பிவிடும்.

பெறுபவரின் இடத்திலுள்ள 'மோடம்', மின் அலையாக வரும் செய்தியை எண் வடிவமாக

ஈ-மெயில் வேலை செய்யும் முறை :



(Digital) மாற்றி, கம்ப்யூட்டருக்குத் தரும். கம்ப்யூட்டர் அதைச் செய்தியாகப் பெறும்.

ஈ-மெயில் மூலம் எதிர்காலத்தில் கல்வி உலகில் பெரிய சாதனைகளைச் செய்யலாம். பள்ளி, வகுப்பறை, கரும்பலகை, மேசை, நாற்காலி எதுவும் தேவையில்லை. அவரவர் வீட்டிலிருந்து கொண்டே பாடம் படிக்கலாம். உடனுக்குடன் ஆசிரியரிடம் சந்தேகம் கேட்கலாம்! பெற்றோர் வருடா வருடம் பள்ளிக் கட்டிட நிதிக்காகப் பெரும் தொகை 'நன்கொடை' தரவும் வேண்டாம்! மாணவர்களுக்கும் தினமும் பாடப்புத்தக மூட்டை சுமக்கும் வேலை இனி இல்லை!

எல்லாவற்றையும் விட அறிவுலகில் ஒரு பெரிய புரட்சி, இண்டர்நெட் (Internet). உலகின் எந்த மூலைமுடுக்கில் உள்ளவர்களும் இண்டர்நெட் மூலம் உலக அறிவைப் பெற முடியும்.

சட்டம், மருத்துவம் போன்று ஒவ்வொரு துறை சம்பந்தப்பட்ட விவரங்களை எல்லாம் ஒன்றாகத் தொகுத்து, எல்லாவற்றையும் ஒரு 'நெட்வொர்க்'கில் இணைக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

எதிர்காலத்தில் சட்டம் பயலும் ஒரு மாணவர், 'இண்டர்நெட்' மூலம் உட்கார்ந்த இடத்திலிருந்தே உலகத்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொள்ள முடியும். இந்தியா, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா போன்று எந்த நாட்டுச் சட்டத்தை வேண்டுமென்றாலும் கம்ப்யூட்டர் மூலம் படிக்க இயலும்.

ஒரு முக்கிய மருத்துவப் புத்தகமே, இந்தியாவில் கிடைக்கவில்லை; அமெரிக்காவிலிருந்து வாங்கி அனுப்ப வேண்டும். பெரிய புத்தகம் - விலை, அஞ்சல் செலவு கூடுதலாகும் என்றெல்லாம் இனி கவலைப்படத் தேவையில்லை.

'இண்டர்நெட்' மூலம் அந்தப் புத்தகத்தை உட்கார்ந்த இடத்திலிருந்தே படிக்கலாம். தேவை என்றால் இங்கேயே பிரிண்டர் மூலம் படியெடுத்துக் கொள்ளலாம்.

ஈ-மெயிலின் முக்கியச் சிறப்பு, எல்லாமே தானியங்கி (Automatic) முறையில் செயல்படுவதுதான். செய்தியும் மிக விரைவாகச் செல்லும். ஈ-மெயில் நிறுவனத்திலுள்ள தகவல் அளிக்கும் கருவி (Message Switching System), ஒரு நொடிக்கு 1500 பதிவுகளைக் கடத்தும்.

இந்தியாவில் ஈ-மெயில் நிறுவனங்கள், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு வேகமாக வளர்ந்து வருகின்றன. மருந்து, சிமெண்ட், கம்ப்யூட்டர் தயாரிப்பாளர்கள், தோலாடை, துணியாடை ஏற்றுமதியாளர்கள், வங்கி, நிதி நிறுவனங்கள் போன்றவை ஈ-மெயில் முறையைத் தம் வணிகத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

பொதுத் தொலைபேசி முறைபோல் ஈ-மெயிலும் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்நாள், வெகுதூரத்தில் இல்லை.



பசி வந்தால்...

கோதார் நாட்டை ராஜராஜன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் அதிக வரி விதித்து மக்களைக் கொடுமைப் படுத்தினான். எதிர்த்துக் கேட்டவர்களைச் சிறையில் அடைத்தான்.

இதனால் மக்கள் மிகவும் வருந்தினர். இந்நிலையில் நாட்டில் பருவமழையும் தவறி, பஞ்சம் ஏற்பட்டது. அரசனோ, இதை எல்லாம் கண்டுகொள்ளாமல், அரண்மனையில் சொகுசாக வாழ்ந்தான்.

ஒருநாள் அரசன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். அடர்ந்த காட்டில் நடுப்பகல் நேரத்தில் பசியும் தாகமும் அரசனை வாட்டின. உணவுக்காகப் பழங்களைத் தேடினான். மரங்கள், வெயிலில் வாடிக் கிடந்தன. தாகம் தீர்க்கும் ஓடைகளோ, வறண்டு இருந்தன.

தூரத்தில் ஓர் ஆசிரமம் தெரிய, நம்பிக்கையுடன் அரசன் அங்கே சென்று உணவும் நீரும் கேட்டான்.

முனிவரும், "மன்னா, உனக்கு உணவும் நீரும் தருகிறேன். பதிலுக்கு நீ ஒரு வருஷம் உன் ஆட்சியை எனக்குத் தருவாயா?" என்று கேட்டார்.

பசியால் அரை மயக்க நிலைக்கு வந்துவிட்ட அரசன், இனியும் தாமதித்தால் உயிரே போய்விடும் என்று பயந்து, முனிவர் கேட்டதைத் தர ஒப்புக் கொண்டான்.


பிறகு, உணவும் பழங்களும் நீரும் வந்தன. அரசன் பசி தீர உண்டான். போன உயிர் வந்தது போலிருந்தது.

முனிவருக்கு அரசன், அரசாளும் உரிமையை ஓராண்டுக்கு எழுதிக் கொடுத்தான். அதனைப் பெற்ற முனிவர், "பார்த்தாயா மன்னா! உன் ஆட்சி, அதிகாரம், செல்வம், செல்வாக்கு அத்தனையும் பசி, தாகத்தின் முன் பயனின்றிப் போய் விட்டதை? மக்கள் தினமும் இதைத்தானே அனுபவிக்கிறார்கள்? பசியால் வாடுகிறார்கள்? மக்களின் பாதுகாவலனான நீ அவர்கள் குறையைத் தீர்க்க அக்கறை கொள்ளவில்லையே?" என்றார்.

"முனிவர் பெருமானே, பசியின் கொடுமையை உணர்ந்து கொண்டேன். இனி மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு நல்லாட்சி செய்வேன்" என்றான் மன்னன்.

முனிவரும், அரசுரிமையை அவனுக்கே திரும்பத் தந்து வாழ்த்தி அனுப்பினர்.

— ஜி. இக்பால் தீன்



கூடித்தான் உண்ணுமா காகம்?

ரேவதி

எங்கிருந்தோ அழுகல் தேங்காய் மூடியைக் கொத்திக் கொண்டு வந்திருந்த அப்பா காகம், அம்மா காகத்தை தலையைச் சாய்த்துப் பார்த்தது.

"இந்தத் தேங்கா மூடியைக் கொத்திக் கொத்தி, குஞ்சுகளுக்கு ஊட்டிவிடு. அந்தப் புளியமர வீட்டுல நேற்று ஏதோ விசேஷம். தடபுடலா சாப்பாடு. மிஞ்சிப் போனதையெல்லாம் இன்னிக்குக் கொட்டு வாங்கன்னு நினைக்கிறேன். ஏற்கெனவே நம்ம இனத்தார் எல்லாம் அங்கே கூடியிருக்காங்க. நானும் போறேன். குஞ்சுகளுக்கு இரை கொடுத்து விட்டு நீயும் வந்து சேர். குடும்பத்தைக் காப்பாத்தணும்னா கணவன் மனைவி ரெண்டு பேரும் உழைச்சால்தான் இந்தக் காலத்தில் முடியும்" என்றது அப்பா காகம்.

அம்மா, தேங்கா மூடியை வாங்கிக் கால்களுக்கு இடையே சிக்கி வைத்துக் கொண்டது. கீழே ஏதோ சத்தம் கேட்கவே, இரண்டும் பார்த்தன.

கீழே கிணற்றுக்கு அருகில் இருந்த துணி துவைக்கும் கல்லின் மேல், ஒரு சிறுமி. அவள் கண்ணில், மரத்தின் மேல் இருந்த காகங்கள் இரண்டும் பட்டு விட்டன.

"காக்கை அண்ணா
வாருங்க
கொஞ்சம் பலமாக்
கரையுங்க
கூட்டத் தாரை அழையுங்க
கூடிக் கூடி உண்ணுங்க"

- என்று சிறுமி உற்சாகமாய்ப் பாடி ஆடினாள். பள்ளியில் கற்ற பாடல் போலும்.

"காக்கை அண்ணான்னு, உங்களைத்தான் அந்தச் சிறுமி அழைக்குது. போய்ப் பாருங்க. ஏதாவது பலகாரம் கிடைத்தாலும் கிடைக்கும்" என்றது அம்மா காகம். அப்பா காகம் பறந்து போய், கிணற்றுச் சுவரில் உட்கார்ந்து கொண்டு சிறுமியை நோட்டம் விட்டது.


காகத்தை அருகே கண்டதும் சிறுமிக்கு ஓரே உற்சாகம்.

"கூடி உண்ணும் வழக்கத்தை
கற்றது எங்கே சொல்லுங்க?
நாடி நாங்களும் கற்றிடுவோம்
நன்கு கூடி உண்டிடுவோம்"

- என்று பாடி ஆடினாள் சிறுமி.

காகம் பாட்டையோ ஆட்டத்தையோ ரசிக்கவில்லை. சிறுமியின் மூடிய இடது கைக்குள் என்ன இருக்கிறது என்பதைக் கவனிப்பதிலேயே குறியாக இருந்தது.

ஒரு வழியாக சிறுமியின் மூடிய இடது



கையில் என்ன இருக்கிறது என்பதைக் காகம் கண்டு பிடித்து விட்டது. அது, வியர்வையில் ஊறிப்போன சாக்லேட்!

கீழே இருந்தபடி அம்மா காகத்திற்குத் தனது கண்டுபிடிப்பைத் தெரிவித்தது அப்பா காகம்.

"துளியூண்டு சாக்லேட்டுக்காக அங்கேயே பழி கிடக்காதே. அது கூடக் கண்டிப்பாகக் கிடைக்கும் என்ற உறுதி இல்லை" அம்மா காகம் தனது கருத்தை வெளியிட்டது.

"நாம்ப வாழ்வதே நம்பிக்கையில்தானே? நம்ம குஞ்சுகளுக்கு இதுவரை சாக்லேட்டே தந்தது கிடையாதே? முயற்சி பண்ணிப் பார்க்கிறேன்," என்று கூறிய அப்பா, கிணற்றுச் சுவரில் ஆடி ஆடி நடந்து வேடிக்கை காட்டியது.

சிறுமிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. 'கல கல'வென்று சிரித்தாள். அந்த மகிழ்ச்சியில் அவள் தன்னை மறந்திருந்ததைப் பயன்படுத்திக் கொண்டு, அப்பா காகம் பறந்து சென்று அவள் கையைக் கொத்தியது. சிறுமி பயந்து அலறி கையை உதற, சாக்லேட் கீழே விழுந்தது. காத்துக் கொண்டிருந்த காகம், அதைக் கொத்திக் கொண்டு பறந்தது.

முருங்கை மரத்தில் பூக்களைக் கொத்திக் கொண்டிருந்த பச்சைக் கிளி, அப்பா காகத்தின் மோசடியைக் கவனித்து விட்டது.

"காக்கையாரே, உங்களைப் பார்த்து எத்தனை நம்பிக்கையோடு, மகிழ்ச்சியோடு அந்தச் சிறுமி புகழ்ந்து பாடி ஆடிக் காட்டினாள்! அவளைப் போய் இப்படிக் கொத்தி, சாக்லேட்டைப் பறித்து, நம்பிக்கை துரோகம் பண்ணிட்டீங்களே!" என்று சாடியது கிளி.

"திருடித் தின்பது, ஏமாற்றிப் பறிப்பது எல்லாம் எங்களுடைய பிறவிக் குணம். இரையைக் கண்டதுமே நாங்கள் எங்கள் இனத்தாரைக் கூவி அழைக்கிறோம் என்பது தவறு கிளியக்கா. சந்தேகப்படும்படியான இரையைக் கண்டால்தான், அந்த ஆபத்தைப் பகிர்ந்து கொள்ள எல்லோரையும் அழைப்போம். இது தினமும் நமக்குக் கிடைப்பதுதான். இதனால் நமக்கு அபாயம் ஏதும் இல்லை என்பது உறுதியாகத் தெரிந்தால், கிடைத்த உடனேயே தனியாகவே தின்று விடுவோம். அதற்கு வேறு யாராவது பங்கு கேட்க வந்தால், விரட்டிக் கூட அடிப்போம். எப்பவும் நாங்க கூடித்தான் தின்போம் என்பது தப்பு. கூடியும் தின்போம் என்பது

தான் சரி. உண்மை தெரியாமல் பாட்டுப் பாடினால் நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?'' என்று கழுத்தைச் சாய்த்துச் சாடியது அப்பா காகம்.

''போன வாரம் வேடந்தாங்கலுக்கு வந்திருந்த காசிக் கொக்கு கூட, "என்னது! காக்கையைப் போல் கூடி வாழ்ன்னு உங்களை இப்படிப் புகழறாங்களேன்னு கேட்டுது. எங்கள் சுய முயற்சியால் தேடிக் கிடைக்கும் உணவை நாங்கள் பகிர்ந்து கொள்வதில்லை. ஆபத்து நிறைந்த சந்தேகப்படும் உணவு கிடைக்கும் போது, அந்த ஆபத்தைப் பகிர்ந்து கொள்ளவே எல்லோரையும் அழைக்கிறோம். மரங்களில் மற்ற பறவைகள் இருந்தாலும் கூடு கட்டி வாழ்கிறோம். காக்கையைப் போல் கூடி வாழ்னு சொன்னது இதுக்காகக் கூட இருக்கலாம். ஆனால் உணவைப் பகிர்ந்து கொள்வதற்காக மட்டும் அல்ல'' என்றது அம்மா காகம்.

அம்மா காகம், சாக்லேட்டைக் கால்களில் இடுக்கிப் பிடித்துக் கொள்ள, அப்பா தன் கூரிய அலகால் கொத்திக் கொத்தி உடைத்தது. உடைத்த துண்டுகளை, கூட்டுக்குள் இருந்த குஞ்சுகளுக்கு ஊட்டின.

தெற்குப் பக்கத்து வீட்டில், ஜன்னலோரமாக அமர்ந்திருந்த ஒரு சிறுவன், தன் குட்டித் தங்கைக்கு காகமும் நரியும் கதையைக் கூறிக் கொண்டிருந்தான்.

"என்ன காக்கை அண்ணே, பையன் சொல்லும் கதையைக் கேட்டீங்களா? என்னமோ உங்களை அறிவாளி, அப்படி இப்படின்னீங்க. இந்தக் கதையில் நீங்க ஏமாளியாக இருக்கீங்களே!'' என்று கிண்டலாகக் கேட்டது கிளி.

"இந்தக் கதை எத்தனையோ ஆண்டு காலமாக நம்ம நாட்டில் நிலவி வருகிறது. இது நடக்கக் கூடியது அல்ல. கிடைத்த வடையை, நரிக்குத் தரும் அளவுக்கு நாங்கள் ஏமாளிகள் இல்லை. பறவைகளிலேயே நாங்கள்தான் புத்திசாலிகள். சிந்திக்கத் தெரிந்தவர்கள். தற்புகழ்ச்சிக்கு மயங்கி விடக்கூடாது என்பதை உணர்த்தவே இந்தக் கதை எழுதப்பட்டிருக்கலாம்."

''அப்போ, குயில் உங்கள் கூட்டில் முட்டையிடுதே? அவைகளையும் உங்கள் முட்டைன்னுதானே அடைகாத்து நீங்கள் ஏமாந்து போய் விடறீங்க? அறிவாளிங்க இப்படி ஏமாறுவாங்களா?'' என்றது கிளி.

"கிளியக்கா, இப்போ நீங்கள் கூறியது உண்மைதான். இந்த விஷயத்தில் நாங்கள் ஏமாந்துதான் போகிறோம். நாங்கள் மட்டு அல்ல. மைனாக்களும் கூட ஏமாந்துதான் போகின்றன. முட்டை இட எங்கள் கூட்டையோ இல்லே, மைனாக் கூட்டையோதான் குயில்கள் தேடி வருகின்றன. அடைகாத்து, குஞ்சு பொரித்து, இரை தந்து வளர்ந்து கத்தும் போதுதான், அவை எங்கள் குழந்தைகள் அல்ல என்பது தெரி



அறிவியல் உண்மைகள்!

▶ வீட்டுக் காகம் உலகெங்கும் (ஆஸ்திரேலியா தவிர) காணப்படும் பறவை. மனிதனுக்கு முதலில் அறிமுகமாகும் பறவை இதுதான். உயிரியல் பெயர் Corvus Splendens - Vieilot. மனிதனையே அண்டி வாழ்வது.

▶ சுமார் 17 அங்குல நீளம். இளஞ்சாம்பல் பூசிய கழுத்து. நீண்ட மூக்கு (அலகு) இதன் சிறப்பு அம்சங்கள். ஆண் பெண் ஒரே மாதிரி இருக்கும்.

▶ 'காகா'வென்று கத்தும் இதற்கு 'கா' மொழி என்று தனியான மொழி உண்டு. இதை இன்னும் மனிதனால் அறிய முடியவில்லை. 'கா'வையே ஏற்றி, இறக்கி நீட்டி, குறுக்கி, குலுக்கி, நடுக்கி இவை பேசிக் கொள்ளும். தினமும் ஏதாவது ஓர் இடத்தில் (கூரை அல்லது சுவர்) இவை கூடும். அந்தப் பகுதியில் உள்ள எல்லாக் காகங்களும் வருகை தரும். தங்களுக்குள் உள்ள பிரச்னைகளைக் கூறி, வழக்கை நடத்தி, தண்டனையும் வழங்கும்.

▶ இது உண்ணாத பொருள் இல்லை. மனிதக் கழிவு முதல், அழுகிய விலங்கு, பறவைகள் தின்பண்டம் வரை. இவை பறவைத்தோட்டி என்றே குறிப்பிடப்படு கின்றன. இவை இல்லையேல் நாடும், காடும் அழுகிச் சுற்றுப்புறம் மாசுபடும். காகத் தின் உடலில் பலமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

▶ காகம், ஒரு மரத்தில் பல பறவை இனங்களுக்கு இடையே கூடு கட்டிக் கூடி வாழும். தன் முயற்சியால் கிடைக்கும் உணவை இது மற்ற காகங்களை அழைக்காமல் தானே தின்னும். சந்தேகத்திற்கு உரிய உணவை மட்டுமே, பகிர்ந்து உண்ணும்.

▶ தந்திரம், வஞ்சகம், திருட்டு எல்லாம் நிறைந்த மிகவும் புத்திசாலியான பறவை. மற்ற பறவைகளின் முட்டைகளையும் குஞ்சுகளையும் கூடத் திருடி உண்ண அஞ்சாது. குயில் விஷயத்தில் மட்டும் ஏமாந்துவிடுகிறது.

▶ குடும்பப் பொறுப்புகளை ஆணும் பெண்ணும் பகிர்ந்து வாழும்.

▶ கூடு, வலுவானது அல்ல. ஒயர், கம்பு, செருப்புத் தோல் என்று எதையும் வைத்துக் கட்டும். எங்கும் எதிலும் கூடு கட்டும். ஏப்ரல், ஜூன் மாதங்களில் 4 முதல் 5 முட்டைகள் இடும்.

▶ இயற்கை அழிவுகளை (பூகம்பம், புயல்) இவை முன்கூட்டியே அறியும் என்ற கருத்துக்கு, அறிவுபூர்வமான சான்று இல்லை.

▶ மாலைக் கண் காரணமாகவே, இருட்டியதும் இவை வெளியே வருவதில்லை என்பதும் அறிவியல் அடிப்படையில் உறுதியாக்கப்படவில்லை.

▶ மரங்கள் உலகெங்கும் பரவ காகங்கள் முக்கிய காரணம். கொட்டைகளைத் தங்கள் எச்சத்துடன் இவை போட்டு, மரங்களை முளைக்க வைக்கின்றன.

கிறது. கொத்தி விரட்டி விடுகிறோம். ஒவ்வொரு முறையும் இப்படித்தான் ஏமாறுகிறோம். என்ன பண்ணுவது?" என்று வருந்தியது அம்மா காகம்.

"அடைகாக்கும் முட்டைகளில், நம்முடையது இல்லாதவைகளும் இருக்கின்றன என்பதை நன்கு உணர்ந்த பிறகும், எந்தவிதமான வேறுபாடும் காட்டாமல் அடைகாத்து, இரை கொடுத்து வளர்க்கும் உன் தாயன்புக்கு ஈடு இணை கிடையாது. இதைப் புகழ்ந்து யாரும் பாடவில்லையே?" என்று கேட்டது கிளி.


"ஒரு திருத்தம் கிளியக்கா. கூடு கட்டுவதில் இருந்து, அடைகாத்து, இரை தருவது வரை நாங்கள் இருவருமே குடும்பப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கிறோம்" என்றது அப்பா காகம்.


இரண்டும் சிரித்தன.

மனிதக்குரங்கு சிம்பன்சி

ஆழி

சிம்பன்சி,
கொரில்லா,
ஊராங்-உடான்,
கிப்பன்
ஆகியவை
வாலில்லாக்
குரங்குகள்—
மனிதக்
குரங்குகள்.
சிம்பன்சி,
ஆப்பிரிக்காவில்
வாழும் குரங்கு.
கூட்டங்
கூட்டமாக
வாழும். சேர்ந்தே
வேட்டையாடும்.





மனிதனைப் பெரிதும் ஒத்திருப்பது சிம்பன்சி. சிம்பன்சியின் மூளை, மனிதனைப் போல வளர்ச்சியில் முன்னேற்றமடைந்தது. மனிதனுக்கு அடுத்தபடி, சிம்பன்சிதான் புத்திசாலி என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். மனித மூளையின் எடை சுமார் 1200 கிராம். சிம்பன்சியின் மூளை சுமார் 500 கிராம்.





சிம்பன்சி, சுமார் 1½ மீட்டர் உயரம் வளரும். 40 முதல் 45 ஆண்டுகள் உயிர் வாழும். மனிதனைப்போலவே இதற்கும் 32 பற்கள். கைகளால் பொருள்களை மனிதன் எப்படிப் பிடிக்கிறானோ அதுபோல் கால் விரல்களாலும் கெட்டியாகப் பிடிக்கும் சிம்பன்சி. இதற்கு இரண்டு கால்களால் நடக்க முடிந்தாலும், இரண்டு கைகளையும் துணைக்கு ஊன்றிக் கொண்டுதான் நடக்கும்.



சிம்பன்சியின் குட்டி,
மனிதக் குழந்தை
மாதிரி
விரல் சப்பும்!

சிம்பன்சியின் மூதாதைகள், சுமார் 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தன என்று அண்மையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளைக் கொண்டு அறிவிக்கிறார்கள். சிம்பன்சிக்கும் மனிதனுக்கும் 5 மில்லியன் ஆண்டு இடைவெளி. அதாவது, 2,50,000 சந்ததிகள் இடைவெளி.





சிம்பன்சி, சிக்கனமான மனிதன் மாதிரி எந்தப் பொருளையும் வீணடிக்காது!




சிம்பன்சிக்குப் பயிற்சி கொடுத்தால் நன்றாகக் கீழ்ப்படியும். சர்க்கஸ் செய்யும். மனிதர்களைப் போல் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளும். கிண்ணத்தில் உள்ள ஆகாரத்தை ஸ்பூனில் எடுத்துச் சாப்பிடும். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொள்ளும்!



கற்றுக்கொடுத்தால், 5 வரை தடங்கல் இல்லாமல் எண்ணும். 10 வரை தட்டுத் தடுமாறி, சிரமப்பட்டு எண்ணும்.



சிம்பன்சி படம் வரைகிறது. மாஸ்கோவில், 'நாடி கோஹ்ட்ஸ்' என்பவர் இதுபற்றி சோதனை செய்திருக்கிறார். சிம்பன்சிக்குப் பிடித்த நிறங்கள், சிவப்பு, குங்குமப்பூ நிறம். சிறிய காகிதம் கொடுத்தால் சிறிய படம் வரையும். பெரிய காகிதம் கொடுத்தால் பெரிய படம் வரையும்!



மனிதனைப் போலவே நன்றாக ஊசியில் நூலைக் கோக்கும்!

ஒரு சிம்பன்சியின் பல் இடுக்கில், அது எடுக்கமுடியாதபடி ஏதாவது மாட்டிக் கொண்டுவிட்டால், வேறு ஒரு சிம்பன்சி ஒரு கூர்மையான குச்சியைக் கொண்டு வந்து, பல் இடுக்கில் மாட்டிக்கொண்டு விட்டதை எடுத்துவிடும்!





சிம்பன்சி பெரும்பாலும் தாவர உணவுதான் (சிலசமயம் சிறு சிறு பூச்சிகள்) உண்ணும். தின்னக்கூடிய கொட்டைகளைப் பல்லால் கடிக்க முடியாவிட்டால், கீழே ஒரு கல்லை வைத்து, அதன் மேல் அந்தக் கொட்டையை வைத்து, மற்றொரு கல்லால் அடித்து உடைத்துத் தின்னும். இரையைப் பிற விலங்கினங்கள் பறித்து விடக்கூடாதே என்பதற்காகத் தன் கடைவாயில் அடக்கி வைத்துக்கொண்டு, பிறகு கையில் எடுத்துவைத்துக்கொண்டு தின்னும்.


3

சிம்பன்சிக்கு யாராவது புதுச்சட்டை கொடுத்தால், அது தன் பழைய சட்டையைக் கழற்றி எறிந்துவிடும்!



சிம்பன்சியின் வயிற்றில், குடல் புழுக்கள், கொக்கிப்புழுக்கள் இருந்து, அதனால் வலி ஏற்பட்டால், அது 'ஆஸ்பிலியா' என்னும் சிறு செடியின் இலைகளைத் தேடிப்பிடித்து, வாயில் சுருட்டி வைத்துக்கொண்டு, சாற்றை மட்டும் விழுங்கும். இந்த இலைகளில் உள்ள 'தையாருப் ரைன் A' என்னும் பொருள், அந்தப் புழுக்களை அழிக்கக்கூடிய மருந்துத்தன்மை கொண்டது.


சிம்பன்சிக்கு மனிதனைவிட மோப்ப சக்தி அதிகம்; தன் இனத்தை வெகு தூரத்திலிருந்தே கண்டுபிடித்துவிடும்!





சிம்பன்சி, மனிதனைப் போலவே, திருப்தி, மகிழ்ச்சி, பயம், கோபம், துயரம் முதலியவற்றை வெளிப்படுத்துகிறது. சிரிக்கிறது. வருத்தப்படும்போது மனிதனைப் போலவே கீழ் உதட்டைக் கடித்துக் கொள்ளுகிறது.

பழத்தோட்டங்களைக் கண்டுவிட்டால் சிம்பன்சிகள் பெருங்கூட்டமாகச் சேர்ந்து கொண்டு கொள்ளையடிக்கும். ஒரு பாதிக் கூட்டம் பழங்களைப் பறித்துத் தின்று கொண்டிருக்கும் போது, மறுபாதிக் கூட்டம் வெளியே காவல் காத்துக் கொண்டிருக்கும். யாராவது வந்து விட்டால், கூச்சல் போட்டு எச்சரிக்கும். எதிரிகளைக் கற்களை எடுத்து வீசித்தாக்கும்; அல்லது மரக்கிளைகளை ஒடித்துத் தாக்கும்!




முதன் முதல் விண்வெளியில் உலகைச் சுற்றி வந்தது 'ஈனோஸ்' என்னும் அமெரிக்க சிம்பன்சி.



மனிதனுக்கு வரக்கூடிய, ஜலதோஷம், மார்ச்சளி, காய்ச்சல், சொறி, சிரங்கு, போலியோ, கக்குவான், வைசூரி, குடல் அழற்சி முதலிய எல்லா நோய்களும் சிம்பன்சிக்கு வருகின்றன.

சாட் பீட் கீத்!



பஸ் ஏதோ ஒரு கிராமத்தில் நின்றது.

"ஆமாம், எனக்கும்தான் புரியலே. மாளிகை மாதிரி சொந்த வீடு. கம்பெனி ஆட்கள், கார், டெலிபோன் வசதி எல்லாம் இருக்கும் போது, இந்தத் திருமணத்தை சென்னையில் வைச்சுக்காம, ஏன் இப்படி சிடைப்பட்டியில் கொண்டு போய் வைச்சிருக்காங்க!"

கீதா கேட்டதைக் கேட்டு பீட்டர் விழுந்து விழுந்து சிரித்தான்.

"கீத், திருமணம் நடக்கற ஊரு சிடைப்பட்டி இல்லே. முறுக்குப்பட்டி."

இப்பொழுது பஸ்ஸில் இருந்தவர்களும் சேர்ந்து சிரித்தனர். கீதாவும் சிரித்தாள்.

"ரமேஷ் குமாரின் அக்கா பரமேஸ்வரிக்கு மூன்று வயதாக இருக்கும் போது டைபாய்டு காய்ச்சல் வந்ததாம். நிலைமை ரொம்ப மோசமாகப் போய், டாக்டர்கள் கூட கை விட்டுவிட்டார்களாம். அப்போ யாரோ சொல்லி, முறுக்குப்பட்டில இருக்கிற மாரியம்மனுக்கு வேண்டிக்கச் சொன்னாங்களாம். அதன்படி, பொண்ணு நல்லபடியா பிழைத்து எழுந்தா, அவள் கல்யாணத்தை முறுக்குப்பட்டியிலேயே பண்ணறேன்னு அவங்கப்பா வேண்டிக்கிட்டாராம்." - பீட்டர் விளக்கினான்.

"அதனால என்ன? அடுத்த வாரம்தான் பிரமாதமா சென்னையில வரவேற்புத் தராங்களே?" என்றான் சாதிக்.

சின்னபாபு

பஸ் ஒரு வழியாக முறுக்குப்பட்டிக்குப் போய்ச் சேர்ந்த போது சரியாக மணி பதினொன்று! அவர்களை வரவேற்க பஸ் ஸ்டாண்டுக்கே ரமேஷ் குமார் வந்திருந்தான்.

"என்னா ஆச்சு! இப்படி மின்சார வசதி கூட இல்லாத குக்கிராமமா இருக்கே?" என்று அலுத்துக் கொண்டே இறங்கினான் சாதிக்.

"மின்சாரம் இருக்கு சாத். ஆனால் மாலையில் இருந்தே ஏதோ கோளாறு. பவர் இல்லை. ஜெனரேட்டருக்கு ஏற்பாடு

வைரப் பிள்ளையார்!

பண்ணி இருக்கோம்" என்று ரமேஷ்குமார் சொன்ன போது சாதாரணமாக அவன் குரலில் இழைந்திருக்கும் உற்சாகம் ஒளிந்து கொண்டு இருப்பதை சீதாவால் உணர முடிந்தது.

'வெறும் பகளாபாத்துக்கு இத்தனை சுவையா!' என்று மூவரும் வியந்து கொண்டு சாப்பிட்டனர்.

"ரமேஷ், திருமண ஏற்பாடுகள் எல்லாம் நன்றாகத்தானே நடக்கின்றன?"

"நிச்சயதார்த்தம் நல்லபடியாக நடந்து முடிந்தது. எங்கள் பக்கம் முப்பது பேர். மாப்பிள்ளை வீட்டார் இருபது இருபத்தைந்து பேர். மொத்தம் எல்லாருமாக ஐம்பது பேர்தான். எங்களுடைய நிலையை உணர்ந்து மிக நன்றாக ஒத்தழைத்தார்கள். ஆனால் சற்றும் எதிர்பாராத புதுப் பிரச்னை வந்து விட்டது."



சாட்பீட்கித் ரமேஷ்குமாரின் முகத்தை கவனமாகப் பார்த்தனர். மெழுகுவத்தி ஒளியில் ரமேஷ்குமாரின் கண்கள் பளபளத்தன. அவன் எதற்காகவோ கலங்குகிறான்!

"ரமேஷ்! என்ன ஆச்சு?"

"மனதைத் தளரவிடாமல் சொல்லு. முயன்றால் நம்மால் முடியாதது எதுவுமே இல்லை. உம்....?"


"உங்களுக்குத் தெரியும். எங்கள் சொந்த ஊர் மகாராஷ்டிரம். எல்லா விசேஷங்களிலும் கணேஷ் பூஜை இருக்கும். மாப்பிள்ளை வீட்டார் சத்ரபதி சிவாஜி வம்சத்தைச் சேர்ந்தவர்களாம். அவர்களிடம் ஒரு வைரப் பிள்ளையார் இருக்கு."

''வைரப் பிள்ளையாரா!'' என்று வாயைப் பிளந்தனர் சாட்பீட்கித்.

"ஆமாம். சுமார் இரண்டு அங்குல உயரத்தில கட்டித் தங்கத்தால் ஆன பிள்ளையார். பிள்ளையாரின் நெற்றி கண்கள் தொப்பையில் விலை மதிப்பு மிக்க சின்ன வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். நான் பல முறை அதைப் பார்த்திருக்கிறேன். நிச்சயதார்த்தின் போது அதை வெற்றிலையில் வைத்து, பெண்ணும் மாப்பிள்ளையும் பூஜை பண்ணினார்கள். அதை பத்திரமாக வைத்திருந்து, திருமணம் முடிந்ததும் பெண் கணவன் வீட்டுக்கு எடுத்து வர வேண்டும். ஐந்து மணிக்கே கரண்ட் போய் விட்டது. வராது என்பதும் தெரிந்து விட்டது. அத னால் பூஜையையே, குத்துவிளக்கு வெளிச்சத்தில் பண்ணி நிச்சயதார்த்தத்தை முடித்தார்கள். அக்கா, அந்த வைரப் பிள்ளையாரை எடுத்துக் கொண்டு தான் தங்கியிருந்த அறையில், பீரோமேல் பத்திரமாக வைத்தாள். அரை மணி பொறுத்துப் பார்த்தால் அதைக் காணவில்லை! திருமணம் முடிந்து, கணவனுடன் அக்கா பம் பாய்க்குக் கிளம்பும் போது அது இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரிய பிரச்னைதான்."

"நன்றாகத் தேடிப் பார்த்தீர்களா?"

''தங்கியிருக்கும் வீடு சின்னது. வந்திருப்பவர்கள் எல்லோரும் மிக நெருக்கமான உறவினர்கள். வெளியார் யாருமே இல்லை. யாருடைய பெட்டியைச் சோதனை போடுவது? நடக்கக்



கூடிய காரியமா?"

"எதற்கும், இருக்கட்டும் என்று பாது காப்பைக் காரணம் காட்டி அக்கா தங்கியிருக்கும் வீட்டைப் பூட்டிவிட்டோம். யாரும் வெளியே போகவும் இல்லை. புதிதாக யாரும் வரவும் இல்லை."


"கரெண்ட் வந்து விட்டால் எல்லா இடத்திலும் ஒரு முறை நன்றாகத் தேடிப் பார்க்கலாம் என்ற நம்பிக்கை இருக்கு."

சாப்பிட்டுக் கிளம்பினர். மணப்பெண் தங்கியிருந்த வீடு மிகவும் சிறியது. காற்றுக்காக எல்லோருமே கூடத்தில் படுத்திருந்தனர். மணப்பெண் மட்டுமே அவளுடைய அறையில். ஒரு ஜன்னல். அதை மறைத்தபடி பெரிய மர பீரோ. - மங்கிய குத்து விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தன.

"இங்கே இப்படி ஒரு ஜன்னல் இருக்கு என்பது தெரியவே இல்லை. இருட்டு வேறு. புதுப் புடைவை கசகசப்பு. காற்று இல்லாத புழுக்கம். அதனால் பூஜை முடிந்து, நிச்சயதார்த்தம் ஆனதும் அவசரம் அவசரமாக அறைக்குள் வந்தேன். கீழே வைக்கக்கூடாது என்பதால் அப்படியே வெற்றிலையோடு பிள்ளையாரைத் தூக்கி பீரோமேல் வைத்தேன். நான் வைத்ததைப் பார்த்துவிட்டு யாரோ, தோட்டப் பக்கத்தில் இருந்து ஜன்னலைத் திறந்து, கைவிட்டு பிள்ளையாரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்" - மணப்பெண் அழுது கண்ணீர் விட்டபோது பாவமாக இருந்தது.

ஒரு நாற்காலியைக் கொண்டு வரச் சொல்லி கிதா ஏறிப் பார்த்தான். பீரோவின் மேல் என்னவோ அரைத்த விழுது கையில் பட்டது. எடுத்து முகர்ந்து பார்த்தான். மருதாணி வாசனை.

"எங்க வீட்டு வேலைக் காரி சுப்பம்மா தான் அரைச்சு வைச்சா. நிச்சயதார்த்தம் முடிந்ததும் மணப் பெண்ணுக்கு மருதாணி இடுவது வழக்கம்."



''அந்த தியேட்டர்ல மட்டும் கூட்டமே காணோமே! அப்படி என்ன படம் ஓடுது?''

''உள்ளே வாடா உதைக்கிறேன்!''

— த. சரவணகுமார்

"சுப்பம்மா எப்படி அக்கா?"

"ரொம்ப ரொம்ப நல்லவம்மா."

சுப்பம்மா கண்ணீர் விட்டபடி வந்தாள்.

"சுப்பம்மா, மருதாணியை யார் அரைச்சாங்க?"

"நான் மட்டும்தாம்மா. வேற யார் கிட்ட தந்தாலும் மை மாதிரி அரைக்க மாட்டாங்க."

"எப்போ அதை பீரோமேல வைச்சீங்க? அக்கா, பிள்ளையாரைக் கொண்டு, வந்து வைச்ச பிறகா, இல்லே முன்னாலேயா?"

"பிள்ளையாரைக் கொண்டு வைச்ச பிறகுதான்னு நினைக்கிறேன். ஏன்னா மருதாணியை நான் கொண்டு வந்தப்போ கல்யாணப் பெண், தன் அலங்காரத்தையெல்லாம் கலைத்துக் கொண்டிருந்தாள்."

"அப்போ பிள்ளையார் இருந்ததை நீங்க கவனிக்கலையா?"

"கரெண்டே இல்லையேம்மா? இந்தக் குத்து விளக்கு வெளிச்சம்தான். அதுல, நான் எதைக் கவனிக்க? வெளிச்சம் இல்லாததால் தானே நானே யாராவது மிதிச்சிடப் போறாங்கன்னு அரைச்ச மருதாணி விழுதை மேலே வைச்சேன்?"

பெட்ரூம் விளக்கை எடுத்துக் கொண்டு, கீதா மறுபடி நாற்காலியில் ஏறி, பீரோவின் மேல் பகுதியைப் பார்த்தாள். அவள் ஏதோ சைகை காட்ட சாட் பீட் தோட்டப் பக்கம் போய், ஜன்னலைத் திறந்து கையை நீட்டிப் பார்த்தனர். பீரோவின் மேல் மட்டம் ஜன்னலை விட சிறிது உயரமாக இருந்தது.

''சுப்பம்மா, மருதாணியை வேறு யாருக்காவது கொடுத்தியா?"

"இல்லேம்மா. வைத்த பிள்ளையாரைக் காணோம்னு தேட ஆரம்பிச்சதும், நானே அதை மறுபடி எடுத்து இலை மடக்கில் வைச்சு பத்திரப்படுத்தி விட்டேன். யாரையுமே அதைத் தொடக் கூட விடலை."

சாட்பீட்கீத் கூடிப் பேசினர். அப்போது, முண்டாசு கட்டிய ஓர் ஆள், கையில் கிண்ணத்தோடு கூடத்தில் இருந்த குத்து விளக்குக்கு எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தான். மூவரும் அந்த ஆள் எண்ணெய் விடுவதையே கவனித்தனர்.

''மணப் பெண் அறையிலும் குத்து விளக்கு இருக்கே. எண்ணெய் விடலே?"

''ஏற்கெனவே விட்டிருக்கும் எண்ணெய், இன்னும் இரண்டு மணி நேரம் எரியும். ஸ்குரு திரிவைத்த கிண்ண விளக்கு. மற்றதெல்லாம் சாதாரணக் குத்து விளக்கு. அது மாதிரி நின்னு எரியாது."

''உங்க விரல்ல மருதாணிக் கறை இருக்கே! நீங்க அரைச்சீங்களா? இல்லே, அரைச்சதைத் தொட்டீங்களா?"

முண்டாசு, பீட்டரின் கேள்விக்கு பதில் கூறத் தெரியாது திணறி, ஓடப் பார்த்தான். அவன் முண்டாசையே பிரித்து கழுத்தில் போட்டு முறிக்கிப் பிடித்தனர் சாட்பீட்.

''பிள்ளையாரைத் திருடியவன் இவன்தான், பிள்ளையாரை பீரோமேல் வைப்பதைக் கவனித்து, மறுபடி எண்ணெய் விடும் சாக்கில் யாரும் கவனிக்காத போது உள்ளே வந்து எடுக்க, பீரோமேல் கைவைத்திருக்கான். பிள்ளையாருக்குப் பதில், விரல்களில் மருதாணி அப்ப, அதை அப்படியே துடைத்துவிட்டு, விடாமல் பக்கத்தில் விரல்களால் தடவிப் பார்த்திருக்க வேண்டும். பீரோ மேல் விரல்களால் தேய்த்த மருதாணிக் கறை இருக்கு. தடவித் தடவி சற்றுத் தள்ளியிருந்த பிள்ளையாரைத் திருடிக் கொண்டு போயிருக்க வேண்டும். வெளியே ஜன்னல் வழியாக யாரும் எடுத்திருக்க முடியாது. ஜன்னலை விட பீரோ உயரம்"

"எப்படி நன்றி செலுத்துவது என்று தெரியவில்லை'' என்று விம்மினாள் ரமேஷ்குமாரின் அக்கா.

''கொஞ்சம் மருதாணி கொடுங்க அக்கா. அதுபோதும்'' என்றாள் கீதா.

"நானே இட்டு விட்டுகிறேன்" என்று கீதாவுக்குத் தன் கையால் மருதாணி இட்டாள் மணப் பெண். சாட்பீட்டையும் விடவில்லை. இருவரையும் உட்கார வைத்து உள்ளங்கால்களில் இட்டு விட்டாள்.

எங்கள் ஊரில் நடந்தது!

கடைசியில் பசுவைக் கட்டு!

என் அக்கா பையன் என்னிடம், பசு பற்றி ஒரு கட்டுரை இன்றே வேண்டும். நாளை காலை எழுதிக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டான். நான் எழுதிக் கொடுக்கும் கட்டுரையை ஒரே இரவில் படித்து முடித்து விடுவானா, அவனால் இயலுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருந்தது. நான் உனக்கு வேறு ஏதாவது



கட்டுரை தெரியுமா, படித்திருக்கிறாயா, என்று கேட்டேன். அவன், "எனக்குத் தென்னை மரம் பற்றிக் கட்டுரை தெரியும் மாமா" என்றான். உடனே அருகில் இருந்த என் அண்ணன் பையன், தென்னை மரத்தைப் பற்றி எழுதி, கடைசியில் அந்த மரத்தில்தான் 'பசு'வைக் கட்ட வேண்டும் என்று எழுதி முடித்து விடு"என்றான். நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம்.

- தரங்கம்பாடி, எஸ். நாகராஜன்

மோருக்கு முழிக்காதே!

ராகவி முதல் வகுப்பில் படிக்கிறாள்.



படிப்பதிலும் எழுதுவதிலும் அவளுக்கு மிகுந்த ஈடுபாடு. பள்ளியில் தேர்வு நடக்க இருந்தது. அவளுக்காக ஆங்கிலத்தில் எதிர்ப் பதங்கள் தயார் செய்து கொண்டு இருந்தேன். வரிசையாகப் பதில் சொல்லிக் கொண்டு வந்தவளுக்கு more என்ற ஆங்கில வார்த்தைக்கு less என்று பதில் தெரியவில்லை. ஒரு நிமிடம் யோசித்து விட்டு 'தயிர்' என்று கூறி ஓடிவிட்டாள். அவள் கூறியதையும் சமாளித்ததையும் பார்த்து எல்லோருக்கும் சிரிப்புதான்.

- மடிப்பாக்கம், ராதிகா.

IODIZED உப்பு!

எங்கள் பிரசன்னகுமார் கேள்வி ஞானத்தோடு நிற்காமல் செயல்படுத்து




வதிலும் ஆர்வம் காட்டுபவன். IODIZED உப்பு பற்றாக்குறையால் கால்கள் வளைவது - கழுத்து வீக்கம் போன்ற நோய்கள் வருவதை டீவி, வானொலி மூலம் அறிந்தவன். அவனுடைய பள்ளி அருகே மாங்காய் நெல்லிக்காய் விற்கும் பெண்மணி தினமும் மிளகாய்ப் பொடி கலக்க, உப்பு பாக்கெட் வாங்குவதைக் கண்ட பிரசன்னா, அந்தப் பெண்மணியிடம் IODIZED உப்பு பற்றி விளக்கினான். அதன் மூலம் தீனி வாங்கும் குழந்தைகளுக்கு, இளமையிலேயே IODIZED உப்பு உடம்பில் கலந்து நோய் வருவதைத் தடுக்கலாம் என்று நீண்ட உரை ஒன்று கொடுத்தான்!

அன்றிலிருந்து அந்தப் பெண்மணி IODIZED கலந்த உப்பையே வாங்கி மிளகாய்ப் பொடி கலக்கி வருகிறாள்.

- சச்சிதானந்தம்,
நாமக்கல்.

நாங்கள் கூற வேண்டியது

குடும்பத்துடன் 'சோழன்' பேருந்தில் தஞ்சாவூர் சென்றோம். வழக்கம் போல ஓட்டை உடைசல் வண்டிதான். ஏக சத்தத்துடன், ரேடியேட்டரிலிருந்து ஆவி பறக்க வண்டி மெதுவாகச் சென்றது. ஓட்டுநர், வேறு போக்குவரத்துக் கழகத்திலிருந்து



வந்தவர் போலும். தனது நண்பர் பயணியிடம் 'ஏன்தான் இந்த வண்டியில் ஏறினேனோ' என்று கூறிக் கொண்டே ரெடியாக வைத்திருந்த 20 லிட்டர் கேனிலிருந்து நீரை ரேடியேட்டரில் ஊற்றினார். இதைப் பார்த்த எங்கள் எட்டு வயதுத் தம்பி ஓட்டு



நரைப் பார்த்து, 'நாங்கள் கூற வேண்டியதையெல்லாம் நீங்களே கூறுகிறீர்களே! அடுத்து இருந்த திருச்சி வண்டியில் ஏறியிருக்கலாம். அது முந்திக் கொண்டு போய் விட்டது' என்று கூறியதைக் கேட்டு பேருந்தில் இருந்த அனைவரும் சிரித்து விட்டனர்.

- மு. தனகோபாலன்,
திருவாரூர்.

தப்பு

எனக்கு கோபு, பாபு என்று இரு நண்பர்கள். அவர்கள் இருவருக்கும் ஒருநாள் சண்டை வந்தது. கோபு, பாபுவை அடித்து விட்டான். அதற்கு பாபுவின் அப்பா, "ஏன் பாபுவை அடித்தே? அது தப்புத்தானே?" என்று கோபுவை அடித்தார். அதற்குக் கோபு, "சின்னவங்க நாங்க அடிச்சிட்டுக் கிட்டது இருக்கட்டும். நீங்க பெரியவங்க. நீங்களே என்னை அடிப்பது கூடத் தப்புத் தானே?" என்றான். வீட்டில் உள்ள அனைவரும் சிரித்தனர்.

- தஞ்சை,
எம். ஷேக் அப்துல்லா.


செத்த பாம்பு நகர்ந்தது!

ஒரு நாள் இரவு எங்கள் வீட்டிற்குள் ஒரு பாம்பு நுழைந்து விட்டது. நாங்கள் அதை அடித்து வீட்டின் பின்புறத்தில் போட்டு விட்டோம். மறுநாள் காலை தூங்கிக் கொண்டிருந்த என்னை என் தம்பி



அவசரம் அவசரமாக எழுப்பி "அண்ணா நாம் நேற்று அடித்த பாம்பு, சாகவில்லை. அது இன்னும் உயிருடன்தான் இருக்கிறது" என்றான். எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. சென்று பார்த்தேன். அடித்துப் போடப்பட்டிருந்த பாம்பு உண்மையாகவே அசைந்தது! என் தம்பி பயந்து போய் தூர ஓடிவிட்டான். எனக்கும் பயமாகத்தான் இருந்தது. இன்னும் அருகில் சென்று பார்த்த போதுதான் ஏராளமான எறும்புகள் கூடி அதன் செத்த உடலை இழுத்துக் கொண்டு இருப்பது தெரிந்தது. வீட்டிலிருந்தவர்களிடம் கூறினேன். அன்று முழுவதும் ஒரே சிரிப்புதான்.

- டி. தென்றலரசு, செஞ்சி.




நீச்சல்

என் மாமா பையன் விடுமுறையில் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான். நான் அடிக்கடி கிணற்றிற்குக் குளிக்கச் செல்லும் போது தானும் வருவதாக அடம்பிடித்தான். என் அம்மா "நீயெல்லாம் கிணற்றில் குதிச்சேன்னா உள்ளே போயிடுவே. ஏன்னா உனக்குத்தான் நீச்சல் தெரியாதே" என்றார்கள். அதற்கு அவன், "சரி பாட்டி நம்ம வீட்டுக்குப் பின்னால இருக்கிற தண்ணி இல்லாத கிணற்றிலாவது குதிச்சுப் பார்க்கிறேனே? அதுல குதிச்சால் கூடவா உள்ளே போயிடுவேன்?" என்றானே பார்க்கலாம் ஒரே சிரிப்...

- ஜெயகாந்தன், அனந்தபுரம்.

ஆறு கூறு!

கோபால் மூன்றாம் வகுப்புப் படிக்கும் மாணவன். அவன் ஒருநாள் என்னிடம், பாடம் படித்துக் கொண்டு இருந்த



போது, 'சில ஆறுகளின் பெயர்களைச் சொல்லு!' என்றேன். எங்கள் ஊருக்குப் பக்கத்தில், எங்கள் ஊரின் பெயரிலேயே 'முடிகொண்டான் ஆறு' என்று ஆறு ஓடுகிறது. கோபால் சில ஆறுகளின் பெயரையும் சொல்லி விட்டு, 'முடிகொண்டான் ஆறு' என்று சொல்லி விட்டு நிறுத்தினான். 'ம்... மேலும் சொல்லு!' என்று நான் கேட்டவுடன் சிறிது யோசித்து விட்டு 'திருச்சி ஆறு, சேலம் ஆறு, மதுரை ஆறு...' என்று சொல்லிக் கொண்டே போனானே பார்க்கலாம்!

- கவிதா வீராசுவாமி,
முடிகொண்டான்.

முடிவெட்டிக் கொள்ள

மூன்றாவது படிக்கும் தம்பி எவ்வ

ளவு சொல்லியும் அடம் பிடித்து முடி வெட்டிக் கொள்ள மறுத்தான். ஒருநாள் சனிக்கிழமை விடுமுறையில் வெயிலில் அலைகிறானே என்று வலுக்கட்டாய மாகத் தூங்க வைத்தோம். நாங்கள் எழுந்த பிறகும் அவன் தூங்கிக் கொண்டிருந்தபடி யால் அப்போது தோன்றிய ஒரு யோச னைப்படி, அவனது தலையின் இரு பக்க மும் முடியெடுத்து சிண்டு போல் ரப்பர் பேண்டால் போட்டு விட்டோம். விழித் துப் பார்த்து அழுதவனிடம் விவரம் கூறி,



"நாளை மறுதினமும் இப்படிச் சிண்டு போட்டு பூ வைத்துத்தான் பள்ளிக்கு அனுப்புவோம்" என்று கூறினோம்.

அடுத்த நாள், விளையாடப் போகி றேன் என்று கூறிவிட்டுக் கடைக்குப் போய் முடிவெட்டி, கொண்டு வந்து விட் டான். பணம் ஏது என்று கேட்ட போது, நாளை அண்ணாவோ, அப்பாவோ வந்து தருவார்கள் என்று சொல்லியிருக்கேன் என்றான். தெரிந்த கடை. இது எப்படி இருக்கு?

- டி. சாந்தி, இலவங்கார்குடி.

பையன் கேட்ட கேள்வி!

நானும் என் தம்பியும் பல்லவன் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந் தோம். பக்கத்து இருக்கையில் ஒரு அம்மா தன் ஐந்து வயது மதிக்கத்தக்க பைய னுடன் அமர்ந்திருந்தார்கள். ஓர் இடத்தில் பேருந்து நின்றதும் அந்த அம்மா பைய




னை அழைத்துக் கொண்டு கீழே இறங்கி னார். அப்போது அந்தப் பையன் தன் அம்மாவைப் பார்த்து, "அம்மா டிக் கெட் எடுக்காம இறங்குறயே?" என்றான். இதைக் கேட்டு பஸ்ஸில் இருந்த அனை வரும் தங்களை அறியாமல் சிரித்து விட்ட னர்.

- ஏ. ரவி, சென்னை – 30.

கூனி இல்லாவிடில்

தமிழாசிரியர் ராமாயணம் நடத்தும் போது, 'ராமாயணத்'துல கூனி மட்டும் இல்லை எனில் ராமாயணக் கதையே எழுந்திருக்காது" என்றார். பிறகு பாடம் நடத்தி விட்டுக் கேள்வி கேட்டார். "ராமா



யணத்தில் கூனி இல்லாவிடில் என்ன ஆகி இருக்கும்?" என்று ஒரு மாணவனிடம் கேட்டார். அவன் சொன்னான் : "டீ.வி. சீரியல் ரெண்டே வாரத்துலே முடிஞ்சிருக் கும் சார்" என்றான். வகுப்பில் ஒரே சிரிப் பலை.

- ஆர். லோகநாதன், நாகூர்.




Photo courtesy : SPAN

கோணாமாணா தீவு

இதென்ன! இப்படிக்கூட ஒரு தீவின் பெயரா என்று கேட்பது தெரிகிறது. பள்ளியில், ஓவிய வகுப்பில் ஆசிரியர் மயிலின் படத்தைப் போடும்படி கூறுகிறார். நீங்களும் தெரிந்தவரை படத்தைப் போடுகிறீர்கள். ஆசிரியர் அதைப் பார்த்து விட்டு "என்ன இது! மயிலின் படத்தை இப்படிக் கோணாமாணா என்று போட்டிருக்கிறே?" என்று கேட்கிறார் இல்லையா? இந்தக் கோணாமாணாவுக்கு என்ன பொருள்? மயிலின் உருவம் சரியாக வரவில்லை என்பதுதானே? இதே மாதிரித்தான் இந்த கோணாமாணா தீவும்!

தீவு என்றதும் நம் மனக்கண்ணில் என்ன தோன்றுகிறது? நான்கு பக்கமும் கடல் நீரால் சூழப்பட்ட, ஆனால், இலங்கையைப் போன்ற ஒரு நிலப்பரப்புதான் தோன்றும். இந்தத் தீவு அப்படி இல்லை. நான்கு பக்கமும் கடல் நீர்தான். ஆனால் நீருக்கு நடுவில் மிகப் பெரிய பாறைப் பரப்பாக துருத்திக் கொண்டு உயர்ந்து நிற்கிறது இது. அசப்பில் பார்த்தால் காட்டு மிராண்டி அரக்கர்கள் தங்கள் கையில் தூக்கி வரும் கரடுமுரடான கதை போல்






இருக்கிறது. கீழ்பாகம் சிறுத்து மேல் பாகம் பருத்து உயர்ந்து நிற்கும் இதை, யார் பார்த்தாலும் சரி, கோணா மாணா தீவு என்றுதான் தாங்களாகவே கூறுவார்கள். இதன் விசித்திரமான தோற்றம் அப்படி!

தாய்லாந்துக்குச் சொந்தமான இந்தத் தீவு, ஆங்கிலத்தில் OBSCURE ISLAND என்றே குறிக்கப்பட்டு இப்பொழுது புக்கெட் (BHUKET) என்று அழைக்கப்படுகிறது. அந்தமான் கடலில் தனித் தீவாக துருத்திக் கொண்டு அடிப்பாகம் சிறுத்து உயர்ந்து நிற்கிறது இது. பாங்காக் நகரிலிருந்து ஏழு மணி நேர விமானப் பயணத்தில் இதை அடையலாம். கடல்வழிப் போக்குவரத்தும் உண்டு. இந்தத் தீவில் ஏரிகள், மரங்கள் என்று தீவுகளுக்குரிய எல்லா இயற்கை வளங்களும் உண்டு. சந்தடியோ, மக்கள் நெருக்கடியோ இல்லாத தனிமையான தீவு இது. தனிமை விரும்பிகளுக்கு ஒரு சொர்க்கம்.

அதிக அளவுக்கு உல்லாசப் பயணிகள் வரும் இடங்களில் ஒன்றாக இன்று புக்கெட் தீவு உள்ளது. ஒரு காலத்தில் மக்கள் வாழத் தகுதி அற்றது என்று ஒதுக்கப்பட்ட இந்தத் தீவு இன்று சொர்க்க பூமியாக மாறி விட்டது. ஐந்து நட்சத்திர ஓட்டல்கள், விமான தளம், டூரிஸ்ட் டாக்சிகள், நீச்சல் குளம், சரணாலயங்கள் என்று எல்லாம் வந்து விட்டன.

இந்தத் தீவின் முக்கிய காட்சிப் பொருள் கடல் நாரை எனப்படும் Sea Gull. இவை இந்தத் தீவின் கரடுமுரடான பாறை இடுக்குகளில் இலட்சக்கணக்கில் கூடு கட்டி வாழ்கின்றன. பறவை ஆராய்ச்சி



யாளர்கள் இங்கே குவிவதில் அதிசயம் இல்லையே? கடல்வாழ் உயிரினங்களைப் பற்றியும் இங்கே ஆராய்ச்சி செய்கிறார்கள். எதையுமே இனிமேல் கோணாமாணா என்று ஏளனமாகச் சொல்லக் கூடாது. புக்கெட் தீவு மாதிரி அதுவும் வருங்காலத்தில் உயர்ந்து பெருமை பெறலாம் இல்லையா?



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப் பட்ட 6 - வது கதை

அப்பாவை விடவா?

ராமுவுக்குப் பள்ளிக்குக் கிளம்ப சிறிதும் விருப்பமே இல்லை. அப்பாதான் அவனைக் கட்டாயப் படுத்தினார்.

"விபத்தில் எனக்குக் கால் போய் வருமானமும் நின்று விட்ட பிறகு, இந்தக் கஷ்டமெல்லாம் தினசரி நிகழ்ச்சிகள்தானே ராமு? வாடகை பாக்கிக்காக வீட்டுக்காரரும், பால் மளிகை பாக்கிக்காக பால்காரரும் மளிகைக்காரரும் வீட்டுக்கு வந்து கத்திவிட்டுப் போவதும், மிரட்டி விட்டுப் போவதும் புதிய காட்சிகளா? எங்கள் தொழிற்சாலையிலேயே எனக்கு மாற்று வேலை தருவதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கு நேரம் வர வேண்டாமா? நீ இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் மனம் தளர்ந்து, பள்ளிக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடித்தால் உன் வருங்காலம் என்னாவது? நம்பிக்கையை நான் தளரவிடவில்லை. தைரியமாகப் போய் விட்டு வா. பாடத்தில் கவனம் செலுத்தி நன்றாகப் படி. அதுதான் இந்த நிலையில் எனக்கு மகிழ்ச்சியும் துணிவும் அளிக்கக்கூடிய உரம்" என்று தட்டிக் கொடுத்து அவனைத் தள்ளாத குறையாகத் தள்ளி அனுப்பினார் அப்பா.

அப்பாவை நினைத்த போது ராமுவுக்கு அதிசயமாகத்தான் இருந்தது. இத்தனை கஷ்டத்திலும் அவருக்குத்தான் எத்தனை மனத்துணிவு! நேர்மையில் அவர் இம்மியும் பிசகாதவர்.



தொழிற்சாலையில் விபத்துக்குள்ளாகி ஒரு காலை இழந்ததும் அதிகாரிகள் விசாரணைக்கு வந்தார்கள். "இயந்திரங்கள், அபாய அறிவிப்புகள் எல்லாம் சரியாகத்தான் இயங்கின. என் கவனக் குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது. நிர்வாகம் எந்த விதத்திலும் காரணம் அல்ல," என்று அப்பா துணிந்து உண்மையைக் கூறினார். அந்த உண்மை உள்ளத்தைப் பாராட்டித்தான், அவருக்கு ஏற்ற இன்னொரு வேலையை அளிப்பதாக நிர்வாகம் வாக்குறுதி தந்திருந்தது. ஆனால், அந்தத் தொழிற்சாலையே வேலை நிறுத்தம், கதவடைப்பு என்று இப்பொழுது திண்டாடிக் கொண்டிருக்கும் போது, இவருக்குக் கொடுத்த வாக்குறுதியை யார் கவனிப்பார்கள்? இருந்தாலும் மாதம் ஒருமுறை மேலதிகாரியை அப்பா சந்தித்து விட்டுத்தான் வருகிறார்.

"வேலை நிறுத்தம் முடிந்து தொழிற்சாலை திறந்து, நிர்

வாகப் பணிகள் சீரானதும், கண்டிப்பாக உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதுதான் முதல் வேலை. இதில் எல்லோருமே ஒன்றாக இருக்கிறோம். சற்றுப் பொறுமையாக இருங்கள்'' என்று மேலதிகாரியே கூறியிருக்கிறார் இந்த மாதம் கூட.

பட்டணத்தில் வருமானம் இல்லாமல் காலத்தைக் கடத்துவது எத்தனை பெரிய காரியம்? அப்பாவின் சேமிப்பு, அம்மாவின் நகைகள், பண்டம் பாத்திரங்கள் எல்லாம் வீட்டுச் செலவைச் சமாளிக்கக் கரைந்து போயின. இதைத் தவிர கடன் வேறு. கடன் பாக்கிக்காகப் படையெடுத்து வந்தவர்கள் பேசிய ஏச்சைக் கேட்டு ராமு

அ. அனிஸ் அகமது

மனம் ஒடிந்தான். கோபப்பட்டான். அவன் அவர்களை பதிலுக்குத் திட்ட முயன்ற போது அப்பா தடுத்தார்.

"வேண்டாம் ராமு. இவர்கள் எல் லோரும் நல்லவர்கள்தான். நாம் தரும் பணத்தை வைத்துத் தானே இவர்கள் தங்கள் தொழிலைச் செய்தாக வேண்டும்? வருமானம் இல்லாது நாம் படும் அதே கஷ்டத்தைத்தான் இவர்கள் வேறு மாதிரி அனுபவிக்கிறார்கள்? அவர்களை பதிலுக்கு நீயும் திட்டாதே" என்றார்.

அன்று ராமு, பள்ளியில் இருந்து வீடு திரும்பிய போது, வீட்டில் கொஞ்சம் மகிழ்ச்சி கலந்த கலகலப்பு காணப்பட்டது. விபத்தில் இழந்த காலுக்கு செயற்கைக் கால் வைத்துக் கொண்டால், உடனே பதிவுப் பகுதியில் வேலைக்கு எடுத்துக் கொள்வதாக அப்பாவுக்கு தொழிற்சாலையில் இருந்து கடிதம் வந்திருந்தது. அன்று மாலையிலேயே அப்பாவை அழைத்துக் கொண்டு



டாக்டரைப் பார்க்கப் போனான் ராமு. செயற் கைக் கால் பொருத்த சென்னைக்குத்தான் போகவேண்டும் என் றும், செலவு இரண் டாயிரம் ரூபாய் ஆகும் என்றும் டாக்டர் கூறிவிட்டார். துளிர்விட்ட மகிழ்ச்சி தோன்றிய வேகத்திலேயே மறைந்து விட்டது.

அடுத்த நாள், பள்ளிக்கு ராமு வந்தானே தவிர, வகுப்பில் பாடங்களை கவனிக்கும் மனநிலை அவனுக்கு இருக்கவில்லை. இரண்டு முறை ஆசிரியர் அவனைக் கவனித்துவிட்டார். அவன் மனம் பாடத்தில் பதியவில்லை என்பது அவருக்குத் தெரிந்து விட்டது. இருந்தாலும் அதை உறுதி செய்து கொள்ள, கேள்வி கேட்டார். அவர் எதிர்பார்த்தபடியே ராமு ஏதேதோ உளறினான்.

ராமு, முதல் ரேங்க் வாங்கும் புத்திசாலியான மாணவன். அதனால் ஆசிரியருக்கு அவன் மேல் தனியான அன்பு இருந்தது. கேள்விக்கு விடை தராமல், அவன் உளறியபோது, அவன் ஏதோ பிரச்னையில் மூழ்கியிருக்கிறான் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

"ராமு, உனக்கு என்னாச்சு? உடம்பு சரியில்லை என்றால் வீட்டுக்குக் கிளம்பு. நான் அனுமதிக்கிறேன்" என்றார் ஆசிரியர்.

"வேண்டாம் சார். இனிமேல் கவனம் சிதறாமல் கவனிக்கிறேன்" என்றான் ராமு.

இடைவேளையின் போது, முத்து ராமுவைத் தேடி வந்தான். முத்துவும் அவன் வகுப்புதான். ஆனால் பணக்கார மாணவன். பணக்காரர்களுக்கே உரிய எந்த வகையான அகம்பாவமும் இல்லாது, மிகவும் எளிமையாக, இருப்பான். எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகுவான். நண்பர்களுக்குக் கஷ்டம் என்றால் வலியப் போய் உதவுவான்.

"ராமு, உனக்கு என்ன ஆச்சு? ஏன் அப்படி உளறினாய்?" என்று ஆதரவாகக் கேட்டான் முத்து.

ராமு, மடைதிறந்த வெள்ளம் போல் வீட்டு நிலையைக் கூறினான்.

"என்னுடைய சேமிப்புக் கணக்கில் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கு ராமு. அதைக் கொடுத்தால் உங்கப்பா வாங்கிக் கொள்வாரா?" என்று கேட்டான் முத்து.

ராமு, அப்பாவிடம் கேட்டுப் பார்த்தான். கூடவே முத்துவும் வந்தான். அப்பா தயங்கினார்.

"ஐயா, இதை இனாமாக நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டாம். கடனாகவே வைத்துக் கொண்டு, முதலில் செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு வேலைக்குப் போய் சம்பாதியுங்கள். மாதம் ஐம்பது ரூபாயாகக் கொடுங்கள். வாங்கிக் கொள்கிறேன்" என்றான் முத்து. அதற்குமேல் அப்பாவால் மறுக்க முடியவில்லை.

அப்பா, சென்னைக்குப் போகும் செய்தி எப்படியோ வெளியே தெரிந்து விட்டது. கடன்காரர்கள் ஒன்றாக வந்தனர். கடனைத் திருப்ப வழியில்லை. இரண்டாயிரம் ரூபாய்க்கு செயற்கைக் கால் வைத்துக் கொள்ள மட்டும் பணம் இருக்கா என்று கேவலமாகப் பேசினர். தன்மானம் பாதிக்கும்படி அவர்கள் கேட்டதால் அப்பாவால் அதைத் தாங்க முடியவில்லை. அந்த இரண்டாயிரம் ரூபாயை எடுத்து வந்து பிரித்துக் கொடுத்து விட்டார்.

மாலையில் பள்ளியில் இருந்து திரும்பி வந்ததும் செய்தி அறிந்து ராமு கண்ணீர் விட்டான். அவனால் வேறு என்ன பண்ண முடி



யும்?

அடுத்த நாள், ராமு பள்ளிக்குப் போகவில்லை. இடைவேளை நேரத்தில் முத்துவே அவனைத் தேடி வந்தான். செய்தியை அறிந்ததும் அவனும் வருந்தினான். தலைமை ஆசிரியர் அவனைத் தேடியதாகக் கூறவே, ராமு அவனுடன் கிளம்பினான்.


"என்னுடைய வாழ்த்துக்கள் ராமு" எனறு அவனை மகிழ்ச்சியாக வரவேற்ற தலைமை ஆசிரியர், "ராமு ஓவியப் போட்டிக்கு நீ வரைந்து அனுப்பிய ஓவியம் முதல் பரிசு பெற்றிருக்கிறதாம். ஒரு முழு சவரன் தங்கப் படக்கத்தை கல்வியமைச்சரே வழங்கப் போகிறாராம். நீ, யாராவது ஒருவரைக் கூட்டிக் கொண்டு சென்னைக்குப் போகலாம். போக வர உங்கள் இருவருக்கும் ஆகும் ரயில் கட்டணம், சென்னையில் மூன்று நாட்கள் தங்கும் செலவு எல்லாவற்றையும் அரசாங்கம் தருகிறதாம்" என்று கடிதத்தைக் கொடுத்தார்.

ராமுவின் முகம் நம்பிக்கையுடன் மலர்ந்தது. முத்து அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கினான் மகிழ்ச்சியுடன்.

"ராமு, பதக்கத்தை வாங்கிக் கொண்டு திரும்பியதும், உனக்கு நம்ப பள்ளியில் ஒரு பாராட்டு விழா நடத்த இருக்கிறேன்" என்றார் தலைமை ஆசிரியர்.

ராமுவின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றாதது, தலைமை ஆசிரியருக்கு வியப்பாக இருந்தது.

"என்னை மன்னியுங்கள் ஐயா. அப்பாவை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போய்ப் பதக்கம் வாங்கப் போகிறேன். ஆனால் அதை உடனே விற்றுவிடப் போகிறேன். எங்க அப்பாவுக்கு அதைக் கொண்டு செயற்கைக் கால் வைக்கவேண்டும். அதனால், எனக்குப் பாராட்டு விழா வேண்டாம். விழாவுக்கு நான் ஒப்புக் கொண்டால், பதக்கத்தை விற்க முடியாது. இங்கே கொண்டு வந்து காட்ட வேண்டும். என்னை மன்னியுங்கள் ஐயா" – கண்களில் நீர்வழிய கைகூப்பி வேண்டினான் ராமு.



"தங்கப் பதக்கத்தையா விற்கப் போகிறாய்?"

"ஆமாம் ஐயா, அப்பாவை விடவா பெரிது அது!" என்று கேட்டான் ராமு.


சிரிப்...



"நூறு தடவை இம்போசிஷன் எழுதிட்டு வரச் சொன்னா ஒரு தடவை எழுதி இருக்கே?"

"நான் ஒரு தடவை எழுதினா நூறு தடவை எழுதின மாதிரி சார்."

- தாராபுரம் சந்துரு



"நூறு மார்க் வாங்கியுமா உன்ன உங்க அப்பா திட்டினாரு?"

"ஆமாம், எல்லாப் பரீட்சையிலையும் சேர்த்து!"

- கருப்பம்புலம் ஜேவி, வேதாரண்யம்



"சோமு டியூஷன் படிக்கிறதுக்காக சுந்தர் ஏன் பணம் கட்டுகிறானாம்?"

"பரீட்சை ஹாலிலே சுந்தருக்கு முந்தின சீட் சோமுவுடைதாச்சே!"

– குருஸ்ரீ, கள்ளிக்குடி



"வான்கோழின்னு பேரை வச்சிட்டு தரையிலே நடந்து திரியறியே; உன் மனசுக்குக் கஷ்டமா இல்லையா?"

"நீ மட்டும் என்னவாம்? வரிக் குதிரைன்னு பேர் வச்சிட்டிருக்கியே? எவ்வளவு வரி கட்டுறே?"


– குருஸ்ரீ, கள்ளிக்குடி


பறவை இட்ட சாபம்!

அமைப்பு : ரே.


சித்திரம்:





இளவரசனுக்கு அதீத வளர்ச்சி! இரண்டு மாதத்தில் பேசுகிறான்!
பேசுகிறானா!
ஆம்! அதோடு தினமும் ஒரு கட்டை விரல் அளவு உயரமாகிறான்!
மகாராணி, இளவரசர் நடக்கிறார். அதோ பாருங்கள்...




அப்பா, பச்சைக் குதிரை ஆடலாமா?
நண்பர்களுடன் விளையாடு சிவா
சரிப்பா
மூன்று மாதத்தில் ஐந்து வயது வளர்ச்சி!
இப்படியே போனால் ...
ராஜ வைத்தியர் வந்தார்-
இளவரசரது உடலில் எந்த நோயுமில்லை மன்னா
ராஜகுரு-
எந்த நோயுமில்லை அரசே!
யாராலும் தீர்வு காண முடியவில்லை. மன்னருக்கு மனக்கவலை பிடித்தது.



நீ குதிரை தாண்டினால் நாங்க ஸேனானிதான்...
என்னையும் சேர்த்துக் கொள்டா!
அரண்மனை பயில்வானோடு ஆடு. அது தான் சரி.
இன்னொரு நாள் –
நானும் விளையாடறேன்டா
எப்படி ஆடுவே?
இப்படித்தான்...
ஆனால் நாளாக ஆக –
இளவரசன் வராண்டா
ஓடிடலாண்டா! ரொம்ப பயமா இருக்கு!


அரண்மனையில் பணியாளர்கள் -
மாசாமாசம் இளவரசருக்கு புதுச்சட்டை பண்ண வேண்டியிருக்கு!
புதுச் சட்டை தைச்சுத் தைச்சு கையே வலிக்குது!
குளிக்க கிணற்றையே இறைச்சு வைக்க வேண்டியிருக்கு!..
மன்னரைச் சந்தித்து -
என் அசுர வளர்ச்சியால் எல்லோருக்கும் பிரச்னை
தீர்வு நம் கையில் இல்லையே சிவா ?
தீர்வைத் தேடி நானே போகப் போகிறேன்...





என்ன கூறுகிறாய் சிவா?
காட்டு வாழ்க்கையைத் தேடப் போகிறேன்
அரண்மனையும் நாங்களும் கசந்து விட்டோமா?
இல்லை. எல்லோரும் பயப்படுகிறார்கள். விளையாட நண்பர்கள் கூட இல்லை.. உணவு, உடை, குளிக்க வைக்க எல்லோரும் திண்டாடுகிறார்கள்.
அதற்காக இந்த முடிவா?
இன்று இல்லாவிட்டாலும் நாளை இ தவிர்க்க முடியாதது
அப்போ இந்த ராஜ்யம்?


தீர்வுடன் இளவரசர் திரும்புவார்: வாழ்த்தி அனுப்புங்கள் அரசே!
காட்டில் நான்கு நாள் பயணத்தில் கிருடைப் பனை மரம் வரும்... அருகில் மிகப்பெரிய புற்று இருக்கும்
கூறுங்கள் குருதேவா ?
தினமும் நீ பால் புற்றுக்கு அபிஷேகம் செய். புற்று கரையும் உள்ளே ஒரு முனிவர் இருப்பார். உனக்கு வழி காட்டுவார்





இளவரசன் திரும்புகிறான். இதற்குள் சிவா இன்னும் உயரமாகிறான்!
அதோ இரட்டைப் பனை மரம்
இதோ, குருதேவர் குறிப்பிட்ட புற்று...
தினமும் அபிஷேகம் செய்தான்.
நாளாக ஆக-
புற்று கரைய ஆரம்பித்துவிட்டது
முழுதும் கரைந்து விட்டது!



முனிவர் கண் திறக்க சிவா பணிகிறான்.
இளவரசே! இத்தனை பாடு பட்டு ஏன் அழைத்தாய்?
பெருமானே, பதினைந்து வயதிற்குள் மரமாகி இன்னும் வளர்கிறேன். விடிவே இல்லையா?
போன பிறவியில் மகேந்திரபுரி மன்னனாகி மாளிகை கட்ட மரங்களை அழித்தாய். அவைகளில் வசித்த லட்சக் கணக்கான பறவைகள் இட்ட சாபத்தின் விளைவே இது!


இதற்கு விமோசனம் உண்டா பெருமானே?
உண்டு! மலைச் சரிவில் தினமும் புதிய மரக் கன்றை நடு. மரக் கன்றை நட்டு விட்டேன் என்று பாதாளக் குகைக்குப் போய் கூறு... ஒரு மரக் குச்சி வெளியே வந்து விழும். அதன் புகை பட்டால் தினமும் ஒரு முழம் குறை-வாய்...
நன்றி பெருமானே...
தினமும் ஒரு குச்சிதான் விழும். பொறுமை தேவை. அவசரப்பட்டு குகைக்குள் போய்ப் பார்த்து விடாதே...
மறக்க மாட்டேன் பெருமானே...


தினமும் ஒரு மரக்கன்றை நட்டு...
பாதாளக் குகை வாசலில்...
மரம் நட்டுவிட்டேன்!
உள்ளேயிருந்து..
ஒரு மரக்குச்சி வந்து விழுகிறது...


குச்சியை புகைபடும்படி எரிக்க...
ஆகா, ஒரு முழம் குறைந்து விட்டேனே!
நாட்கள் ஓட உயரம் குறைகிறது
இன்னும் இரண்டே குச்சிதான் தேவை. வாலிபனுக்குரிய உயரம் வந்து விடும்.
இரண்டை நட்டு இரண்டு கேட்டாள் என்ன?..


இரண்டு நட்டேன்...
இரண்டு போடுங்க...
ஒரு குச்சி தானா...?
பெற்றோரைச் சீக்கிரமா பார்க்க ஆசை.. இன்னொன்று போடுங்க...
ஆவலில் இளவரசன் குகைக்குள் போய் விட
அங்கே...
கழுதை முகப்பெண்!
அவசரப்பட்டு விட்டீர்களே!


நான் சுவர்ணபுரி இளவரசி. தேர் பண்ண மரங்களை அழித்தேன். அதில் வசித்த பறவைகளின் சாபம் இது.
தினமும் போடும் கூச்சலா?
நீங்கள் சாதாரண நிலைக்கு வந்தும். எனக்கு விமோசனம்
எனது வாலின் முடிகளே...
நாளை நீங்கள் அயாக்கிவிடுவீர்கள் என் கதிதான்...
வேறு வழியே இல்லையா?...
இருக்கு, கழுதை முகத்துடன் - யாராவது மணந்தால் போதும்...


நான் மணக்கிறேன்...
முனிவர் முன்...
நீதி ஆட்சி நடத்தி நீடூழி வாழுங்கள்
மூலம் : ஆப்பிரிக்க நாடோடிக் கதை
முற்றும்.

வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்க்கக்கூடியவை எவை? நமக்குத் தெரிந்து முதலில் வருவது நாய், பிறகு பூனை. இந்த இரண்டும்தான் நமக்கு மிக மிகத் தெரிந்த செல்லப் பிராணிகள். சில வசதி படைத்தவர்கள் மான்குட்டிகளை வளர்க்கிறார்கள். நமக்கு இவ்வளவுதான் தெரியும். ஆனால் மேல் நாடுகளில் பன்றி, கழுதை, பாம்புகளைக் கூட வளர்க்கிறார்கள்.

அதிகமான இடத்தைப் பிடித்துக் கொள்ளாமல், அதிகச் செலவும் இல்லாமல், வியப்புடனும், அன்புடனும் குழந்தைகள் வளர்க்கக்கூடிய செல்லப் பிராணி எது? சின்னஞ்சிறு குளத்து ஆமைக் குட்டிகள்தான். ஆனால் ஆமைக்குட்டிகளை வீட்டில் வளர்க்க வன விலங்கு பாதுகாப்பு அலுவலகத்தின் அனுமதி அவசியம் தேவை. காரணம் அழிந்து வரும் விலங்கினங்களின் பட்டியலில் ஆமைகளும் உள்ளதுதான்.

பிறக்கும் போது தீப்பெட்டியை விடச் சிறியதாக இருக்கும் குளத்து ஆமைகள், பிறந்த உடனேயே நீந்தவும் நீந்தும், வேடிக்கையாக

ஸ்ரீதேவி






அசைந்து அசைந்து நடக்கவும் நடக்கும். இவை குடுகுடு வென்று ஓடுவது எல்லோரையும் மகிழ்விக்க வைக்கும் காட்சி. இவைகளை வளர்க்க, மீன் வளர்க்கும் தொட்டி போதும். தாவரப்

பாசிகள், கீரை கோஸ் துணுக்குகளை இவை விரும்பி உண்ணும். சில ஆமைகள் சின்னச் சின்னப் புழு பூச்சிகள் கிடைத்தால் ஒரு கை பார்க்கும். ஆனால் எல்லாக் குளத்து ஆமைகளும் இப்படி அல்ல. இனிப்பும் வைட்டமினும் கலந்த கோதுமை மாவு உருண்டைகள் இவைகளுக்குப் பிடித்தமானவை.

கண்ணாடித் தொட்டிகளில் மீன் வளர்ப்பவர்கள், வண்ணமீன்கள் தங்கள் சின்ன வாயைத் திறந்து திறந்து மூடுவதை யும் ஒன்றை ஒன்று துரத்தி நீந்தி மகிழ்வதையும் மீன் தொட்டியின் அருகில் அமர்ந்துதான் கண்டு மகிழ முடியும். இவைகளை வெளியே எடுத்து விட்டோ, கைகளில் வைத்தோ, கொஞ்சிப் பார்த்து ஆனந்திக்க முடியாது. ஆனால், குளத்து ஆமையை வளர்ப்பவர்கள் குட்டி ஆமையை உள்ளங் கையில் வைத்துப் பார்க் கலாம். அது தலையை வெளியே நீட்டி அசைக் கும் நளினத் தையும், சிறு சத்தமோ, மனித அசைவோ அருகில் கேட்டால் தலையை உள்ளே இழுத்துக் கொண்டு கட்டை போல் அசையாது கிடக்கும் அதிசயத்தையும் கண்டு மகிழலாம். மேஜை, புல்வெளிகளில் குட்டி ஆமையைத் தரையில் விட்டு அது நான்கு கால்களால் நடக்கும் நேர்த்தியையும், குடுகுடு வென்று ஓடும் அழகையும் கண்டுகளிக்கலாம்.





• பிரசாத்

வீட்டைச் சுமக்கும் ஆமையே வாடகை எத்தனை சொல்லிவிடு!

ஆமைகளைப் பற்றிய உண்மைகள்

• ஆமைகளின் முன்னோர் பர்மியன் காலத்தைச் சேர்ந்த யூநாட்டோ சௌரஸ் (EUNOTOSAURUS) என்று அறிவியலார் கருதுகிறார்கள். டிரையான் யுகத்திலேயே இவை இருந்திருக்கின்றன.

• தாடைகளில் பற்கள் கிடையா. பதிலாக வெட்டும் தகடுகள் உண்டு. இவை கொம்புப் பொருள் போன்றவை.

முன்னோர் வைத்த மரங்கள்

தென்னை மரத்தில் தேங்காய்கள்
திரண்டு காய்ப்பது எதனாலே?
தின்னச் சுவைக்கும் மாம்பழங்கள்
தேடி வருவது எதனாலே?

புளிய மரத்தில் கொத்தாக
புளியும் காய்ப்பது எதனாலே?
சுளையாய் பலாப் பழம்எல்லாம்
சுவைக்க வருவது எதனாலே?

வீடு கட்டும் மரம்எல்லாம்
விண்ணில் உயர்வது எதனாலே?
காடும் மலையும் தோட்டங்களும்
கதைகள் பேசல் எதனாலே?

காற்றும் மழையும் தவறாமல்
கனிவைத் தருவது எதனாலே?
ஊற்றும் மழையாம் மழைத்துளிகள்
ஊர்ந்து போவது எதனாலே?

அப்பா தாத்தா அவர்முன்னோர்
அவர்க்குப் பின்வரும் சந்ததிக்காய்
ஒப்பில் லாத மரம்நட்டு
உலகிற் குதவ எண்ணியதால்!

— அழகனார்



• 200 சிறப்பினங்கள் உண்டு.

• பிறந்த உடனேயே ஓடு இருக்கும் இவை முதலில் மென்மையாக இருக்கும். பிறகு கெட்டியாகி இறுகிவிடும்.

• கடலாமைகள் பெரும்பாலும் அசைவம். ஆறு, நதிகளில் வசிப்பவையும் பெரு மளவுக்கு அசைவம். நில ஆமைகள் பெரு மளவுக்கு சைவம்.

• நீராமைகள் சாதாரணமாகக் குரல் எழுப்புவது இல்லை. ஆனால் குடும்பம் நடத்த விரும்பும் போது ஆண் ஆமைகள் குரல் எழுப்பும். நட்சத்திர ஆமைகள் உறுமும். தென் அமெரிக்காவில் வாழும் சிவப்புக் கால் ஆமை கோழியைப் போல் கொக்கரிக்கும்.

• புராதன ராட்சச இந்திய இனமான 'சிவாலிக் ஆமைகளி'ன் முதுகு மிகப் பெரியது. இருவர் வசதியாகப் படுத்து உறங்கலாம்.

• நீராமைகளுக்கு நல்ல பார்வைத் திறன் உண்டு. விதவிதமான தாவரக் கொழுந் துகள், நீர்ச்சத்து நிறைந்த காய்களின் பிஞ்சுகள் போன்றவற்றை இவை எளிதில் கண்டு உணரக்கூடியவை.

• கடலாமைகள் முட்டையிடக் கடற் கரைக்கு வரும்.

• இந்தியக் கடற்கரையில் காணப்படும் பச்சை ஆமைகள் இறைச்சிக்காகவே வேட் டையாடப்படுகின்றன.


• ஆமைகள், பகைவர்கள் இல்லையேல் முன்னூறு ஆண்டுகளுக்கும் மேல் உயிர் வரக் கூடியவை.

தமிழ்நாட்டில் சென்னை நகருக்குள் ளேயே கிண்டியில் இருக்கும் பாம்புப் பண்ணையில் உள்ள ஆமை காப்பகப் பிரிவும், மகாபலிபுரம் போகும் வழியில் முட்டுக் காடுக்கு அப்பால் அமைந்துள்ள முதலைப் பண்ணையில் உள்ள ஆமை காப் பகப் பிரிவும் பெருமளவுக்கு ஆமை வளர்ச்சிக்கு, ஆராய்ச்சிக்குத் தொண்டுபுரி கின்றன.

மீன்களைப் போலவே குட்டி ஆமை களும் தொட்டிகளில் செல்லமாக வளர்க்க ஏற்றவை. எளிதில் தீங்கு இழைக்காதவை.

உட்பக்கப் படங்கள் : **ராஜு நாராயண்**
அட்டையில் நட்சத்திர ஆமையுடன் சிறுவன்: **ரஞ்சித்**
அட்டை வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

8. கதை கூறினார்!



முரடர்களில் ஒருவன் 'புவனா, அம்மா அப்பா இல்லாத அனாதை' என்று கூறியதும் டாக்டரும் ரவியும் அதிர்ந்து போய் நின்றார்கள்.

'ஈஸ்வரும் ரமாவும் சென்னையில் இருப்பது இந்த முரடனுக்கு எப்படித் தெரியும்' என்று டாக்டர் எண்ணினார். ரவியும் அப்படித்தான்

புவனா தேடிய

எண்ணினார்.

முரடன் கூறிய பதில் டாக்டரையும் ரவியையும் அதிர்ச்சியடைய வைத்தது. அதைப் பார்த்து பாதுகாப்பு அதிகாரி அதிசயித்தார்.

"என்ன சார், இவன் கூறியதைக் கேட்டு இப்படி அசந்துட்டீங்க!'' என்று கேட்டார் அதிகாரி.

"காரணமாத்தான் சார். புவனாவின் பெற்றோர் சென்னையில் உயிரோடு இருக்கிறார்கள்."

"அது மட்டுமல்ல சார். புவனாவின் அம்மா, எனக்கு சொந்த அக்கா. எங்கிட்டயே வந்து இவன் இப்படி கதைக் கிறான்!'' என்றார் ரவி.

"நல்ல வேடிக்கை!"

"சார், என்னை நம்புங்கள். நான் சொல்றது எல்லாமே உண்மை. புவனாவின் அப்பா பெயர் சுந்தரம். அவர், ராம்தம்பூர் மகாராணாவுக்கு தலைமைச் செயலாளர் மாதிரி. உண்மையான உழைப்பாளி. தன்னுடைய சொத்துக்களின் விவரங்கள் எல்லாம் ராணாவுக்கே கூட முழுக்கத்

மதிஒளி



தெரியாது. ஆனால் சுந்தரத்திற்கு எல்லாம் விரல் நுனியில் இருக்கும். அவர் இல்லாமல்; அவரைக் கலக்காமல் மகாராணா எதுவுமே செய்ய மாட்டார். அத்தனை நம்பிக்கை. அதே மாதிரி சுந்தரமும் உண்மையாக; நம்பிக்கையாக நடந்து வந்தார்'' என்றான் ஒரு முரடன் கதை கூறுவது போல்.

"ஆமாம் சார். ராணாவை விட சுந்தரத்திற்குத்தான் இங்கே அதிக செல்வாக்கு இருந்தது'' என்றான் இரண்டாவது முரடன்.

"அப்போ சுந்தரத்தின் மனைவி...?'' - டாக்டர்தான் முரடனை மடக்கும் எண்ணத்தில் கேள்வி போட்டார்.

"இந்தப் பெண் புவனா பிறந்த உடனேயே சுந்தரத்தின் மனைவி காலமாயிட்டாங்க. எத்தனையோ பேர், இரண்டாவது திருமணம் செய்து கொள்ளச் சொன்னார்கள். ஆனால் சுந்தரம் மறுத்து விட்டார். உதவிக்கு ஆட்களை வைத்து, தன் கண் பார்வையிலேயே தாயற்ற குழந்தையை அவர் கண்ணும் கருத்துமாக, பாசத்தைக் கொட்டி வளர்த்தார். மகாராணாவும் அவரது குடும்பத்தாரும்கூட, புவனாவை மிகவும் நேசித்தனர். ராஜ குடும்பத்துக் குழந்தைகளுடனேயே புவனாவும் வளர்ந்தாள்.''



''அப்போ இந்த புவனாவுக்குப் பெயர் மாலா.''

"ராணாவுக்குக் குழந்தைகள் இல்லை. ஆனால் சொத்தில் உரிமை பெற்ற பல சுற்றத்தார்கள் தங்கள் குடும்பத்தோடு அரண்மனையில், ராணாவின் ஆதரவிலேயே இருந்தனர்.''


"ராணாவிடம் நிலபுலன்கள், மாளிகைகளைத் தவிர ஏராளமான தங்க, வைர நகைகள் இருந்தன. தங்க வெள்ளிக் கட்டிகள் கூட வைத்திருந்தார். எல்லோருக்கும் அதில் ஒரு கண்.''

"கேட்கக் கேட்க அதிசயமாக இருக்கிறதே!'' என்றார் டாக்டர் தன்னை மறந்து.

ரவியும் திகைத்துப் போனவராகக் குழப்பத்துடன் காணப்பட்டார்.

"மகாராணிக்கு நடமாட்டம் நின்று, டைபாய்டு காய்ச்சல் வந்து விட்டது. அதுவே அவரது மறைவுக்குக் காரணமாகி விட்டது'' என்று மறுபடி உற்சாகமாகத் தொடங்கினான் ஒரு முரடன்.

''ராணாவுக்கும் பார்வை போய் விட்டது. அதற்குப் பிறகு, சொத்துக்களைப் பிரிப்பது பற்றி உறவினர்களுக்குள் அடிதடி சண்டை எல்லாம் நடந்தது. சுந்தரத்தின் தலையீட்டினால் தற்காலிகமாக எல்லாம் அடக்கப்பட்டது. இருந்தாலும் ராணா உயிருடன் இருக்கும்போதே நகைகளைப் பிரித்துக் கொடுத்து விட வேண்டும் என்று உறவினர்கள் ராணாவைக் கட்டாயப்படுத்தினார்கள். அந்த சமயத்தில் அரண்மனையின் ஒரு மாளிகையில்



பெரிய தீ விபத்து ஏற்பட்டது. ஏராளமான கலைப் பொருள்கள் சாம்பலாகிப் போச்சு. எல்லா நகைகளும் அதில் அழிந்து போச்சு என்று ராணா கூறி விட்டார். அது உண்மையோ பொய்யோ, யாருக்கும் தெரியாது. ஆனால், யாருமே அதை நம்பவில்லை. ராணா, அவைகளை எங்கேயோ புதைத்து வைத்திருக்கிறார் என்றுதான் எல்லோரும் எண்ணினார்கள். அது மட்டுமல்ல, அந்தப் புதையல் இரகசியம் கண்டிப்பாக சுந்தரத்திற்கும், அவரது நான்கு வயதுப் பெண், சிறுமி மாலாவுக்கும் தெரியும் என்றும் உறுதியாக நம்பினார்கள்."

''அதற்குக் காரணமும் இருந்தது. பார்வை இல்லாத ராணாவை சுந்தரமோ இல்லை மாலாவோதான் கையைப் பிடித்து உலாவ அழைத்து வருவார்கள். மூவரும் மணிக்கணக்காகப் போவார்கள். ராணா, மாலாவுக்குக் கதைகள் கூறுவார். மாலா பாட்டுப் பாடி அவரை மகிழ்விப்பாள். இந்த நெருக்கம் காரணமாக, புதையலின் விவரத்தை மாலாவும் அறிந்திருக்கக்கூடும் என்று எல்லோருமே எண்ணினார்கள்."

"அப்புறம்?" என்று ஆவலாகக் கேட்டார் டாக்டர்.

"திடீரென்று ஒருநாள் மகாராணா காலமானார். ஒரே குழப்பம். சுந்தரத்தை வைத்துக் கொண்டு மகாராஜாவின் உயில்படி நிலபுலன்களும் மாளிகைகளும் பிரிக்கப்பட்டன. நகைகளைப் பற்றி உயிலில் எதுவுமே குறிப்பு இல்லை!"

"விலைமதிப்பற்ற நகைகளை எல்லாம், சுந்தரம் தனக்கு மறைத்து வைத்துக் கொண்டு, தங்களை ஏமாற்றி விட்டார் என்று உறவுக்காரர்கள் வழக்குப் போட்டனர். எல்லாமே தீ விபத்தில் போய் விட்டது என்றும், தன்னிடம் எதுவுமே இல்லை என்றும் சுந்தரம் கூறினார். அவரை அதற்கு மேல் யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. 'உண்மையாகவே சுந்தரம் அப்பாவி. மகாராணாதான் சுந்தரத்திற்குக் கூடத் தெரியாது. நகைகளை மாளிகைக்குள் எங்கேயோ புதைத்து வைத்து விட்டார் என்றும் கூட சிலர் எண்ணினார்கள். சுந்தரத்தின் நேர்மை அந்த அளவுக்கு பிரபலமாகி இருந்தது."

"சுந்தரத்திற்கும், சிறுமி மாலாவுக்கும் புதையல் இரகசியம் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும் என்றே எங்களைப் போன்ற சிலர் நம்பினோம். இதை நம்பாத சிலர், தங்கள் ஏமாற்றத்திற்கு சுந்தரத்தையும் மாலாவையும் பழிதீர்த்துக் கொள்ளத் திட்டம் தீட்டினர். அரச குடும்பத்தினர் இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து வன்மத்தை வளர்த்துக் கொண்டனர். ஒரு முறை சுந்தரத்தையும் மாலாவையும் தீர்த்துக் கட்ட ஒரு முயற்சி நடந்தது."

"இந்த ஆள் கூறும் கதையை எல்லாம் நீங்கள் நம்புகிறீர்களா?" என்று டாக்டரையும் ரவியையும் கேட்டார் அதிகாரி.

"இவர்கள் கூறுவதை முழுக்க முழுக்க நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்



படி வரிசைக்கு மேல் விதானக் கூரையில், மிகப் பெரிய லஸ்தர் விளக்கு ஒன்று தொங்கிக் கொண்டிருக்கும். மாளிகையில் உள்ள, அழகான, கனமான லஸ்தர் விளக்குகளில் அது மிகப் பெரியது. எட்டு வரிசை, கண்ணாடித் துண்டுகள் தொங்கி ஆட, வட்ட வடிவில், தாமரை மலர்ந்தது போல் அது இருக்கும். காற்றில் கண்ணாடித் துண்டுகள் அசைந்தாடும் போது, ஒன்றுடன் ஒன்று முட்டித் தட்டிக் கொண்டு காதுக்கு இனிய ஜலதரங்க இசையை எழுப்பும். அதோடு, வானவில்லின் வண்ண ஜாலங்களை அள்ளி அள்ளி வீசும். நாலைந்து பேர் சேர்ந்தால்தான் அதைத் தூக்கவோ, அசைக்கவோ முடியும். அத்தனை கனம்.''

கவும் முடியவில்லை.

ஆனால், இதில் ஏதோ உண்மை இருக்கலாம் என்றே தோன்றுகிறது. இவர்களிடம் புவனாவைக் கடத்த என்ன காரணம் என்பது வரை கேட்டுக் கொண்டு, என் அக்காவையும் அத்தானையும் வரவழைத்துக் கேட்டால் உண்மை எது பொய் எது என்பது தெரிந்து விடும்'' என்றார் ரவி.

"நல்லவேளை, புவனா இங்கு இல்லை. என் மனைவி பெண்ணுடன் ஓய்வெடுக்க, பாதுகாப்பு அறைக்குப் போய் விட்டாள். இல்லாவிட்டால் புவனாவைத் தேற்றுவது மிகக் கடினம்'' என்ற டாக்டர், "அப்புறம் என்னாச்சு?'' என்று முரடர்களிடம் கேட்டார்.

"மாளிகையில் அழகான சோபா ஊஞ்சல் ஒன்று இருக்கு. அது இருக்கும் பெரிய கூடத்தைக் கடந்ததும், கீழ்த் தளத்திற்கு இறங்கிச் செல்ல வளைந்து செல்லும் மாடிப்படி வரிசை இருக்கு. அந்த மாடிப்

"சுந்தரமும் மாலாவும் மாடிப்படிக்கட்டில் இறங்கும் போது, அந்த லஸ்தர் விளக்கை அவர்கள் தலையில் விழ வைத்து, இருவரையும் தீர்த்துக் கட்டுவதுதான் திட்டம்.''

வீடியோ கேசட்டில், வளைவு மாடிப் படியைப் பார்த்ததும், புவனா மயங்கிச் சாய்ந்த பல நிகழ்ச்சிகளை ரவி நினைவு கூர்ந்தார். டாக்டரிடமும் ஏற்கெனவே அதைக் கூறியிருந்தார். அதனால் இருவரும் பரபரப்படைந்தனர்.

"தந்தையும் மகளும் மாடிப்படியில் கீழே இறங்கினர். மாலா, அழகான ஒரு பொம்மையைத் தன் தோளில் சாத்தினபடி தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு இறங்கிக் கொண்டிருந்தாள். பொம்மை மாடிப்படியில் விழுந்து விட்டது. அப்பாவின் கையை உதறி விட்டு, இரண்டு படி மேலே ஏறி பொம்மையை எடுக்கப் போனாள் மாலா. சுந்தரம் இன்னும் நாலுபடி கீழே இறங்கி விட்டார்.

அந்த நேரத்தில் லஸ்தர் விளக்கு விழ, மிகப் பெரிய சத்தம் எழுந்தது. சுந்தரத்தின் கதை அங்கேயே முடிந்தது. மாலா மட்டும் தப்பி விட்டாள். ஆனால் அந்தக் காட்சியை அருகே இருந்து கண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவளுக்கு அறிவு குழம்பி விட்டது. ஒரு மாதம் பொறுத்துத் தான் நினைவு திரும்பியது. கவனிக்க யாரு மில்லாத அனாதையானாள். யாரோ ஒரு தூரத்து உறவினர் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்று, மதுரையில் அனாதை இல்லத்தின் வாசலில் விட்டு விட்டுப் போய் விட்டார். அங்கே அவளுக்கு ஆத ரவு கிடைத்து பூரண குணமானது என்றா லும், பழைய நினைவுகளை அடியோடு மறந்து விட்டாள். இப்பொழுது பெற்றோ ராக உள்ளவர்கள் மதுரை அனாதை இல் லத்தில் இருந்து மாலாவை எடுத்து வந்து வளர்த்து வருபவர்கள்."

"ஆமாம், இத்தனை விவரங்களையும் அருகே இருந்து பார்த்தது போல் சொல் கிறீர்களே! எப்படி உங்களுக்கு இதெல் லாம் தெரியும்?" என்று கேட்டார் டாக்டர்.

"நாங்கள் இருவரும், சுந்தரத்திடம் வேலை பார்த்தவர்கள்."

டாக்டரும் ரவியும் அதிர்ந்து போய் நின்றார்கள். நல்ல காலம். புவனா இங்கே இல்லை என்று எண்ணிக் கொண்டனர்.

மௌனத்தைக் கலைத்துக் கொண்டு முரடர்களில் ஒருவன் தானாக ஆரம்பித் தான்.

"சுந்தரத்தின் மறைவுக்குப் பிறகு, போக்கிடம் இன்றித் தவித்த எங்களுக்கு அவரை எதிர்த்தவர்கள் வேலை கொடுத்து ஆதரித்தனர். எந்த நோக்கத் தினால் தெரியுமா? புதையல் இரகசியம் சுந்தரத்திற்குத் தெரிந்திருந்தால், அது எங்களுக்கும் தெரிந்திருக்கலாம் என்ற நம்பிக்கையில்! எங்களிடம் எந்த இரகசிய மும் இல்லை என்பது உறுதியானதும் விரட்டி விட்டார்கள். அதுவும் எங் களுக்கு நல்லதாகப் போயிற்று. ஏனென் றால், சுந்தரமும் மாலாவும் அந்தப் புதை யலைப் பார்த்திருக்கிறார்கள் என்ற இரக சியத்தை அவர்களிடம் இருந்து நாங்கள் அறிந்து கொண்டோம்."

"மாலாவுக்கு அப்பொழுது நான்கு வயதுதான் என்றாலும், தெளிவாகக் கூற முடியாவிட்டாலும் ஏதாவது குறிப்புகள் தரக்கூடும் என்ற நம்பிக்கையில் மாலா வைத் தேடித் தமிழ்நாட்டுக்குக் கிளம்பி னோம். மூன்று ஆண்டுகள் அலைந்தது தான் மிச்சம். கண்டுபிடிக்க முடிய வில்லை. நம்பிக்கை இழந்த நிலையில், மதுரையில் தற்செயலாக, மாலாவை அழைத்துப் போன தூரத்து உறவினரைச் சந்தித்தோம். அவரேதான் எங்களைக் கண்டுபிடித்து அழைத்தார். அவர்தான், அனாதை இல்லத்து வாசலில் மாலாவை விட்டு விட்டு வந்ததைக் கூறினார். விசா ரித்தோம். மாலாதான், புவனாவாக வளர்ந்து வருவதை மிகக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்தோம். எந்த அளவுக்கு அவ ளால் எங்களுக்கு உதவக்கூடும் என்பதை அறிய முயன்றோம். எதேச்சையாக கேசட் விவகாரம், புவனா மயங்கியது எல்லாவற் றையும் டாக்டரிடம் ரவி கூறுவதைக் கேட்டோம். வீடியோ டேப்பையும் தந் திரமா எடுத்துக் கொண்டோம். புவனா வைக் கடத்தி இங்கே கொண்டு வந்து, மிரட்டி உருட்டிக் கேட்டால் பலனிருக் கும் என்று எண்ணினோம். இதற்குள், புவனாவே இங்கு வருவதை அறிந்து கடத்த முயன்று சிக்கிக் கொண்டோம்."


"சார், இவர்கள் இருவரும் குற்றவாளி கள். இவர்களைக் காவலில் வைக்க வேண்டும். சீக்கிரம் உங்கள் கதையை முடி யுங்கள்" என்று அவசரப்படுத்தினார் அதி காரி.

அந்த நேரத்தில் –

சட்டென்று விளக்குகள் அணைந்தன. இருள் சூழ்ந்தது.

"சார், தப்பி விட்டார்கள்" என்று கூக் குரல் இட்டார் ஒரு காவலர்.

(தொடரும்)



"என்ன உன் பையன் தத்துவமெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டான்?"

"வேற ஒண்ணுமில்ல. ரெண்டு நாளைக்கு முன்னாடி சாக்ரடீஸ் புத்தகத்தை தின்னுட் டான்.

– ச. மகேஷ்

காட்சி : 1

(நீலா கூடத்தில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். தியாகு பரீட்சை எழுதி முடித்துவிட்ட உற்சாகத்துடன் உள்ளே நுழைகிறான்)

நீலா : என்ன ரொம்ப ஜாலியா வராப் போலிருக்கு!

தியாகு : இன்னியோடு பரீட்சையெல்லாம் முடிஞ்சு போச்சே? அதனாலதான் ஜாலி!

நீலா : ஆமாம், கணக்குப் பரீட்சை எப்படி?



10வது போகப் போறேனே?

தியாகு : வெளுத்துக் கட்டிட்டேன்கா! எல்லாம் 'ஈஸி'! கணக்குலே எனக்குத்தான் ஃபர்ஸ்ட் மார்க்சு கிடைக்கப் போறது பாரு!

நீலா : கேள்வி எல்லாம் அவ்வளவு சுலபமாவா இருந்தது?

தியாகு : கேள்வி-பதிலைப் பத்தியெல்லாம் நான் ஏங்க்கா கவலைப் படணும்? பரீட்சையிலே என் பக்கத்துலே பரந்தாமனே வந்து உட்கார்ந்தான்... நானும் ஈஸியா பேத்து பேத்து வச்சுட்டேன்... எப்படி?

நீலா : என்னடா பேத்தறே?... நீ சொல்றதைப்பாத்தா வகுப்பிலே 'ஃபர்ஸ்ட் ரேங்க்' வாங்கற அந்தப் பரந்தாமனைப் பார்த்து, காப்பியடிச்சு எழுதியிருப்பே போலிருக்கே!

தியாகு : அ...ப்...பா! இதைக் கண்டு பிடிக்க இவ்வளவு நேரமா?... அக்கா!...எல்லா சப்ஜெக்டுலேயும் மனசு திருப்தியா காப்பியடிச்சுட்டேன்... நீ கவலைப்படாதே! நிச்சயமா நான் பாஸ் பண்ணிடுவேன்!

நீலா : இப்படிக் காப்பியடிச்சு, காப்பியடிச்சு பாஸ் பண்றது உனக்கே வெட்கமாயில்லை?

தியாகு : புதுசா காப்பியடிச்சாத் தானே வெட்கம்...? எனக்குத்தான் இது பழகிப்போச்சே!

நீலா : உன்னை என் தம்பின்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமாயிருக்கு!

தியாகு : தம்பின்னு சொல்லிக்க வேண்டாம்... அண்ணன்னு சொல்லிக் கோயேன் அக்கா! நீ ஏன் கோபப்படறே? சூபர்வைசர் கண்ணுக்கு அகப்படாம அழகா கச்சிதமா காப்பியடிக்கிற கலை என்னோட பிறந்த கலை! அந்தக் கலையை

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

விணாக்க எனக்கு மனசில்லை! நீலாக்கா! வேணும்னா சொல்லு, உனக்கும் இந்தக் கலையைக் கத்துத் தரேன். சரி சரி! டிபன் கொண்டு வா!

நீலா : ஆமாம்... நீ படிக்கற படிப்புக்கு டிபன் ஒரு கேடாக்கும்!

தியாகு : நீலாக்கா! இதோ பார்! படிக்கறதுங்கறது எதுக்குத் தெரியுமா?, பாஸ் பண்றதுக்கு 'சர்டிபிகேட்' வாங்கறதுக்கு!... அவ்வளவுதான். எப்படி பாஸ் பண்ணா என்ன? பக்கம் பக்கமா படிச்சு பாஸ் பண்ணா என்ன? அக்கம் பக்கம் பார்த்து எழுதி பாஸ் பண்ணா என்ன? எல்லாம் ஒண்ணுதானே?

நீலா : தியாகு! கண்ணாடித் துண்டு கூட வைரக்கல் மாதிரி கண்ணைப் பறிக்கிறது... இருந்தாலும் வைரக்கல்லுக்கு இருக்கிற பெருமை கண்ணாடிச் சில்லுக்கு வராது இல்லையோ? ஆர்வத்தோட அறிவு வளரப்படிச்சு பாஸ் பண்றது தான் பெருமை! புகழ்! அதை விட்டுவிட்டு காப்பியடிச்சு, காப்பியடிச்சு பாஸ் பண்ணிக்கிட்டிருந்தா கடைசியிலே உன் மூளை மந்தமாயிடும்! நீயும் ஒரு மூலையிலே உதவாக்கரையா உட்கார வேண்டியதுதான்!

தியாகு : சரி, எனக்கு இருபது ரூபா கொடு, நான் எக்ஸிபிஷனுக்குப் போகணும்!

நீலா : ஹுூம்.. நான் கொடுக்க மாட்டேன்!

தியாகு : அக்கா, பவுடர் டப்பா வாங்கறதுக்காக, காலையிலே நீ எங்கிட்டே கொடுத்த இருபது ரூபாயை எடுத்துக்கிட்டுப் போறேன்... டா...ட்...டா!

(தியாகுவின் தந்தை உள்ளே சோர்வுடன் நுழைகிறார்)

தந்தை : டேய், தியாகு, நில்லுடா! நீ எக்ஸிபிஷனுக்கு போக வேண்டாம், மொதல்லே அந்த இருபது ரூபாயை வாசல்லே நிக்கற ஆட்டோக்காரனுக்குக் கொடுத்தனுப்பு.. ஏன் நிக்கறே? போடா!

நீலா : அப்பா ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?

தந்தை : ஆபீஸ்லே எனக்குக் கொடுத்த போனஸ் பணத்தை எங்கேயோ தவறவிட்டுட்டேன்மா! ம்... மளிகைக் கடைக்காரன் பணத்துக்காக இன்னிக்கு வந்து நிக்கப்போறான்... என்ன பதில் சொல்றதுன்னு தெரியல்லே...

நீலா : (யோசித்துவிட்டு) அப்பா... கவலைப் படாதீங்க... கொஞ்சம் இருங்க! இதோ வரேன்! (உள்ளே ஓடிப்போய் ஓர் உண்டியுடன் வருகிறாள்) அப்பா, இந்தாங்க, இந்த உண்டியிலே முந்நூறு ரூபாய் இருக்கு! எடுத்துக்குங்க!

தந்தை : (வியப்புடன்) ஏதும்மா இந்த பணம்?

நீலா : ஒழிந்த நேரத்துலே, தையல் மிஷின்லே துணிதைச்சு சேர்த்து வச்ச பணம்ப்பா!

தந்தை : அடேயப்பா... பரவாயில்லையே! ரொம்ப சந்தோஷம் நீலா! டேய் தியாகு! உன் அக்காவோட புத்திசாலித்தனத்தைப் பாருடா! கஷ்டப்பட்டு, ஒழிஞ்ச நேரத்தைப் பயன்படுத்தி சேர்த்து வச்சிருக்கா! நீ என்னடான்னா எக்ஸிபிஷன் சினிமான்னு அடிக்கடி கண்டபடி பணத்தை சிலவழிக்கறே! ஒரு பைசாவுக்குப் பிரயோஜனமில்லை!



தியாகு : அப்பா! நீலா உங் களுக்கு முந்நூறு ரூபாய் கொடுத் துட்டா... அதுக்காகத்தானே அவளைப் புகழறீங்க? நான் உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக் கிறேன்?

தந்தை : (வியப்புடன்) எப்படிடா?

தியாகு : இந்த விடுமுறையிலே, நேரத்தை வீணாக்காம நானும் எனக்குத் தெரிஞ்ச வேலை பார்த்து சம்பாதிக்கப் போறேன்!

தந்தை : சொல்லாதே. செய்து காண்பி பார்க்கலாம்! சரி, இப்ப வீட்லேயே இரு! நானும் நீலாவும் மளிகைக் கடைவரைக் கும் போயிட்டு வந்துடறோம்!

(தந்தையும், நீலாவும் வெளியே செல் கிறார்கள்)

தியாகு : பணம் சம்பாதிக்க என்ன செய்யலாம்?

கடை முதலாளி : சார்! சார்!

தியாகு : உள்ளே வாங்க சார்!

முதலாளி : அப்பா இல்லையா தம்பி?

தியாகு : கடைக்குப் போயிருக்கார்... நீங்க யார்?

முதலாளி : உங்கப்பாவோட ஃப்ரெண்டு! என் பேர் மகாலிங்கம். சரி, அப்பா வந்ததும் நான் வந்துட்டுப் போனேன்னு சொல்லு! இந்த இன்வி டேஷனையும் அப்பாகிட்டே கொடுத்துடு!

தியாகு : எதுக்குங்க இன்விடேஷன்?

முதலாளி : நாளைக்கு புதுசா கடை ஒண்ணு திறக்கப்போறேன்... திறப்பு விழாவுக்கு அப்பாவைக் கட்டாயம் வரச் சொல்லு நான் வரேன்!

தியாகு : சரி! சார்!... சார்!

முதலாளி: என்ன தம்பி!

தியாகு : நீங்க திறக்கப்போற கடையிலே பகுதிநேர வேலை செய்ய 'பாய்ஸ்' வேண்டியிருக்குமா சார்?



முதலாளி : ஆமாம் தம்பி! இப்பவே நாலு புத்திசாலிப் பசங்களா பாத்து வேலைக்கு வரச் சொல்லணும்! வரேன்!

தியாகு : சார்! சார்! எனக்கு இப்போ விடுமுறை! உங்க கடையிலே வேலை செய் நான் தயார் சார்!

முதலாளி : அப்படியா? தாமஸ் ஆல்வா எடிசன் கூட சின்ன வயசுலே படிக்கும்போதே ஒழிஞ்ச நேரத்துலே வேலை செய்து சம்பாதிச்சாராம்! சரி! உன் வயசு என்ன? இப்ப என்ன படிச்சுக்கிட்டிருக்கே?

தியாகு : 15 வயசு சார்! ஒன்பதாம் வகுப்பு படிச்சு முடிச்சுட்டேன் சார்! பரீட்சை எழுதியிருக்கேன், பத்தாவது போகப் போறேன்.

முதலாளி : ம்... 15 வயசா! பரவாயில்லை! புத்திசாலிப்பையன்தான் எனக்கு வேணும்!

தியாகு : நானும் புத்திசாலிதான் சார்!

முதலாளி : அதை நான்தானே சொல்லணும்! சரி! ஒரு கேள்வி! "ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் யார்? எங்கே சொல்லு பார்க்கலாம்!"

தியாகு : சார், ரொம்ப சுலபமான கேள்வி சார்! பதில் சரியாயிருந்தா வேலை நிச்சயமா சார்?

முதலாளி : நிச்சயம்! சீக்கிரம் சொல்லு!

தியாகு : ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் அபூர்வ சகோதரர்கள்!

முதலாளி : என்ன தம்பி சொல்றே, அபூர்வ சகோதரர்களா?

தியாகு : ஆமாம் சார்! அபூர்வ சகோதரர்களேதான்!

முதலாளி : தம்பி தியாகு, உனக்கு வேலை கிடைக்கறதும் அபூர்வம் தான். விமானத்தைக் கண்டு பிடிச்சது "ரைட் சகோதரர்கள்." எந்த வேலைக்கும் வேண்டியது ஞாபக சக்தி! ...ம்! நல்லா படி தம்பி! நான் வரேன்!

(முதலாளி வெளியேறுகிறார்)

தியாகு : போங்க சார்! பெரிய கேள்வியாம் கேள்வி! பத்தாவது போகப் போறேன். சர்டிபிகேட் இருக்கு போதாதாக்கும்?

(கோபு, மணி, சுரேஷ் கிரிக்கெட் பேட், பந்துடன் உள்ளே வருகிறார்கள்)

தியாகு: வாங்கடா! வாங்க, என்னடா புது கிரிக்கெட்பேட்... புது பந்து?

கோபு : நாங்க ஒரு கிரிக்கெட் கிளப் ஆரம்பிச்சிருக்கோம்! நீயும் அதுலே சேரணுண்டா தியாகு.

மணி : மாசம் ஐந்து ரூபா கட்டணும்! அதுக்கு மொதல்லே இருபது ரூபா அனுமதிக் கட்டணம்!

தியாகு : ஆக மொதல்லே இருபத்தைஞ்சு ரூபா கட்டணுமா... எங்கப்பா கொடுக்கமாட்டாரு.

சுரேஷ் : எங்களுக்கு மட்டும் எங்கப்பாவா கொடுக்கறார்?

தியாகு : பின்னே யார் கொடுப்பாங்க?

கோபு : விடுமுறைப் பொழுதை வீணாக்காம இருக்கறதுக்காக நாங்க மூணுபேரும் ஒரு ரேடியோ கம்பெனியிலே தினம் இரண்டுமணி நேரம் வேலை செய்யறோம்!

மணி : எங்களுக்குப் பிடிச்ச வேலை! அந்தக் கம்பெனி வக்கற போட்டிக்கு தினமும் வர ஆயிரக்கணக்கான கடிதங்களை ஒழுங்குபடுத்தித் தரவேலை!

சுரேஷ் : அவங்க தர பணத்துலேந்து தான் கிரிக்கெட்டுக்காகச் செலவழிக்கிறோம்!

தியாகு : டேய், அந்த ரேடியா கம்பெனியிலே என்னையும் சேர்த்துக்கச் சொல்லுங்கடா!

கோபு : ஓ, சொல்றோம்! ஆனா எங்க முதலாளி உன்னை ஏதாவது கேள்வி கேட்பாரே?

தியாகு : கேள்வியா?

மணி : கேள்வின்னா ஏன் பயப்படறே?


தியாகு : இல்லையே... நான் ஏன் பயப்படணும்! நான்தான்பத்தாவது போகப் போறேனே! சர்டிபிகேட் கூட இருக்கே?

சுரேஷ் : பின்னே என்ன? இன்னிக்குக்

"குழந்தை பச்சை குதிரை தாண்டி விளையாடணுமாம். பச்சை பெயிண்ட் வாங்கிண்டுவந்து முதுகிலே பூசிண்டு வாங்க..."

"..............."

— ஏழ்வரைக்கடியான்



காலையிலே நம்மை மாதிரி 16 வயதுப் பையன் ஒருத்தன் எங்க கம்பெனிக்கு வேலை தேடி வந்தான்!

கோபு : எங்க முதலாளி அவனை ஒரு கேள்வி கேட்டாரு!

மணி : ரேடியாவைக் கண்டு பிடிச்சது யாருன்னு கேட்டாரு!

தியாகு : எவ்வளவு சுலபமான கேள்வி!

சுரேஷ் : மொதல்லே அந்தப் பையன் என்ன பதில் சொன்னான்னு கேளுடா!

தியாகு : என்ன சொன்னான்?

கோபு : ரேடியோவைக் கண்டு பிடிச்சது "மார்க்கோபோலோ"- அப்படீன்னு உளறிட்டான்.

தியாகு : (பலமாகச் சிரித்து விட்டு) ஐயோ சரியான முட்டாள்.

மணி : தியாகு, எங்க முதலாளி இதே கேள்வியை உன்கிட்டே கேட்டா என்ன பதில் சொல்வே?

தியாகு : இதுகூட எனக்குத் தெரியா தாடா? ரேடியோவைக் கண்டு பிடிச்சது "மார்க்கண்டேயன்"-ன்னு சொல்லுவேன்.

சுரேஷ் : என்ன சொல்வே?

தியாகு : ரேடியோவைக் கண்டு பிடிச்சது மார்க்கண்டேயன்'னு சொல்வேன்!

(கோபு, மணி, சுரேஷ் பலமாகக் கேலியுடன் சிரிக்க)

தியாகு : டேய், ஏன்டா இப்படி சிரிக்கிறீங்க?

கோபு : தியாகு- ரேடியாவைக் கண்டு பிடிச்சது "மார்க்கோனி!" மார்க்கண்டேயனுமில்லை, மார்க்கோ போலோவுமில்லை! வாங்கடா போகலாம்! தியாகு, புத்தகத்தைத் திறந்து நல்லா பாடங்களைப் படி! அப்புறம் கிரிக்கெட் விளையாடலாம்... வரோம்! (மூவரும் வெளியேறுகிறார்கள்)


தியாகு : சே! பத்தாவது போக பரீட்சை எழுதியிருக்கேன். சர்டிபிகேட் இருக்கு இதை மதிக்காம பெரிய கேள்வி கேட்பாங்களாம் கேள்வி!

(நீலா உள்ளே வருகிறாள்)

நீலா : என்ன தியாகு அலுத்துக்கறே?

தியாகு : நீ இப்பத்தானே வரே?

நீலா : நீ, ஃப்ரெண்டோட பேசிக்கிட்டிருந்தியே, அப்பவே வந்துட்டேன்! கடைக்கு எண்ணெய் ஜாடியை எடுத்துப் போக மறந்துட்டேன். அதுக்காகத் திரும்பி வந்தப்போ, இங்கே நடந்த பேச்சு



''வாழைப் பழத்தை தோலோடு சாப்பிடச் சொல்லி அறிவுரை பன்றாரே. அவரு என்ன டாக்டரா?''

''இல்லை. போனவாரம் வாழைப்பழத் தோலிலே வழுக்கி விழுந்துட்டாரு.''

– மு. பாலசுப்பிரமணி

வார்த்தையெல்லாம் சுவாரஸ்யமா இருக்கவே, வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்துட்டேன்... ம். கேள்வி-பதிலெல்லாம் பலே ஜோர்! சர்டிபிகேட் இருக்குன்னு சொன்னதும் வேலை தயார்னு சொல்லிட்டாங்க போலிருக்கே!

தியாகு : போக்கா! நீயும் கிண்டல் பண்றியா?... யாரும் சர்டிபிகேட்டைப் பத்திக் கவலைப்படவே இல்லை!

நீலா : தப்பு அவங்க மேலே இல்லை தியாகு! உன் மேலேதான். உன்னை மாதிரி பாடங்களை சரியா படிக்காம, காப்பியடிச்சு பாஸ்பண்ற எல்லாருக்கும் இதே கதிதான். புத்தகங்களை ஒழுங்கா படிச்சு, வகுப்பிலே பாடங்களை நல்லா கவனிச்சிருந்தா, இப்படித் தாறுமாறா பதில் சொல்லி தடுமாறியிருக்க மாட்டே! உன்னை மாதிரி குறுக்கு வழியிலே பாஸ் பண்றவங்ககிட்டே இருக்கிற சர்டிபிகேட், உண்மையிலே ஒரு செல்லாத ரூபாய் நோட்டு மாதிரிதான்!... திறமையில் லேன்னா, உன் சர்டிபிகேட்டை யாரும் மதிக்க மாட்டாங்க!

தியாகு : ஆமாங்க்கா!...காப்பியடிச்சு பாஸ் பண்றது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போ புரிஞ்சுக்கிட்டேன்! இனி மேல் நான் காப்பியடிக்கவே மாட்டேன்!

நீலா: சபாஷ் தியாகு! நம் தேசபிதா காந்தியடிகளுக்குக்கூட சின்ன வயசிலே காப்பியடிக்க எழுத சந்தர்ப்பம் கிடைச்சது! ஆனா மகாத்மாஜி காப்பியடிக்க மறுத்துட்டார். தெரியுமில்லை...

தியாகு : ஆமாங்க்கா! படிச்சிருக்கேன். இனிமே பாடத்தைப் புரிஞ்சு படிச்சு, பரிட்சை எழுதுவேன். காப்பியடிக்க மாட்டேன்.

முன்னொரு காலத்தில் வல்லாளன் என்றொரு பேரரசன் இருந்தான். அவன் பெரிய கொடை வள்ளல். அவன் கேட்பவர் எல்லோருக்கும் அள்ளிக் கொடுப்பதிலேயே முழுக் கவனம் செலுத்தியதால், அந்தநாடு வலுவிழந்த நாடாயிற்று.

இதனை அறிந்த பக்கத்து நாட்டு அரசன், அந்த நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று, வல்லாளனைத் தோற்கடித்து அவனது நாட்டை அபகரித்துக் கொண்டான். வல்லாளன், தன் மனைவி, மக்களுடன் காட்டுக்குள் சென்று தலைமறைவாக வாழ்ந்து கொண் டிருந்தான்.

எந்த நிலையிலும் வல்லாளன் உதவுவான் என்று நம்பி, அவனைத் தேடி ஒரு முனிவர் வந்தார். அந்த நிலையிலும் வல்லாளன் முனிவரை வரவேற்று நலம் விசாரித்தான்.

"அரசே! ஒரு மருத்துவமனை கட்ட விரும்புகிறேன். அதற்கு நீங்கள் நிதி உதவி செய்ய வேண்டும்" என்றார் முனிவர்.

வல்லாளன் சற்றும் யோசிக்காமல், "ஆகட்டும் சுவாமி! கண்டிப்பாகத் தருகிறேன். முதலில் நீங்கள் போய்க் குளித்துவிட்டு வாருங்கள். சாப்பிடலாம்" என்றான்.

முனிவர் குளிக்கக் கிளம்பினார்.



தம்மால் எதுவும் தர இயலாத நிலையில், முனிவரிடம் 'இல்லை' என்று சொல்லக் கூசிய வல்லாளன், இறப்பதே மேல் என்று முடிவு செய்து அங்கே இருந்த பாம்புப் புற்றுக்குள் கையைவிட்டான்.

புற்றுக்குள் இருந்த கருநாகம், கையைக் கண்டதும் சீற்றமடைந்தாலும்,



நூலகம்

பள்ளிக் கூடமும் நூலகமும்
படிப்பவர்க் கிரண்டு கண்களென
கல்லா தாரும் அறிவாரே;
கற்கை நன்றென உணர்வாரே!

அகர முதல எழுத்தெல்லாம்
அறியச் செய்வது பள்ளியெனில்
சகலமும் அறிந்த மேதையென
சாற்றிடச் செய்வதும் நூலகமே!

கையில் கக்கி விட்டுச் சுருண்டு கொண்டது.

கரத்தை வெளியே எடுத்த



வள்ளல் அளித்த நன்கொடை!

அது சிவந்திருப்பதைக் கண்டு வியந்தது. அந்தச் சிவப்பு பிறர் துன்பம் கண்டு மனம் கசிந்து கொடுத்துக் கொடுத்துச் சிவந்த காய்ப்புச் சிவப்பு என்பதை அறிந்து மகிழ்ந்தது.

"இது ஒரு கொடை வள்ளலின் கரம்! இதை நாம் தீண்டக் கூடாது. இதைப் பெருமைப் படுத்த வேண்டும்" என முடிவு செய்த கருநாகம் தன் வாயிலிருந்த மாணிக்கக் கல்லை அந்தக் வல்லாளன், மாணிக்கக் கல்லைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டான்.

'முனிவருக்கே இதைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தான்.

சற்று நேரத்தில் முனிவர் வந்தார். அவருக்கு உணவளித்தபின், மாணிக்கத்தை அளித்து வணங்கினான் வல்லாளன்.

வி.ஏ. சுப்பையன்

ஆசான் இன்றிக் கற்றிடவும்
அனுபவ அறிவு பெற்றிடவும்
தேச நட்பு தெரிந்திடவும்
தினமும் உதவிடும் நூலகமே!

வயது வரம்பு கிடையாது:
வாழ்க்கை வசதி தேவையில்லை!
சுயமாய் கற்றுத் தேர்ந்திடலாம்:
சுதந்திர புருஷனாய்த் திகழ்ந்திடலாம்!

பள்ளிக் கல்வி மட்டும்தான்
பயன்தரும் என்று எண்ணாதீர்;
உள்ள படிக்கு நூலகம்தான்
உதவிடும் என்பதை மறவாதீர்!

நூலகம் இல்லா ஊரினிலே
நுழைதல் கூட பாவமெனும்
காலம் ஒருநாள் வரக்கூடும்;
கண்டு தெளிவீர் தம்பிகளே!

பள்ளிகள் போலும் நூலகமும்
பரந்து விரியச் செய்திடுவோம்;
இல்லா ஊரே இல்லையென
எங்கும் நூலகம் அமைத்திடுவோம்!

அ. சுப்பையன்

பாவம் நரி!

அந்தக் காட்டில் நன்கு ஓங்கி வளர்ந்த பெரிய மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் உச்சியில் ஒரு கழுகு கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தது. அம்மரத்தின் அடியில் இருந்த பொந்தில் ஒரு பூனை வசித்து வந்தது. கழுகுக்கு மூன்று குஞ்சுகளும், பூனைக்கு நான்கு குட்டிகளும் இருந்தன. கழுகும், பூனையும் இணைபிரியாத நண்பர்களாகவும் இருந்தன.

ஒருநாள் அந்தக் காட்டின் சோற்று மூட்டை ஒன்றைக் கண்டது கழுகு. அந்த மூட்டை ஒரு வேடனுக்குச் சொந்தமானது. வேடன் அதை அந்த இடத்தில் வைத்து விட்டு வேட்டையாடச் சென்று விடுவான். திரும்ப வந்து சாப்பிடுவான். ஒருநாள் அவன் திரும்பி வந்து பார்த்தபோது. சோற்று மூட்டையைக் காணவில்லை.

வேடன் சோற்று மூட்டையை வைத்து விட்டுப் போனவுடன் கழுகு அதை கொத்திக் கொண்டு தன் இருப்பிடத்துக்கு வந்து விட்டது. கழுகின் வருகைக்காகக் காத்திருந்தது பூனை. கழுகு கொண்டு வந்த மூட்டையை பூனை பிறாண்டிக் கிழித்தது. அதில் இருந்த உணவை கழுகும், பூனையும் பகிர்ந்து உண்டன. இப்படியாகச் சில நாட்கள் வேடனின் சோற்று மூட்டையைத் தூக்கி வந்து சாப்பிட்டன கழுகும், பூனையும்.

வேடன் தினம், தினம் ஏமாந்தான். ஒரு நாள் இதைக் கண்டுபிடிப்பதற்காக சோற்று மூட்டையை வழக்கமான இடத்தில் வைத்து விட்டு மரத்தின் பின்புறத்தில் ஒளிந்து இருந்து பார்த்தான். கழுகு வந்தது. தூக்கிச் சென்றது. பின்பு கழுகும், பூனையும் பகிர்ந்து உண்டன. இதை மறைந்திருந்து பார்த்துவிட்டான் வேடன். தன் உணவு பறிபோனதைக் கூட எண்ணி வருந்தாமல். கழுகும், பூனையும் இப்படி இணை பிரியாது உணவு உண்டதை அவன் மகிழ்ச்சியாகக் கண்டுகளித்தான்.

அது முதல் வேடன் இரண்டு சோற்று மூட்டைகளைக் கொண்டுவரலானான். ஒன்றைக் கழுகு வரும் இடத்தில் வைத்து விடுவான். மற்றொன்றைத் தன்னுடன் வைத்துக் கொள்வான். தினமும் இப்படியே நடந்தது.

இதையெல்லாம் தினமும் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு நரி. தனக்கு அந்த அருமை யான சோற்று மூட்டை கிடைக்கவில்லையே என்று அது ஏங்கியது.

அந்த மூட்டை தனக்குக் கிடைப்பதற்கு என்ன வழி என்று யோசனை செய்தது நரி. நரிதான் தந்திரத்தில் புலியாச்சே! கழுகிடம் சென்றது.

''கழுகாரே! உம்முடைய குஞ்சுகளைத் தின்பதற்கு பூனை தக்க சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. வேண்டுமென்றால், நாளை பாரும். பூனை வெளியே செல்லவே சொல்லாது'' என்றது.

கழுகும் மறுநாள் கூட்டுக்குள்ளேயே இருந்து கவனித்தது. வழக்கப்படி சோற்று மூட்டையை எடுக்க அது செல்லவேயில்லை.

நரி பூனையிடம் சென்றது. ''பூனையாரே நாளைக்கு உனது குட்டிகளைக் கழுகு தின்னப் போகிறதாம். பாரேன். நாளைக்குக் கழுகு கூட்டை விட்டே வெளியில் செல்லாது. சோற்று மூட்டையும் எடுத்து வராது'' என்று கூறியது.

இது இப்படி இருக்க, வேட



னின் மனைவி, "ஏன், தினமும் இரண்டு சோற்று மூட்டைகளை எடுத்துச் செல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.


தினமும் ஏதோ சாக்கு போக்குகளைச் சொல்லி வந்த வேடன் அன்று உண்மையைச் சொல்லி விட்டான். வேடனின் மனைவிக்கு மிகக் கடுமையாக கோபம். கழுகும் பூனையும் சாப்பிட நாம் சமைத்து அனுப்புவதா என்று ஆத்திரப்பட்டாள். அன்றைய தினம் விஷம் கலந்த உணவை சிறிய மூட்டையாகக் கட்டி, "இந்த மூட்டை கழுகாருக்கு" எனத் தனியாக கொடுத்தாள். இதை அறியாத வேடன் விஷம் கலந்த உணவை கழுகுக்கு வைத்து விட்டுச் சென்றான்.

அந்தோ பாவம்! வந்தது கழுகு அல்ல! நரிதான். நரி சோற்று மூட்டையை ஆவலுடன் பிரித்தது. அதில் இருந்த சாப்பாட்டை ஆவலுடன் சாப்பிட்டது. அதுதான் விஷம் கலந்த உணவாயிற்றே? அவ்வளவுதான் சிறிது நேரம் கழித்து அந்த இடத்திலேயே இறந்தது.

இதனைக் கழுகும், பூனையும் கவனித்து சிந்தித்தன. நரியின் தந்திரத்தையும் அறிந்தது. இரண்டும் மீண்டும் நண்பர்களாக ஆயின.

நரி வினை விதைத்தது. அதன் விளை வைத்தானே அறுவடை செய்து கொண்டது.

– தக்கோலம். அ. முஸ்தபா








• முதல் வானொலி ஒலிபரப்பு நிலையம் எங்கு ஆரம்பிக்கப்பட்டது?- பாளை சொ. அடைக்கலராஜ்

உலகின் முதல் வானொலி ஒலிபரப்பு நிலையம் புடாபெஸ்ட்டில் (BUDA-PESTH)



1893ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடங்கப் பட்டது. அப்பொழுது இதற்குப் பெயர் டெலிஃபோன் ஹிர்மண்டோ. இதன்பொருள் டெலிபோன் வழிச் செய்திகள். காலை எட்டு முதல் இரவு பதினொன்று வரை தனது சந்தாதாரர்களுக்காக இது நிகழ்ச்சிகளை ஒலிபரப் பியது.

• தற்பொழுது பிரபலமாகிவரும் க்ரெடிட் கார்டுகளை (CREDIT CARDS) முதலில் யார் கண்டு பிடித்து அறிமுகப்படுத்தினார்கள்?- ராணிப்பேட்டை வா. செல்வமணி.

க்ரெடிட் கார்டுகளை தோற்றுவித்த பெருமைக்கு உரியவர்கள் நியூயார்க்கைச் சேர்ந்த RALPH SCHNEIDER'S DINERS CLUB என்ற அமைப்பு. குறிப்பிட்ட இருபத்தேழு ஓட்டல்களில் சாப்பிட இந்த க்ரெடிட் கார்டு முறை இதன் உறுப்பினர்களுக்கு 1950ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தியது. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் என்ற வங்கி இதைத் தன் வாடிக்கையாளர்களுக்கு 1963 செப் 10 அன்று அறிமுகப்படுத்தியது.

• விடிவெள்ளி என்று எங்கள் பாட்டி அடிக்கடி கூறுகிறார். அது என்ன? - தம்மப்பட்டி சொ. அன்னம்மா.

விடிவெள்ளி என்று நமது பெரியவர்களால் குறிப்பிடப்படுவது வீனஸ் (VENUS) கிரகமே. தமிழில் வெள்ளி, சுக்கிரன் என்றும் இது அழைக் கப்படுகிறது.

• கடலுக்கு அடியில் இதுவரை மனிதர்கள் தங்கி இருந்திருக்கிறார்களா?- மஞ்சள்குப்பம் கி. பழனியாண்டி நண்பர்கள்

1964ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஜெ.லிண்ட்பெர்க், ராபர்ட் ஸ்டெனூயிட் என்ற இருவரும் கடலுக்கு அடியில் 432 அடி ஆழத்தில் 49 மணி நேரம் தங்கி சாதனை புரிந்துள்ளனர்.

• சனி கோளைச் சுற்றிக் காணப்படும் வளையம் எதனால் உருவானது? இது எத்தனை தொலைவு பரந்துள்ளது?- வல்லக் கோட்டை தூ. பெரிய நாயகி.

இந்த வளையம் சுமார் 36 ஆயிரம் மைல்கள் பரந்துள்ளன. இவை பலகோடித் துணுக்குகளால் உருவானவை.

• மீனவன் என்ற பெயர் எதைக் குறிப்பது?- விருது நகர் ஜான்பாண்டி.

மீனவன் என்பது பாண்டிய மரபினருக்கு உரிய பட்டப் பெயர்களில் ஒன்று. மீனைக் கொடி யாகக் கொண்ட மரபினன் என்பது பொருள். இது இலக்கியத்தைப் பொருத்தவரை. இன்றைக்கு வழக்கத்தில் உள்ளபடி 'மீனவன்' என்பது, மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்களைக் குறிக்கும் பெயர்.

கிரெடிட் கார்டை கண்டுபிடித்தது யார்?


கேளுங்கள் சொல்லப்படும்



• **அதிக புவிசர்ப்பு விசையைக் கொண்டது பூமிதானே?- வாலாஜாபாத் தெ.ஞானசௌந்தரி.**

இல்லை. கோள்களில், பூமியைவிட வியாழன் கோளில்தான் புவிசர்ப்பு விசை அதிகம். இங்கு பூமியில் இருப்பதைவிட சுமார் 1½ பங்கு கூட!


• செயற்கைக் கோளை, தொலைக்காட்சியை ஒளிபரப்பப் பயன்படுத்திய முதல் நாடு அமெரிக்காதானே?- பெருமங்கலம் மு. பாக்கியலட்சுமி.



அமெரிக்கா இல்லை. கானடாதான் இந்தப் பெருமைக்கு உரியது. கானடா டெலிவிஷன் சர்வீஸ் (சி.டி.எஸ்) என்ற கானடா நிறுவனம், செயற்கைக் கோள் வாயிலாக ஒளிபரப்ப வேண்டும் என்பதற்காகவே 1976ஆம் ஆண்டில், சி.டி.எஸ். என்ற பெயர் கொண்ட செயற்கைக் கோளை ஏவியது.

• **சிறுவர்களுக்காக வரலாற்று நாவல்கள் ஏதாவது வெளிவந்திருக்கிறதா?- திண்டுக்கல் பெரு. நாகரத்தினம்.**

அதிக எண்ணிக்கையில் சிறுவர்களுக்கான வரலாற்று நாவல்கள் எழுதப்படவில்லை என்றே கூற வேண்டும். டாக்டர் பூவண்ணனின் 'பல்லவ மல்லன்', 'ஆளப் பிறந்தவன்', 'புலவர் மகன்' ஆகியவையும் கோகுலத்தின் கௌரவ ஆசிரியரின் 'பகையை வென்ற பல்லவன்', 'கார் வண்ணன் கண்ட கனவு', 'பாண்டிய பரதன்', சிறை மீட்ட செல்வன்' ஆகியவையும் குறிப்பிடத்தக்கவை. கோகுலத்தில் தொடர்கதையாக வெளிவந்த கே.கே.கோமனாவின் 'அரியணைப்படிகளும்' இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியதே. இவை தவிர ஜோதிர்லதா கிரிஜாவும், அழ. கிருஷ்ணமூர்த்தியும்(அழகி) பல முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். இருப்பினும் இவை போதாது. இதற்கு அதிக முயற்சியும், உழைப்பும் தேவை. அதற்குத் தக்க பொருள் வரவும் புகழும் கிடைப்பதில்லை. ஊக்குவிப்பாரும் இல்லை.



• **யானையின் தந்தங்கள் வெண்மையாகத் தான் இருக்குமா?- கோவை சா. சாகுல் அமீது.**

தந்தத்தின் நிறம் வெண்மைதான். விதிவிலக்காக ஆப்பிரிக்காவில் கறுப்பு' தந்தமுடைய யானைகளும்கூட இருக்கின்றன. ஆனால், இது அதிசயம்.


• கில்லாடி என்பது இந்தி அல்லது பஞ்சாபிச் சொல்தானே? சின்னாளம் பட்டி கு. முத்துமணி.

கில்லாடி என்பது இந்தியும் அல்ல. பஞ்சாபியும் அல்ல. மராட்டிய சொல். ஆனால் இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இடம்பிடித்து விட்ட சொல்!

• ***20,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் அதிசய நிகழ்ச்சி ஏதாவது கூற முடியுமா?- குண்டூர் மா.ஜோகன்ராஜ்.***

20,000 ஆண்டு என்ன, 25,000 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் அதிசயம் இதோ. பௌர்ணமியே இல்லாத பிப்ரவரி மாதம் 1866ல் தான்


சேரநம்பி



வந்தது. மறுபடி 25,000 ஆண்டுகளுக்குப் பிறகே இம்மாதிரி ஏற்படும்!

• கட்டி வைத்த பூச்சரத்தில் இருந்து ஒரு பூவை இழுத்தால்கூடப் பூ பிய்ந்து விடுகிறது. அதே சரத்தில் இருந்து மறுநாள் பூவை மிக எளி தாகப் பிய்க்க முடிகிறதே! இது எதனால்?- நாகை தா. ஜாபர்அலி.


கட்டிய அன்று, மலர்களில் நீர்ச்சத்து நிறைந்து, தொடுக்கும்போது இறுகி இருக்கும்.



அதனால் இழுத்தால், மலர் பிய்ந்து விடுகிறது. ஆனால், மறுநாள் மலர் வாடி நீர்ச்சத்துக் குறைந்து விடுகிறது. அதனால் பூக்கள் வாடி இளைத்து விடுகின்றன. எனவே, வாடின சரத்தில் இருந்து ஒரு மலரை இலேசாக இழுத்தால் கூட, பூ எளிதில் வந்து விடுகிறது.

• பாம்பு, புற்றைக் கட்டுமா?- சிவகங்கா. நிவா. தென்னவன்.

பாம்புப் புற்று என்று குறிப்பிடுவது எல்லாம் கறையான்களின் அல்லது வெள் எறும்புகளின் புற்றுகளே. அவைகளில் பாம்பும் வசிக்கலாம். ஆனால் பாம்புக்கும், எறும்புப் புற்றுக்கும் சம்பந்தமே இல்லை.




• இந்தியத் திரைப்படங்களில் அதிக எண்ணிக்கையிலான பாடல்களைக் கொண்ட திரைப்படம் எது? எம்.கே.டி. பாகவதர் நடித்த சிந்தாமணி தானே?- தென்காசி கா. நந்த கோபால்.

பொது அறிவுக் கேள்வி என்பதால் இதற்கு பதில் தரப்படுகிறது. அதிக எண்ணிக்கையிலான பாடல்களைக் கொண்ட திரைப்படம் என்ற பெருமைக்கு உரியது சிந்தாமணி அல்ல. இந்திர சபா என்ற இந்திப் படம். இதில் 71 பாடல்கள் இருந்தன!

• பிரபல டைரக்டர் சத்யஜித்ரே, தமிழ் நாட்டு நடன கலைஞர் ஒருவரைப் பற்றிப் படம் எடுத் திருக்கிறார் என்கிறார்களே. யார் அந்த நடனக் கலைஞர்.- வேலூர் தா. பத்மபிரியா.

பாலசரஸ்வதி என்ற நடனக் கலைஞர். அமர ராகிவிட்ட இவரது விரல்களும் விழிகளும் பேசும்! இந்த அற்புதமான கலைஞரைப் பற்றித் தானே விரும்பி ஒரு டாகுமெண்டரிப் படத்தை சத்ய ஜித்ரே எடுத்தார். இதன் தலைப்பு "பாலா". இது தமிழ் நாட்டுக்குப் பெருமைதானே?



17 பெரிசா, 43 பெரிசா டாடி?"
அப்போ, 17வது ரேங்க்லேருந்து 43வது ரேங்க் போயிட்டியா?

- சீர்காழி வி. ரேவதி

எனக்கு என்ன வருத்தம்?

ஜி. இந்திரா

காசி நகரில் வெகு காலத்திற்கு முன்பு ஒரு வினோதப் பழக்கம் இருந்தது. அங்கு ஆளும் மன்னர்களின் ஆட்சிக் காலம் ஐந்து ஆண்டுகள் மட்டும்தான். ஐந்து ஆண்டுகள் முடிந்த பிறகு அந்த மீன்னரின் கையைக் காலைக் கட்டி கங்கைக்கு மறுகரையில் உள்ள காட்டின் நடுவில் காட்டு மிருகங்களுக்கு விருந்தாக அனுப்பி விடுவார்கள். ஆகையால் வெகு சிலரே காசிக்கு மன்னனாக இருக்க விரும்புவார்கள். அப்படி வர விரும்பும் மிகச் சிலரும் கொஞ்ச காலத்திற்காவது நல்ல வசதிகளை எல்லாம் அனுபவித்து விட்டு உயிரை விடலாம் என்ற எண்ணத்தில்தான் முன்வருவார்கள். மொத்தத்தில் அரச பதவியை முள் கிரீடமாகவே எண்ணி பெரும்பாலோர் தவிர்த்தனர்.

ஒவ்வொரு மன்னனின் ஐந்தாம் ஆண்டு ஆட்சிக் காலம் முடிந்ததும், ஒரு அலங்காரப் படகைத் தயாரிப்பார்கள். அமைச்சர்கள் புடைசூழ மன்னன் இறுதி யாத்திரைக்கு அப்படகில் ஏற்றி வழி அனுப்பப்படுவான். இதைக் காண மக்கள் வெள்ளமாகக் கூடுவார்கள். இந்த வழக்கப்படி நந்திவர்மன் என்ற மன்னனும் தனது ஐந்தாண்டு கால ஆட்சி முடிந்து இறுதியாத்திரைக்குத் தயாரானான்.

இதற்கு முன் வழி அனுப்பப்பட்ட மன்னர்கள் தங்கள் ஆட்சிக் காலம் முடிந்து விட்டதே என்ற கவலையுடன் மரண பீதியுடன் காணப்படுவார்கள். ஆனால் நந்திவர்மன் அப்படி எவ்விதமான பீதியும் இன்றி மிகவும் சந்தோஷத்துடன் படகில் ஏறியதைப் பார்த்து படகோட்டிக்கு மிகவும் ஆச்சர்யமாய் இருந்தது. மன்னனுக்கு தன் விதியைப் பற்றிச் சரியாக தெரியாததால் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறாரோ என்ற சந்தேகம் அவனுக்கு. ஆகையால் 'மன்னா! படகு எதிர்க் கரைக்குப் போனதும் உங்கள் உடல் மிருகங்களுக்கு இரையாகப் போவதை நினைத்து உங்களுக்குப் பயமாக இல்லையா?' என்று கேட்டான்.

அதற்கு மன்னன் பெரிதாக சிரித்ததைப் பார்த்துப் படகோட்டிக்கு வருத்தமாக இருந்தது. அவன், 'மன்னா! நீங்கள் தப்பிப்பது நடக்காது. கை, கால்களை கரைக்குப் போனதும் நன்கு கட்டிப் போடப் போகிறேன். உங்களை தப்ப விடவும் மாட்டேன்'' என்று கூறினான்.

இப்பொழுதும் மன்னன் சிரித்துக் கொண்டே இருந்தான்.

படகோட்டிக்கு விசித்திரமாகவும், ஆச்சர்யமாகவும் இருந்தது.



காட்டு மிருகங்களுக்கு இரையாவதைப் பற்றிக் கொஞ்சம் கூடப் பயமாக இல்லையா?

''அட முட்டாளே! கங்கைக்கு மறுகரையில் காடுதான் இருக்கிறதென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அப்படியென்றால் மறுகரைக்கு நீ வெகு காலமாகச் செல்லவில்லை என்றுதான் ஆகிறது. நான் ஆட்சிக்கு வந்தவுடன் என்னுடைய விதியைப் பற்றி அதிகமாகவே யோசித்தேன். நீ நினைப்பது போல் இப்பொழுது அங்கு காடு கிடையாது. காட்டு மிருகங்



களும் கிடையாது. நான் மற்ற மன்னர்களைப் போல் முட்டாள் இல்லை. நான் ஆட்சிக்கு வந்த உடனேயே இதைப் பற்றி நன்கு யோசித்தேன். அதற்காக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தேன். எனக்கு அளிக்கப்படும் நரகத்தை சொர்க்கமாக்க முடிவு செய்தேன். கங்கைக்கு மறுகரையிலிருந்த காட்டை சொர்க்கமாக்க நடவடிக்கை எடுத்தேன்.

''என்னுடைய முதலாவது ஆண்டு ஆட்சிக் காலத்தில் வேட்டைக்காரர்களை மறு கரைக்கு அனுப்பி அங்குள்ள காட்டு மிருகங்களை வேட்டையாடச் சொன்னேன். அவர்களும் அதைச் செவ்வனே செய்து முடித்தார்கள். இரண்டாவது வருட ஆட்சியில் விறகு வெட்டிகளை அங்கு அனுப்பி காட்டு மரங்களை எல்லாம் வெட்டச் செய்தேன். மூன்றாவது வருடத் தில் பல கட்டட வல்லுனர்களை அனுப்பி அழகான அரண்மனைகள், இனிமையான தோட்டங்கள், அழகான பூஞ்சோலைகள், நீச்சல் குளங்கள், பிரும்மாண்டமான அரங்குகள் போன்றவற்றை நிர்மாணிக்கச் செய்து அந்த இடத்தையே சொர்க்கமாக்கி விட்டேன். நான்காவது வருடத்தில் எனக்கு மிகவும் நம்பிக்கை யான சிலரைத் தேர்ந்தெடுத்து அமைச்சர்களாக்கி அங்கு அனுப்பி உள்ளேன். காசியில் உள்ள நம்பிக்கையான, மற்றும் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து அந்தப் புதிய நகரில் வசிக்கச் சொல்லியுள்ளேன். அவர்களுக்கெல்லாம் சொந்தமாக வீடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பொழுது உள்ள அரண்மனையைக் காட்டிலும் அழகும் வசதியும் நிறைந்த புதிய நகருக்குச் சென்று வசிக்க எனக்கு என்ன வருத்தம்? அதோ பார்! என்னை வரவேற்க அமைச் சர்கள் தாள வாத்தியங்களோடு தயாராக வந்திருக்கிறார்கள்' என்று நந்திவர்மன் சொன்னதைக் கேட்டு படகோட்டி திகைத்துப் போனான்.



ஒப்பகல்...


சீனிவாசனுக்கு பிறரை ஏமாற்றுவதென்றால் கொள்ளை ஆசை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் பிறருடைய பணத்தையோ பொருளையோ அபகரித்துக் கொள்வான்.

ஒருமுறை சீனிவாசன் பஸ்ஸில் ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். வண்டி புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. ஒரு பையன் ஜன்னலோரமாய் வந்து "..சார்... சார்... லாட்டரி சீட்டுகள் சார்... வாங்கிக்குங்க சார்..."என்று சீனிவாசனிடம் சீட்டுகளை நீட்டினான்.

சீனிவாசனுக்கு ஏமாற்றும் புத்தி தலை தூக்கியது.

"சரி கொடுப்பா" என்று வாங்கி அதன் எண்களைப் பார்க்கத் துவங்கினான். டிரைவர் ஏறி உட்கார்ந்து விட்டார். பஸ் புறப்படப் போகிறது. பையன் அவசரப்படுத்தினான். "பஸ்ஸை எடுக்கப் போறாங்க... சீக்கிரம் சீட்டை எடுத்துக்கிட்டு பணம் கொடுங்க சார்..."

சீனிவாசன் அலட்டிக் கொள்ளவே இல்லை.பொறுமையாகவே இருந்தான். அவன் எதிர்பார்த்தபடியே பஸ் புறப்பட்டது. பையன் கத்தியபடியே கூடவே சிறிது தூரம் ஓடிவந்தான். பஸ் வேகம் எடுத்தது. சீனிவாசன் பணம் கொடுக்கவே இல்லை.



ஊர் வந்தது...

பஸ் ஸ்டாண்டில் இறங்கி பணம் கொடுக்காமலேயே இருபது லாட்டரிச் சீட்டுக்களை வாங்கிய மகிழ்ச்சியில் பக்கத்தில் இருந்த ஹோட்டலில் நுழைந்தான் சீனிவாசன்.

வயிறு நிரம்பச் சாப்பிட்டு விட்டு பில் கொடுக்க பாக்கெட்டில் கைவிட்டவன், அதிர்ந்தான்.. அவன் பர்ஸைக் காணவில்லை... பஸ்ஸில் இருந்த நெரிசலில் யாரோ பிக்பாக்கெட் அடித்து விட்டிருந்தார்கள்! பஸ் ஸ்டாண்டில், லாட்டரிச் சீட்டுப் பையன் பரிதாபமாக ஓடிவந்து ஏமாந்தது மனதில் நிழலாடியது.

ஹோட்டல் முதலாளியிடம் எவ்வளவு கெஞ்சியும் பலனில்லை. நீண்ட நேரம் கை வலிக்க மாவாட்டியவன், இனி எவருக்கும் தீங்கு இழைக்கமாட்டேன் என்று மனதில் முடிவுசெய்து கொண்டு புதுமனிதனாய் வெளியே வந்தான்.

இரா.அ. தென்றல் நிலவன்

காட்டில் கலப்படம்!

அன்று புள்ளிமான் குட்டிக்குப் பிறந்தநாள். அம்மா புள்ளிமான் தடபுடலாக விருந்து சமைத்திருந்தது. ரவாகேசரி, பூரிமசால், பாயசம் என்று ஏகதடபுடல்!

மான்குட்டி குளித்துப் புதுச்சட்டை போட்டுக் கொண்டது. நண்பர்களும் உறவினர்களும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய, பிறந்த நாள் கேக்கை வெட்டியது. எல்லோரும் 'ஹேப்பி பர்த்டே டு யூ' பாடி மகிழ்ந்தனர். நண்பர்களும் உறவினர்களும் பரிசளித்தனர். பிறகு எல்லோரும் விருந்தை ஒரு கை பார்க்க சாப்பாடு மேஜையில் அமர்ந்தனர்.

தட்டில் வைக்கப்பட்டிருந்த ரவா கேசரியையும், பூரி மசாலையும் பார்த்ததும் புள்ளிமான்குட்டி பூனையைக் கண்ட எலியைப் போல் பயந்து நடுங்கியது.

விருந்துச் சாப்பாட்டை ஒரு கை பார்க்க ஆசையோடு அமர்ந்த அத்தனை பேரும் திகைப்புடன் புள்ளிமான் குட்டியைப் பார்த்தனர்.

"எனக்கு இந்த ரவாகேசரியும், பூரியும் வேண்டாம். நான் தின்னமாட்டேன்" என்று அழுதது புள்ளிமான் குட்டி.


"ஏன் கண்ணே திங்க மாட்டே? உனக்கு ரொம்பப் பிடிக்குமேன்னுதானே அம்மா படாதபாடு பட்டு இதையெல்லாம் பண்ணியிருக்கா? பிறந்த நாளும் அதுவுமா, இப்படி இதெல்லாம் வேண்டாம்னு அடம் புடிச்சு அழுதா, காலையில் இருந்து காத்துக் கொண்டிருக்கும் விருந்தாளிகளும் நண்பர்களும் எப்படி விருந்தை மகிழ்ச்சியாகச் சாப்பிடுவாங்க? மனிதத்தனமா, பண்பாடு இல்லாம நடக்காதே கண்ணு" என்று அப்பா புள்ளிமான் அறிவுரை கூறியது.

"இல்லை அப்பா. தயவு பண்ணி என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க. பூரியையும், கேசரியையும் தவிர மற்றதையெல்லாம் சாப்பிடுகிறேன்" என்றது குட்டி.

"ஏன் கண்ணு! கேசரியும் பூரியும் உனக்குப் பிடிக்கவே பிடிக்காதா?" என்று அன்புடன் கேட்டது ஒரு முயல்.

"இல்லை முயலண்ணே. கேசரியும் பூரியும் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். போன மாதம், அம்மா இதைப் பண்ணினாங்க. நானும் விரும்பிச் சாப்பிட்டேன். அன்றிரவே, கடுமையான வயிற்று வலி-வாந்தி-மயக்கம் எல்லாம் ஏற்பட்டுது. ஒரு வாரம் படாத பாடு பட்டேன். நம்ம கரடி டாக்டரையாதான் மருந்து கொடுத்துக் குணப்படுத்தினார். 'பூரியையும் கேசரியையும் கலப்பட எண்ணெய், நெய்யை வைத்துப் பண்ணிடுறாங்க. அதுனால, இனிமே எண்ணெய் நெய் கலந்த தின்பண்டங்களைச் சாப்பிடும் போது, கலப்படமில்லாத நெய் எண்ணெயில் பண்ணினதான்னு உறுதியாத் தெரிஞ்சுக்கிட்டு சாப்பிடுன்னு கரடி டாக்டர் ஐயா சொன்னார்."

கொஞ்சம் நிறுத்திய புள்ளிமான் குட்டி



மறுபடி தொடர்ந்தது. "அன்றைக்கு நான் சாப்பிட்டு அவதிப்பட்டவை எல்லாம், கலப்படத்திற்குப் பேர் போன இந்த கஜ ராஜன் மளிகைக் கடையில் வாங்கியவை தான். அம்மா இன்று செய்திருப்பவை கூட அதே கடையில் வாங்கியவைதான். அதனால்தான் பயப்படுகிறேன். வேண் டாம் என்கிறேன். பதினைந்து நாட்கள் நான்பட்ட துன்பம் எனக்குத்தானே தெரி யும்."

"இவ்வளவுதானே? இதெல்லாம் கஜ ராஜன் மளிகைக் கடையில் வாங்கியவை இல்லே கண்ணு. நம் குரங்கார்கிட்டே சொல்லி பக்கத்துக் காட்டில் உள்ள மளிகைக்கடையில் இருந்து வாங்கிக் கொண்டு வந்தவை. கலப்படம் இல்லா தவை. தைரியமாகச் சாப்பிடலாம். உடம் புக்கு ஒன்றும் பண்ணாது" என்று தேற்றி யது அப்பா புள்ளிமான்.

இந்த உறுதிமொழியைக் கொடுத்த பிறகுதான், புள்ளிமான்குட்டி சாப்பிட ஆரம்பித்தது. மற்ற விருந்தினர்களும் மகிழ்ச்சியோடு சாப்பிட ஆரம்பித்தனர்.

ஆனால், விருந்து சாப்பிட்ட எல்லோ ருமே அடுத்த நாள் காலையில் கரடி டாக் டர் வீட்டுக்குப் போகும்படி இருந்தது! எல்லோருக்கும் கடுமையான வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு, வாந்தி! புள்ளிமான் குட்டி படுத்த படுக்கையாகிவிட்டது!

"நான்தான் போக சோம்பப்பட்டு இங் கேயே உள்ள கஜராஜன் மளிகைக்கடையி லேயே வாங்கி, பக்கத்துக்காட்டில் வாங்கி னதா உங்ககிட்டே புளுகி விட்டேன். இந்த அளவுக்குக் கலப்படம் இருக்கும்னு நான் எதிர்பார்க்கவே இல்லே. என்னை மன்னிச்சிடுங்க" என்று அழுது கண்ணீர் விட்டார் குரங்கார்.

"எண்ணெயில் கலப்படம். நெய்யில் கலப்படம். மைதூளில் கலப்படம். மிளகு, கடுகு, மஞ்சள் பொடி, சர்க்கரை, காப்பிப் பொடி என்று கஜராஜன் மளிகைக் கடையில் கலப்படம் செய்யப்படாத பொருளே இல்லை. காலாவதியான பிஸ் கட்டுகளைக்கூட விற்று விடுகிறார். இவை களை உபயோகிக்கும் காட்டு விலங்கு களின் உடல் நலம் பெருமளவுக்கு பாதிக் கப்படுகிறது" என்றது அப்பா மான்.

"இந்தக் காட்டில் வேறு மளிகைக் கடையே கிடையாதா அப்பா?" என்று



வயிற்று வலிக்கு இடையேயே கேட்டது புள்ளிமான்குட்டி.

"இல்லையே கண்ணு. இரண்டொ ருத்தர் புதுசா கடை வைச்சாங்க. ஆனா, அவைகளை வளரவிடாமல் பண்ணி விட் டார் கஜராஜன் மளிகைக் கடை முதலாளி யானையார். அதுனால அவர் கடையில் தான் எல்லோரும் வாங்கும்படி இருக்கு."

"சிங்கராஜாகிட்ட சொல்லக் கூடாதா? அவர்தான் தங்கமான சிங்கராஜான்னு எல்லோரும் அழகாகப் புகழ்வீங்களே?"

"உண்மைதாம்மா. நம்ம சிங்க ராஜா, தங்கமான சிங்கராஜாதான். காட்டு விலங்கு களின் நலனில் தனியான ஈடுபாடு கொண் டவர். இரக்க மனதுடையவர். நாங்கள் பல முறை சிங்கராஜாவிடம் கூட தனித்தனி யாகவும், ஒன்றாகவும் போய் முறையிட் டிருந்தோம். அவரும் நடவடிக்கை எடுத் தார். ஆனால் யாராலும் கஜராஜனை அசைக்க முடியவில்லை."

"ஏம்ப்பா அப்படி!"

"நாம் போய் புகார் பண்ணினதும், சிங்க ராஜா என்ன பண்ணுகிறார் தெரியுமா? அவரது பியூன் குரங்கை அழைத்து,



அதனிடம் காசு கொடுத்து உடனே கஜராஜன் மளிகைக் கடையில் மளிகை வாங்கிவர அனுப்புகிறார். அவை வந்ததும் எங்கள் எதிரிலேயே உடனே சமையல்காரரிடம் கொடுத்து சமைக்கச் சொல்லி, தானே தின்று பார்க்கிறார். நமக்கும் தருகிறார்."

"அப்போ கஜராஜன் சிக்கிக் கொண்டிருக்க வேண்டுமே?"

"அதுதான் இல்லே! பியூன் குரங்கு, சிங்கராஜாவின் பியூன் என்பது கஜராஜனுக்கு நன்றாகத் தெரியும். அதனால், பியூன் குரங்கு வந்து கேட்டதும், கஜராஜன் கலப்படமே இல்லாத நல்ல சாமான்களாகப் பார்த்து, தானே எடுத்து அனுப்பிவிடுகிறார். அதோடு, கஜராஜனும் பியூன் குரங்கும் ஒன்றாக சர்க்கஸில் இருந்த நண்பர்களாம்."

"அப்படியா! அநியாயமாக இருக்கே! சிங்கராஜாவையே ஏமாற்றி விடுகிறாரா கஜராஜன்! அமைச்சர் புலியாரிடம் முறையிடலாமாப்பா?"

"அதற்கும் பலனில்லை கண்ணு. அவருக்கும் இப்படியே நல்ல பொருள்களைக் கொடுத்து ஏமாற்றி விடுகிறார். கடைசியில், தரும நியாயம் தவறாத கஜராஜன் மேல், இப்படி அநியாயமாகப் புகார் பண்ணுகிறீர்களே என்று எங்களிடம் சிங்கராஜா சீறுகிறார்."

"இந்தக் கொடுமைக்கு உடனடியாக ஏதாவது வழி கண்டுபிடிக்கணும்! இதே நிலை நீடித்தால், காட்டு விலங்குகள் அழிந்து, காடே காலியாகிவிடும்."

"நரியா ரின் பையன் என்னுடன்தான் படிக்கிறான். அவன் மூலமாக நரியாரைச் சந்தித்து முறையிடுகிறேன். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். அது நரியாருக்கு நன்கு தெரியும்" என்றது புள்ளிமான் குட்டி.

புள்ளிமான்குட்டி செய்த முறையீட்டை, கண்களை மூடிக் கொண்டு கவனமாகக் கேட்டார் நரியார். அருகே, புள்ளிமான் குட்டியின் நண்பன் நரிக்குட்டி.

"நான் ஏதாவது திட்டம் போட்டால் எல்லா மிருகங்களும் பறவைகளும் அதற்கு ஒத்துழைக்குமா?"

ஈற்று வாக்கியக் கதைப் போட்டி முடிவு

எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே இந்தப் போட்டியில் வாசகர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான கதைகள் ஏற்கெனவே கோகுலத்திலும் மற்ற பத்திரிகைகளிலும் பல முறை வெளிவந்த கதைகள் தான். எனவே, தேர்வு செய்வது பெரிய பிரச்னையாகத்தான் இருந்தது. ஐந்து கதைகள் ஒவ்வொன்றும் ரூபாய் முப்பது பரிசு பெறுகின்றன. இவைகளை எழுதியவர்கள் :

1. என். கணேஷ்குமார், மயிலாடுதுறை
2. சு. கண்ணகி, மிட்டூர்
3. எஸ். சிந்துஜா, தஞ்சை - 4
4. டி. சண்முகராஜன், மதுரை - 19
5. மு. சுகந்தி, தூத்துக்குடி - 2

பரிசு பெற்ற முதல் கதை இந்த இதழில் வெளியாகிறது. மற்றவை அடுத்த இதழில் வெளிவரும். பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

"கண்டிப்பாக. கஜராஜனின் கலப்படத்தால், எல்லோருமே ஏதாவது ஒரு வகையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களே" என்றது புள்ளிமான்குட்டி.

"சரி, குயிலையும் மயிலையும் என்னை வந்து சந்திக்கச் சொல்," என்று நம்பிக்கை அளித்தார் நரியார்.

"குயில்பாடும், மயில்ஆடும் கேட்டிருக்கிறேன்; பார்த்திருக்கிறேன். ஆனால் குயிலின் பாட்டுக்கு மயில் ஆடுகிறதா? உடனே அந்த அதிசயத்தைக் காண வேண்டும். என் குடும்பத்தாருடன் வருகிறேன். பிக்னிக் மாதிரியே இருக்கட்டும்" என்ற நரியாரிடம் வாக்களித்தார் சிங்கராஜா.

"அங்கேயே பகல் விருந்துக்கும் ஏற்பாடு பண்ணியிருக்கேன்" என்று குழைந்தார் நரியார். அதற்கு ராஜா தலையசைத்தார்.

"வாங்கிய மளிகை சாமான் எல்லாவற்றிலும் கஜராஜன் மளிகை முத்திரை இருக்கா?" என்று உறுதி செய்து கொள்ளக் கேட்டார் நரியார்.

"இருக்கு, மினரல் வாட்டர் பாட்டில், நல்லெண்ணெய் பாட்டில்ல கூட சீல் இருக்கு. எல்லாமே இன்று வாங்கினது தான். கடையில் கூட வைத்திருக்கிறேன்" என்றது அப்பா புள்ளிமான்.

"சிங்கராஜாவுக்கு விருந்தளிக்க என் பதை கஜராஜனிடம் சொல்லவில்லையே?" என்று மறுபடி கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டார் நரியார்.

ரவா கேசரியையும், பூரிமசாலையும் வெளுத்துக் கட்டினர் சிங்க ராஜ குடும்பத்தினர். சாப்பிட்டு அரைமணி நேரம் கூட ஆகவில்லை. சிங்கராஜா வயிற்று வலியால் துடித்தார். ராணி, இளவரசன் எல்லோருக்கும் அதேகதிதான். அதற்குப் பிறகு யாருமே குயிலின் இசையையும், மயிலின் நடனத்தையும் ரசிக்கும் நிலையில் இல்லை. டாக்டர் கரடியாருக்கு ஆள் பறந்தது.

"சாப்பிட்ட உணவில் கலப்படம்" என்று மருந்து கொடுத்தார் டாக்டர்.

"இருக்கவே இருக்காது டாக்டர். நடப்பது தர்ம நியாயத்தைக் காக்க நரசிம்ம அவதாரம் எடுத்த சிங்க ராஜ பரம்பரையின் ஆட்சி. இங்கே கலப்படத்திற்கு இடமே இல்லை. அதெல்லாம் மனிதர்கள் ஆட்சி செய்யும் நாட்டில்தான். உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்களுக்கு இங்கே என்ன தண்டனை தெரியுமா? தினமும் கசையடியோடு அவர்கள் விற்ற கலப்படப் பொருள்களையே ஒரு மாதம் தின்ன வேண்டும்" என்று கர்ஜித் தார் சிங்கராஜா.

"மன்னிக்க வேண்டும் சிங்கராஜா. தினமும் ஐம்பது மிருகங்கள் பறவைகளுக்காவது, கலப்பட உணவு பாதிப்புக்காக நான் சிகிச்சை அளித்து வருகிறேன். யானையாரின் கஜராஜன் மளிகைக் கடையில் விற்பவை எல்லாமே கலப்படப் பொருள்களே," என்றார் டாக்டர் கரடியார்.

"எனக்கும் பலமுறை புகார்கள் வந்தன. பலமுறை திடீர் சோதனை நடத்தி நானே சாப்பிட்டுப் பார்த்தேனே! புகார்களில் உண்மை இல்லை என்பது உறுதி செய்யப் பட்டதே?"

நரியார் விளக்கினார். மற்ற விலங்குகளும் சேர்ந்து கொண்டன. பபூன் குரங்கார் உடனே வரவழைக்கப்பட்டார். வேறு வழியின்றி அவரும் உண்மையை ஒப்புக் கொண்டார்.

இப்பொழுது யானையாருக்கு கலப்படக் குற்றத்திற்கு தினமும் தோப்புக்கரணம் போடும் தண்டனை! அதோடு, அவர் விற்ற கலப்படப் பொருள்களால் செய்த உணவே தரப்படுகிறது. அவர் கூட இருப்பது யார் தெரியுமா? பபூன் குரங்குதான்!

அம்மாவா கருமி!



வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்த ஜெயந்தியிடம் அம்மா கேட்டாள்.

"ஜெயந்தி! ஞாயிற்றுக் கிழமை உன் பிறந்த நாளாச்சே. நண்பர்கள் எல்லாரையும் கூப்பிட்டிருக்கே இல்லே?"

"ஓ... யாரையும் விடலே மம்மி."

''வழக்கம் போல இந்தத் தடவை ஸ்வீட், காரம், கூல்டிரிங்ஸ் இல்லே. அதற்குப் பதிலா ராத்திரி எல்லோருக்கும் ஒரு சின்ன விருந்து."

''ஹாய்... நிஜமாவா மம்மி?"

''ஆமாம், அப்பா கூட சரின்னுட்டார்."

ஜெயந்தியின் உள்ளத்தில் மகிழ்ச்சி மலர்கள் சிரித்தன.

ஞாயிற்றுக் கிழமை. இரவு எட்டு மணி. ஜெயந்தி வீட்டுக் கூடம் நிரம்பி வழிந்தது. பெரும்பாலும் சிறுவர்கள்.

கேக் வெட்டி தனது பனிரெண்டாவது பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடி பரிசுகளையும் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டாள் ஜெயந்தி.

அன்று பௌர்ணமி. நிலவொளியில் மேல் மாடியில்தான் விருந்து காத்திருந்தது.

பள்ளித் தோழிகள், அக்கம் பக்கத்துச் சிறுவர்கள் என்று கிட்டத்தட்ட நாற்பது பேர் சாப்பிட அமர்ந்திருந்தனர். மத்தியில் ஜெயந்தி.

சமையற்காரர் பரிமாற ஆயத்தமானார். வெஜிடபிள் பிரியாணி, கல்கண்டு சாதம், தேங்காய் சாதம், தயிர் சாதம், உருளைக்கிழங்கு பொரியல், அப்பளம், வடை என்று சாப்பாட்டு அயிட்டங்கள் ஒன்றை ஒன்று மிஞ்சும்படி இருந்தன.

மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த அம்மா சமையற்காரரிடம் கூறினான்.

"எல்லாம் சின்னவங்க. நிறைய அள்ளி அள்ளிப் போட்டா சாப்பிட முடியாம எறிஞ்சுடுவாங்க. கவனமா, பார்த்துப் பரிமாறுங்கோ"

சமையற்காரரிடம் கூறிய கையோடு, அம்மா எல்லாரையும் பார்த்து, "இது உங்க வீடு மாதிரி. தயக்கம் இல்லாம சாப்பிடுங்க. யாருக்கு எது பிடிக்கிறதோ கேட்டு வாங்கிச் சாப்பிடுங்க வேண்டியது இருக்கு. கூச்சப் படாம பிடிச்சதைக் கேளுங்க'' என்றாள்.

ஜெயந்தியின் முகம் வாடியது.

பரிமாறும்போதே அம்மா ஏன் இப்படி நாகரிகம் இல்லாம சொல்றாங்க! இவங்களா கேட்கணும்னு காத்திருக்காம, எல்லோருக்குமே நிறையத்தான் போடட்டுமே? வயிறு ரொம்ப சாப்பிட்டுட்டு, அவங்களா மீதிய எறிஞ்சா எறிஞ்சுட்டுப் போறாங்க. இதனால என்ன பெரிய நஷ்டம்? சே.. இந்த அம்மா சுத்தக் கருமி" என்று மனதிற்குள் சிணுங்கினாள் ஜெயந்தி.

சாப்பிட வந்த சிறுவர் சிறுமியர் விருந்தை நன்கு சுவைத்து மகிழ்ச்சியோடு சாப்பிட்டனர். ஜெயந்தியிடம் வந்து விடைபெற்றுச் சென்றனர்.

த. ஜானகி

இத்தனை நேரம் கலகலவென்றிருந்த அந்த பங்களா இப்பொழுது நிசப்தமாக இருந்தது.

வேலைகளை எல்லாம் முடித்து விட்டு அலுப்புடன் படுக்க வந்தாள் அம்மா.

"உனக்கு மகிழ்ச்சிதானே கண்ணு?" என்று அம்மா கேட்ட போது ஜெயந்தி கடுப்புடன் திரும்பிக் கொண்டாள்.

"என்ன கோபம் ஜெயந்தி?" என்று இதமான குரலில் அன்புடன் கேட்டாள் அம்மா.

"போங்க அம்மா. நீங்க சுத்த மோசம். நான் நண்பர்கள் வீட்டுக்குப் போனா டிபனோ, சாப்பாடோ தரும் போது அவங்க யாருமே ஒண்ணுமே சொல்ல மாட்டாங்க. போதும் போதும்னு சொன்னாக்கூட நிறைய நிறைய வைப்பாங்க. எத்தனையோ முறை என்னால சாப்பிட முடியாம எறிஞ்சிருக்கேன். அப்படி, விழுந்து விழுந்து உபசாரம் பண்ணுவாங்க. நீங்க என்னடான்னா சமையற்காரருக்கு கொஞ்சமா போடுங்கன்னு எப்படிச் சொன்னீங்க? ஆனாலும் நீங்க சுத்தக் கருமி அம்மா" என்று பட்டாசு வெடிப்பது போல் வெடித்து விட்டு திரும்பிப் படுத்துக் கொண்டாள் ஜெயந்தி. மேற்கொண்டு பேசப் பிடிக்காதவள் போல போர்வையால் முகத்தை வேறு மூடிக் கொண்டாள்.

யோசனையோடு அவளைப் பார்த்தாள் அம்மா.


ஒரு மாதம் ஓடி மறைந்தது. அன்று ஜெயந்தியின் அப்பாவுக்கு தூரத்து உறவினர் வீட்டில் கல்யாணம். பெரிய பணக்காரர் வீட்டுத் திருமணம்.

வாசலில் நிறையக் கார். தடபுடலான விருந்து. ஜெயந்தியால் சாப்பிடக் கூட முடியவில்லை. மீதியை அப்படியே வைத்து விட்டாள்.

சாப்பாடு முடிந்தது. அவசர வேலை இருக்கிறது என்று அப்பா முதலில் கிளம்பி விட, அம்மாவும் ஜெயந்தியும் கல்யாண வீட்டாரிடம் விடைபெற்றுக் கொண்டு திருமண மண்டபத்துக்கு எதிரே இருந்த பஸ் ஸ்டாண்டுக்கு வந்தனர்.

"ஜெயந்தி! அதோ பார்" என்றாள் அம்மா.

தாய் சுட்டிய இடத்தைப் பார்த்தாள் அவன்.



கல்யாண விருந்தில் சாப்பிட்ட எச்சில் இலைகளால் நிரம்பி வழியும் குப்பைத் தொட்டி. அதைச் சுற்றி நாய்கள் குரைத்துக் கொண்டே இலைகளைக் கௌவி வெளியே இழுத்துக் கொண்டிருந்தன. சில சிறுவர்களும் பெரியவர்களும் நாய்களை விரட்டிக் கொண்டே எச்சில் இலைகளை வெளியே எடுத்தனர். கல்யாண விருந்தில் சாப்பிட்டது போக இலையில் மிச்சம் வைக்கப்பட்டிருந்த சாப்பாடு, காய்கறி, லட்டு, வடை அப்பளம் போன்றவைகளை அவர்கள் எடுத்துத் தின்றனர். அப்படியும் மிஞ்சியதைத் தங்களிடம் இருந்த அலுமினியப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தனர். இதற்குள் அடுத்த பந்தி எச்சில் இலைகளைக் கூடைகளில் அள்ளிக் கொண்டு வந்து கொட்டினர்.

சில சந்தர்ப்பங்களில் ஜெயந்தி இக் காட்சியை வேறு இடங்களில் கவனித்திருக்கிறாள். ஆனால், இவ்வளவு அருகில்... இவ்வளவு நிதானமாக இக் காட்சியைப் பார்ப்பது இதுவே முதல் முறை.


"என்ன யோசிக்கிறே ஜெயந்தி ?"

"இவங்களைப் பார்த்தா பாவமாகவும் இருக்கு. அருவருப்பாவும் இருக்கு அம்மா."

"இவங்க இந்த மாதிரி எச்சில் இலைகளைச் சாப்பிடுவதற்கு நாம்தான் முக்கிய காரணம்."

"எப்படி அம்மா?"

"சிலர் தேவைக்கு அதிகமாகப் போட்டுக் கொண்டு மீதியை எறியறாங்க. நம்ப நாட்டிலே கல்யாணத்திலேயிருந்து



காது குத்து வரை எத்தனையோ விசேஷங்களுக்கு விருந்து வைக்கிறோம். எல்லா விருந்துகளிலும் இந்த மாதிரி சாப்பாட்டை எறியறாங்க. அதனாலதான் இந்த மாதிரி எச்சிலைத் திங்கற ஒரு கும்பலை நாமே உருவாக்கறோம்."

"இந்த மாதிரி மத்தவங்க எச்சிலை சாப்பிடறது பாவம் இல்லே?"

"பாவம் மட்டும் இல்லே. ஆரோக்கியத்துக்கும் கெடுதல். அது மாத்திரமில்லே. நம்ப நாட்டோட உணவுப் பற்றாக்குறைக்கு இந்த மாதிரி உணவு வகைகளை விருந்துகளில் வீணடிக்கிறதும் கூட ஒரு காரணம். கவனமா பரிமாறினால் போட்டது போக மிச்சம் இருப்பதை எத்தனையோ பேர் அழகாகச் சாப்பிடலாம்."

அம்மா நிறுத்தினாள். ஜெயந்திக்கு மனத்தில் ஏதோ உறுத்தல்.

"பிறந்த நாள் விருந்தில் போது பார்த்துப் பார்த்து வீணாக்காம பரிமாறும்படி சமையற்காரரிடம் சொன்னதை, நீ தப்பா புரிஞ்சுக்கிட்டே. அப்படி நான் சொல்லலேன்னா அன்னிக்கு நம்ம வீட்டு வாசல்லயும் இப்படித்தான் எல்லாம் வீணாகிக் கிடக்கும் காட்சி நடந்திருக்கும். உனக்குத் தெரியுமா ஜெயந்தி? அன்னிக்கு ராத்திரி, நம்ம வீட்டுல மிஞ்சிய விருந்தை அப்படியே குப்பத்தில் உள்ள ஏழை மக்களுக்குப் போடும்படி நம்ம வீட்டு வேலைக்காரியிடம் தந்து விட்டேன். அதோட அன்று காலை, உன் பெயரில் அனாதைக் குழந்தைகள், எண்பது பேருக்கு நல்ல விருந்துச் சாப்பாடு போட வைச்சேம்மா."

"இந்த அம்மாவையா சுத்தக் கருமின்னோம்"? என்று தலைகுனிந்தாள் ஜெயந்தி.



கை, இடுப்பில் ஊசி போடுவது ஏன்?

● வே. செல்வகுமார், கல்லூரானி.

? பஸ்ஸில் பயணம் செய்யும் போது வாந்தி வரக் காரணம் என்ன? அதைத் தவிர்க்கும் முறைகள்தான் என்ன?

! நம் காதுகளில் எலும்பாலான உட்செவி (Bony Labyrinth) உள்ளதை நீ படித்திருப்பாயே! அதில் 'அரைவட்டக் குழாய்கள்' (Semi-circular canals) இருப்பதும் உனக்குத் தெரிந்திருக்கும். இவற்றில் உள்ள நிண நீர்த் திரவம்தான் நம் உடலை சமநிலைப்படுத்திக் கொண்டிருக்கிறது. நாம் பஸ்ஸில் பயணம் செய்யும் போது அதன் வேகத்திற்கும், அசைவுகளுக்கும் ஏற்ற வகையில் நம் உடலும் அசைய நேரிடுகிறது. அப்போது அசைவு, மூளையில் உள்ள வாந்தி நரம்புகளைத் தூண்டுகிறது. இதனால்தான் பயணத்தின் போது நமக்கு வாந்தி ஏற்படுகிறது என்றாலும், எல்லோருக்கும் வாந்தி' ஏற்படுவதில்லை. சிலருக்கு மட்டும் அந்த நிணநீர்த்திரவம் சற்று அதிக அளவில் அசையும் தன்மை கொண்டிருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே 'பயண வாந்தி வரும். இதனைத் தவிர்க்க 'அவோமின்' என்ற மாத்திரையை, பயணம் செய்வதற்கு அரை மணி நேரம் முன்பாகவே சாப்பிட்டுக் கொண்டால், பலன் கிடைக்கும். அத்தோடு, பஸ்ஸில் நடுமையத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்து கொண்டால், அசைவுகள் அதிகம் இருக்காது. இதுவும் பயண வாந்தியை சிறிதளவுக்குக் குறைக்க உதவும்.

● லட்சுமி நாராயணன், திருச்சி - 3.


?என் அம்மாவுக்குத் திடீர், திடீரென்று கை, கால்கள் மரத்துப் போகின்றன. கால்கள் அரிக்கின்றன. கன்னத்தில், கழுத்தில் அடிக்கடி 'நோய்த் தொற்றுகள்' (Infections) ஏற்படுகின்றன. இது எதனால், டாக்டர்?

! கேள்வியில் தெரிவித்திருக்கும் அறிகுறிகளைப் பார்த்தால், உன் அம்மாவுக்குச் 'சர்க்கரை நோய்' இருக்கலாம் எனச் சந்தேகிக்கிறேன். உடனடியாக உன் அம்மாவை மருத்துவரிடம் அழைத்துச் சென்று, நோய் நிர்ணயம் செய்து, தகுந்த சிகிச்சைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இதுவே என் ஆலோசனை.

● ஆர். காயத்ரி, சென்னை - 95.

? தண்ணீர் மாறுபடும் போது எனக்கு 'மார்ச்சளி பிடித்துக் கொள்கிறது. எனக்கு டாக்டரிடம் செல்ல விருப்ப





கேட்கட்டுமா டாக்டர்?

பில்லை. வீட்டிலேயே செய்து கொள்ளக் கூடிய எளிய வழி முறைகளைக் கூறுங்கள்.

! ரொம்ப சிம்பிள்! தண்ணீரைக் கொதிக்க வைத்து, பின்பு ஆற வைத்துக் குடித்தால் போதும். தண்ணீர் மாறுபாடு காரணமாக உண்டாகும் மார்ச்சளியைத் தவிர்த்து விடலாம்.

● த. குணசங்கரன், நன்செய் இடையார்.

? எத்தனை மணி நேரம் டி.வி. பார்த்தால் நல்லது?

! தொடர்ந்து ஒரு மணி நேரம் டி.வி. பார்க்கலாம். பிறகு பத்து நிமிடங்களுக்கு அவசியம் ஓய்வு தேவை. இப்படி ஒரு நாளில் மூன்று மணி நேரம் டி.வி. பார்க்கலாம். இது எல்லோருக்கும் பொதுவான ஆலோசனை. பள்ளிக் குழந்தைகளுக்கு தினமும் அரைமணி நேரம் போதும்! விடுமுறை தினங்களில் வேண்டுமானால் மூன்று மணி நேரம் டிவிக்கு ஒதுக்கலாம். அதற்மேல் டி.வியில் கண் பதித்தால் பாடங்கள் பாதிக்கும். பார்வைக் கோளாறுகள் வரும். கண்களுக்குக் கண்ணாடி போட வேண்டியதும் வரும். பரவாயில்லையா?

நூ எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? டாக்டர்கள் ஊசி போடும் போது சில ஊசிகளைக் கையிலும், சில ஊசிகளை இடுப்பிலும் போடுகிறார்களே, ஏன்? எல்லா ஊசிகளையும் கையிலேயே போடக் கூடாதா?

! இது டாக்டர் போடும் ஊசி மருந்தின் அளவையும், வகையையும் பொருத்தது. சில மருந்துகள் கைத்தசை வழியாக ரத்தத்தில் கலந்து பயன் தரக் கூடியவை. சில மருந்துகளை இடுப்புத்தசையில் மிக ஆழத்தில் செலுத்தினால்தான் அவை ரத்தத்தில் கலக்கும். இல்லாவிட்டால், மருந்து உள்ளே செல்லாமல், கட்டி சேர்ந்து வீங்கிக் கொள்ளும். இதனைத் தவிர்க்கவே டாக்டர்கள் அவ்வாறு செய்கிறார்கள்.

● க. சங்கரநாராயணன், பொட்டலூரணி.

? 'உளுத்தம்பருப்பு சாப்பிட்டால் காது கேட்காது' என்று என் பாட்டி கூறுகிறார்கள். இது உண்மையா, டாக்டர்?

! இல்லை, தம்பி! உளுந்தம் பருப்பில் நிறைய புரதச்சத்து உள்ளது. இது உடல்வளர்ச்சிக்கு மிகவும் உகந்தது. இதைத் தயங்காமல் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். தவறில்லை. இதனால் காது கேட்காது என்று கூறுவது அறியாமையின் விளைவு. இதை நீ காதில் போட்டுக் கொள்ளாதே!

● எம். முகம்மது நூருல்லாஹ், அறங்கக்குடி.

? முன் கழுத்துக் கழலை நோய் எதனால் உண்டாகிறது?


! 'அயோடின்' என்ற தாதுச்சத்து நம் உடம்பில் குறையும் போது 'முன் கழுத்துக் கழலை'' நோய் உண்டாகிறது.

● க. லட்சுமணன், வெள்ளூர்.


? மனித மூளையின் எடை எவ்வளவு? அது எப்படி இருக்கும்?

! சராசரி வயதுள்ள ஒரு மனிதனின் மூளை 1400 கிராம் எடையிருக்கும். இது வெளிப் பக்கமாகப் பார்ப்பதற்கு ஒரு கேள்விக்குறி (?) போன்ற அமைப்பில் இருக்கும். உள் அமைப்பை எழுத வேண்டுமென்றால் இந்த இடம் போதாது. தனிக்கட்டுரையே எழுத வேண்டும்.


டாக்டர் கு. கணேசன்




என்ன ஒற்றுமை தனித்திருப்பது





ரது? - போட்டி












இங்கே கவனமாகப் பாருங்கள். ஏதேதோ இருக்கின்றன. மொத்தம் பதினொன்று. இவைகளில், பத்து மட்டும் ஒற்றுமை உள்ளவை. என்ன ஒற்றுமை என்பதைக் கண்டுபிடித்து பத்தையும் எழுதுங்கள். ஒன்று மட்டும் தனித்து நிற்கும். அது என்ன என்பதையும் கண்டுபிடித்து எழுதுங்கள். இது மிக மிக எளிதான போட்டி. மலைத்துப் போகாதீர்கள். கொஞ்சம் அமைதியாக உட்கார்ந்து சிந்திக்க வேண்டும். அவ்வளவுதான். உங்களால் முடியாததும் உண்டா என்ன? கண்டிப்பாக முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்ப வேண்டும். தபால் கார்டில் எழுதினால் போதுமானது. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்காது. வெளிநாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால், குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி : 31.3.1996

ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097.

* ''தையற்சிட்டுக்கு நீண்ட வால் உண்டா?'' புதுமையான அறிவியல் செய்திகளை எங்களுக்குத் தந்தது. உயிரியல் துறைக்கு கௌரவ ஆசிரியர் ஆற்றிவரும் தொண்டு பெருமைக்கு உரியது. ஆமாம், இந்த உயிரியல் கதைகளை, வண்ணப் பக்கங்களில் வெளியிட்டால் என்ன? — சின்ன தாராபுரம் மா. குணவீர பாண்டியன், திருவரங்கம் வா. கோதை, நாகர்கோவில் ஜான் பாஸ்கரன், ராணிப்பேட்டை வி. சம்சுதீன், சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், பவித்ரமாணிக்கம் வீ. தியாகராஜன், டி. முருகேசன், டி. மனோகரன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, ஆரணி ப. ஞானமூர்த்தி, பெரம்பலூர் பி. மீரா நண்பர்கள், கபிஸ்தலம் ரா. ரவிவர்மன், மேல்பாதி எஸ். நாகராஜன், செம்பனார்கோவில் ஜெ. ஜம்மு.



என் படமும் கோகுலத்தில் வரும்!

* 'கமலம் போட்ட சபதம்' படக்கதை அருமை. நல்ல கதை. ஓவியங்கள் வித்தியாசமாக இருந்தன. — திருச்செந்தூர் சு. வீரராகவன், வேலூர் தூ. ஜெபசிங், கோவை மா. சுப்புராஜ், பவித்ரமாணிக்கம் டி. மனோகரன், விருத்தாசலம் வி. பிரபாகர், கருமத்தம்பட்டி ஆர். அனிதா இராஜப்பன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, ரா. ரவிவர்மன், ஆரணி ப. லூகிதா.

* 'ஏழுகடல் நீந்திய எட்டாம் வகுப்பு மாணவி', படமும் கட்டுரையும் என் போன்ற மாணவர்களுக்குப் புதிய எழுச்சியை ஊட்டின. வருங்காலத்தில் என் படமும் கோகுலத்தின் அட்டையில் வெளிவரும் சார்! — மாயூரம் பி.ராஜாபிரசன்னா, சென்னமங்கலம் தி. திருஞானம், சாத்தூர். வா. கன்னியப்பன், கருமத்தம்பட்டி ஆர். அனிதா, இரா. ஜாபேன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், பவித்ரமாணிக்கம் டி. கமலா, கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், பவித்ரமாணிக்கம் டி. முருகேசன், மேலப்பாதி என். ராஜலட்சுமி, ஆரணி. ப. ஞானமூர்த்தி, செம்பனார்கோவில் ஜெ. ஜம்மு.

* பென்சிலின் ஊசி போடும் முறையை மிகத் தெளிவாக டாக்டர் விளக்கியுள்ளார் — கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், குண்டூர் சு. மாணிக்கம், பவானி தா. வேலச்சாவரன்.

* எல்லாப் பெருமைகளும் நாடகம் அருமை சார். ரம்சானுக்கு நல்ல விருந்து — குளித்தலை மா. அப்துல்காதர், போச்சம்பள்ளி து. சிக்கந்தர், சிதம்பரம் வா. வித்யாசரண், ஆரணி. ப. ஞானமூர்த்தி.

* புவனா தேடிய புதையல் கதை சூப்பரா, படங்கள் சூப்பரா என்று திணற வைக்கிறது! — காட்டுமன்னார்குடி மா. எல்லம்மாள், தூவாக் குடி மோ. பரிமளம், பாளை தி. சிவராஜா, திருத்தணி கு. வல்லபசாமி, இராஜ் கவுண்டன்பாளையம் அழ. மாரிமுத்து, கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

* காட்டில் நடந்த கண்தான விழா' — ஒரு பேரியக்கம் நடத்திய அளவுக்கு சாதனை! ஆசிரியரை எத்தனை பாராட்டினாலும் தகும். பெயர் போவில்லையே! — புதுகை மா. ஜெயசீலன், காரை. தம்புசாமி, பாண்டி வி. மணிமொழி, நெல்லூர் தா. இராமநாராயணன், பவித்ரமாணிக்கம், தி. இளங்கோவன், பொய்யப்பாக்கம் கே. சஞ்சய் காந்தி.



ஐயாதான் முதல் ரேங்க்!

பொய்யாமணி எஸ். வரதசிகாமணி

திருத்திய விடைத்தாள்களுடன் ஆசிரியர் மணிமாறன் வகுப்பறைக்குள் நுழைந்தார் மாணவர்கள் எழுந்து நின்றனர்.

'பாபு இங்கே வா. விடைத்தாள்களைக் கொடு' என்றார் ஆசிரியர். பாபு மாணவர்களிடம் விடைத்தாள்களைக் கொடுத்தான்.

ஆசிரியர் மாணவர்களின் நிறை, குறைகளைச் சொல்லிக் கொண்டே வந்தார்.

"வேறு பள்ளியில் இருந்து வந்த மாணவன் கண்ணன், எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் வாங்கி இருக்கிறான். கண்ணனைப் பாராட்டுகிறேன்" என்றார் முடிவில்.

வழக்கமாக முதல் மதிப்பெண் வாங்கும் பாபு, கண்ணனைவிடக் குறைவாக வாங்கி இருந்தான்!

"பாபு, இன்னும் தீவிர முயற்சி எடுத்தால் உன்னாலும் கண்டிப்பாக முதல் மதிப்பெண் பெற முடியும். மற்றவர்களும் நன்றாக முயற்சி செய்து நம்பிக்கையுடன் படித்து நிறைய மதிப்பெண் பெற வேண்டும்."

மணி ஒலிக்க, ஆசிரியர் வெளியில் சென்றார்.

கண்ணன் எழுந்தான். இதற்காகவே காத்திருந்தவன் போல், "ஐயாதான் முதல் ரேங்க் வாங்குவேன் என்பது எனக்கு அப்போதே தெரியும்" என்றான் மிடுக்காக.

அதோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை.

"பாபுவுக்கு சரியான போட்டி இல்லாததாலேதான் இதுவரை அவன் முதல் ரேங்க் வாங்கி வந்திருக்கிறான்" என்று வகுப்பில் அனைவரும் கேட்குமாறு சத்தமாகச் சொன்னான் கண்ணன்.

தொடர்ந்து கண்ணன் சொன்னது எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

"இங்கு பெரிசா என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள்? எதுவும் சரியில்லை" என்ற போது மாணவர்கள் பலருக்கு கண்ணனின் ஆணவத்தனமான பேச்சு பிடிக்கவில்லை.

"தப்பு கண்ணா. ஆசிரியர்களைக் குறை சொல்லாதே. முதல் மதிப்பெண் நீ வாங்கி விட்டதால் இங்கு இருக்கிற ஆசிரியர்களின் போதனையைக் குறைவாக மதிப்பிடாதே" என்றான் ராஜேஷ்

துடிப்புடன்.

''என்னவோ, உன்னைக் குறை சொன்ன மாதிரி பாயறியே! அப்படின்னா, இந்த முறை பாபுவை முதல் மதிப்பெண் வாங்கச் சொல்லேன் பார்க்கலாம்?''

"என்ன பாபு சொல்றே?"

"சவால் வேண்டாம். முயற்சி செய்யறேன்."

"என்னிடம் பயப்படுகிறாய்!"

"இல்லை."

"அப்படியானால் என் சவாலை ஏற்றுக் கொள்."

''ஏற்றுக் கொள் பாபு'' என்றான் ராஜேஷ். மற்ற மாணவர்களும் கட்டாயப்படுத்தினர்.

மாதத் தேர்வு வந்தது. முடிந்தது. ஆசிரியர் விடைத்தாள்களுடன் வகுப்பறைக்குள் நுழைந்தார். பாபுவுக்கு முதல் ரேங்க் வராது என்பது தெரியும். அவன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அதனால் வீட்டில் வேலை. ஆனால் யார் முதல் ரேங்க் என்பது அறிவிக்கப்பட்டபோது எல்லோரும் அதிர்ச்சி அடைந்தனர்.

நேற்று வரை கடைசி ரேங்க் வாங்கி வந்த ராஜேஷ்தான் முதல் ரேங்க் வாங்கியிருந்தான்.

ஆசிரியர் ராஜேஷை அழைத்தார்.

''எப்படி உன்னால் இது முடிந்தது?''

"முயற்சி செய்தேன் சார்."

"அதுதான் எப்படி என்கிறேன். இது வரை கடை மாணாக்கனாக இருந்த நீ முதல் ரேங்க் பெற்றது எப்படி?''

அரையாண்டுத் தேர்வு முடிந்ததும் கண்ணன் - பாபு இடையே நடந்த போட்டி பற்றி மாணவர்கள் கூறினர்.

ஆசிரியர் வியப்புடன் ராஜேஷை நோக்க அவன் தொடர்ந்தான்.


"போன தேர்வில் முதல் ரேங்க் வாங்கிய ஆணவத்தில் கண்ணன் நம்ம பள்ளியில் ஆசிரியர்கள் சொல்லித் தருவது சரி



யில்லை. ஏற்கெனவே தான் படித்த பள்ளியே சிறந்தது என்றதுடன் தன்னுடைய சொந்த முயற்சியால்தான் முதல் மதிப்பெண் வாங்கினேன் என்றான். நம்ம பள்ளியையும் ஆசிரியர்கள் கற்பிப்பதையும் அவன் குறை கூறி அவமானப்படுத்தியது எனக்கு என்னவோ போல் இருந்தது. நம்ம பள்ளி ஆசிரியர்களின் சிறந்த கற்பிக்கும் திறனை ஏளனமாகப் பரிகசித்த அவனது ஆணவத்தை அடக்கி, நம் ஆசிரியர்களின் பெருமையைக் காக்க வேண்டும். அதற்காகவாவது நன்கு படிக்க முடிவெடுத்தேன். அன்றில் இருந்து இரவு படுக்கும் முன்னர், விடியற் காலை எழுந்தவுடன் "என்னால் முடியும். முதல் மாணவனாக வர முடியும். நன்றாகப் படிக்க முடியும்" என்று மனதிற்குள் சொல்லுவேன். புதிய தெம்பு வரும். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் படித்து எழுதிப் பார்த்து, மனப்பாடம் செய்து எனக்கு சந்தேகம் வரும்போது பாபுவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். வகுப்பிலும் நீங்கள் பாடம் நடத்தும்போது, கவனத்தைச் சிதறவிடாமல் கேட்பேன். மிகுந்த மனநிறைவுடன்தான் தேர்வு எழுதினேன். நன்றாக எழுதினேன் என்று தெரியும். ஆனால் இப்படி முதல் ரேங்க் எடுப்பேன் என்று நினைக்கலே. எல்லாம் உங்கள் ஆசியும், வழிகாட்டுதலும்தான் சார். இந்த வெற்றி 'என்னுடைய தல்ல. உங்களுடையது தான்."

தலைகவிழ்ந்து இருந்த கண்ணன் எழுந்து பேச ஆரம்பித்தான்.

"ராஜேஷ்... கடைசி மாணவனாக இருந்த நீயே வகுப்பின் முதல் மாணவனாக வந்திருப்பது, இங்குள்ள ஆசிரியர்களின் கற்பிக்கும் திறமைக்கு எடுத்துக் காட்டு. என் அகந்தை அழிந்தது. பாபு, என்னை மன்னிக்க வேண்டும். மற்ற மாணவர்களும் மன்னிக்க வேண்டும். எனது அறியாமையை நமது ஆசிரியர் அவர்களும் பொறுத்தருள வேண்டும்" என்றான் பணிவாக.





காந்தி இன்னும் இருக்கிறார், புலவர் அ. வெற்றிவேலன், பக். 196, ரூ 35/- கங்கை புத்தக நிலையம், தீனதயாளன் தெரு, சென்னை – 17.

உயிரோட்டமான அழகுநடைக்கு உரிமையாளரான ஆசிரியரின் மணியான சிறுகதைத் தொகுப்பு. எல்லாக் கதைகளும் புதுமையான கதைக்களனில் அமைக்கப்பட்டுள்ளன. தலைப்புக் கதையில் சத்திய வழி நிற்கும் ராமுவை, காப்பியடிக்க ஒத்துழைக்க மறுத்ததற்காக சந்திரன் பறக்கும் படையினரிடம் மாட்டி விடுகிறான். தனது அறிவுத்திறத்தால் ராமு குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டித் தப்பவைக்கும் தலைமை ஆசிரியர், உண்மைக் குற்றவாளியான சந்திரனைப் பிடித்துத் தண்டனை வாங்கித் தருகிறார். சந்திரன் தலைமை ஆசிரியரின் மகனே என்ற உண்மை கடைசியில் வெளிவருகிறது. கதை நெஞ்சில் நிலைக்கிறது. அருமையான நூல். நூலுக்கு மூன்று அமைச்சர்கள் அணிந்துரையும் வாழ்த்தும் வழங்கியிருக்கிறார்கள்! சிறுவர்க்கான நூலில் ஒரு படம் கூட இல்லையே என்பதை யாருமே உணரவில்லையே!

அறிவுச் சுடர், ஏ. அன்வர் பாட்சா, பக். 64, ரூ 10/- அல்ஃபலாஹ் பப்ளிகேஷன்ஸ், 88, மெயின் ரோடு, இட்டச்சேரி - 609 703.

இந்துமத தத்துவங்களுக்கும், நடைமுறைகளுக்கும் விளக்கமளிக்கப் பல நூல்கள் தமிழில் உள்ளன. அந்த அளவுக்கு இஸ்லாத்தைப் பற்றிய விளக்க நூலகள் தமிழில் இல்லை, என்பது பெரிய குறை. இந்தக் குறையை இந்தக் கையடக்க நூல் தீர்த்து வைக்கிறது. இஸ்லாத்தைப் பற்றி 501 வினாக்களை எழுப்பி, ஆசிரியரே அவைகளுக்கு விளக்கம் அளித்துள்ளார். திருக்குர்ஆன் எந்த மொழியில் உள்ளது? (விடை : அரபி) திருக்குர்ஆனின் மூலப் பிரதி எங்கு உள்ளது (விடை : ரஷ்யாவின் உஸ்பெக் மாநிலத்தில்) என்பது போன்ற முஸ்லீம் அல்லாதவர்களையும் ஈர்க்கக்கூடிய பல வினாக்கள் – விடைகள் உள்ளன. இஸ்லாத்தைப் பற்றி அறிய விரும்புவோருக்குப் பெரிதும் பயனளிக்கும் நூல்.

நல்ல தீர்ப்புக் கதைகள், அருணா நடராஜன், பக். 72 ரூ. 10/- வசந்தா பிரசுரம், 6, ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33.

பல்வகைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்ட பல அறிவாளிகளின் கதைகளைக் கொண்ட சிறுகதைத் தொகுப்பு இந்த நூல். எல்லாமே சுவையாக, மேலும் மேலும் படிக்கத் தூண்டுபவையாக உள்ளன. சிறுவர் கதைகள் என்பதற்காகவாவது சில படங்களைச் சேர்த்து, நூலுக்கு மேலும் மெருகூட்டியிருக்கலாம்.

நீதிநூற்கொத்து, சு. ந. சொக்கலிங்கம், பக். 206, ரூ. 35/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை – 17.


தமிழ் மொழியில் இல்லாதது எதுவுமே இல்லை என்று நாமே புகழ்ந்து கூறி, நாமே நமக்குப் பொன்னாடையும் பொற்கிழியும் அணித்துக் கொண்டிருப்பதில் எவ்விதப் பயனும் இல்லை. தமிழ் மொழியில் உள்ளவை என்னென்ன என்பதை ஆங்கிலத்தில் மற்றவர்களுக்கும் விளக்கிக் கூறினால்தான் நமது இலக்கியச் சிறப்பை மற்ற நாட்டவர்கள் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கும். இதுவே உலக நாட்டவர்களிடையே தமிழுக்குப் பெருமை சேர்க்கும் பெரும் தொண்டு. இந்தச் சிறப்பான தொண்டில் தனது முயற்சியை ஆசிரியர் தந்துள்ளார். இதில் அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கை, சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறி, குமரகுருபர சுவாமிகளின் நீதிநெறிவிளக்கம் ஆகிய மூன்றுக்கும் தமிழ் விளக்கமும், கூடவே தெளிவான ஆங்கில விளக்கமும் தரப்பட்டுள்ளன. ஆசிரியரின் பண்பட்ட தெளிவானது நடை நூலுக்குப் புகழ்சேர்க்கிறது. நல்ல முயற்சி. தமிழ் அறியாத குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் நன்கு பயன்படும் படைப்பு.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : கி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

RAKESH INTERNATIONAL

Distributors for Vadilal Ice Creams
gives a new sweet and creamy
offer for Birthday boys & girls
on their eve of Birthday
or any other Celebrations and
10% discount on any Ice cream
purchased above Rs. 200.

FEEL THE MIST IN VADILAL'S TASTE



RAKESH INTERNATIONAL

(Distributors Vadilal Icecream)
28, Lakshmanan Street,
Mahalingapuram, Madras - 600 034.

(This coupon is valid only with the above address and not with dealers)

GOKULAM (Tamil) March '96 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper is Sri Lanka

REWARD!



BRING 10 DIFFERENT WRAPPER STORIES AND THEIR WRAPPERS TO GET 3 MONOPACKS FREE

Big Babol

SOFT NON STICKY BUBBLE GUM

HURRY KIDS!

OFFER CLOSES 31st MARCH '96

- Look out for wrapper stories inside Big Babol monopacks only
- Collect the reward from your nearest dealer.
- Offer available in select cities

PERFETTI

McCann/PERFETTI/995 (R)